Regd. No. M. 4519 VASANTHAM May-1944



பக்ஷிராஜா பிலிம்ஸ்

ஜகதலப்ரதாபன்

டைரக்ஷன் :— ஸ்ரீராமுலு நாயுடு

நாராயணன் & கம்பெனி வெளியீடு

போன் 218 A

தந்தி "ராஜா"

அபூர்வ ஆபரணங்கள்!

வனப்புள்ள வைரங்கள்!!

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

கடைத்தெரு : கோயமுத்தூர்

—: தபால்பெட்டி 139 :—

வசந்தம் வாசகர்களே !

உங்களுக்கு எது தேவை?

சுடர் மிகுந்த வைரங்கள்
தங்க நகைகள்
வெள்ளி சாமான்கள்
எனமல் மோதிரங்கள்

GOLD & SILVER WARES
K.R. & SONS
(PHONE No 226) JEWELLERS, COIMBATORE.

முதன்மை ஸ்தானம்

வகிப்பது

சிறந்த
வேலைப்பாடுள்ளது

உத்திரவாத முள்ளது

எல்லோரும்
விரும்புவது

K R

சீல்

PHONE
226

தந்தி
கிருஷ்ணு

கே. ஆர். & சன்ஸ்,

நகை வியாபாரம்

பெரிய கடை வீதி : : கோயமுத்தூர்

4 - JUL 1944
MADRAS

சிமெண்ட் 'கான்கிரீட்' ரோடுகளே இந்தியாவின் மாட்டு வண்டி போக்கு வரத்துக்கு மிகச் சிறந்தவை.

'கிரீட்வேஸ்' என்ற புத்தகத்திற்கு (விலை அணா 2) கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

டிபார்ட்மென்ட்: 123/A, தி கான்கிரீட் அஸோசியேஷன் ஆப் இந்தியா, 199, மவுண்ட் ரோட், மதரூஸ்.

ஏஸி.ஸி. & டால்மியா சிமென்ட்

டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:
தி சிமென்ட் மார்கெட்டிங் கம். ஆப் இந்தியா லிட்.

THE COCHIN TEXTILES

(Proprietors : The west coast Agencies Limited)
[Incorporated in COCHIN STATE]

MANAGING DIRECTOR:

RM. ALAGAPPA CHETTIAR,

M. A., BAR-AT-LAW, D. LITT.

TELEGRAM:
' TEXTILES, TRICHUR '

TELEPHONE
TRICHUR 40.

PUDUKAD MILLS POST. COCHIN STATE

Working Spindlage
29880 Spindles

★

MANUFACTURERS OF

BEST QUALITY SWADESHI YARN IN FINER COUNTS 40s. 60s. & 80s. TO SUIT THE REQUIREMENTS OF THE CONSTITUENTS.

★

Also manufacturers of the Cheese, Cone and Doubled Yarn.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Mssrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.

சகல பண்டங்களுக்கும் போக்குவரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2 ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன் மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

எல்லா நலங்களும் பெற

எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வ தெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்க்கை எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிட மிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

எங்களைக் கலந்து ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: பம்பாய்

சென்னை கிளை: 4 & 5 முதல் லைன் பீச், சென்னை

வசந்தம்

மலர் 3] **பொருளடக்கம்** [இதழ் 1

கவி தேசிக விநாயகம் பிள்ளை ...	டி. கே. சி ...	9
எங்கள் வக்கீல் ...	ரா. நா ...	11
மறுமலர்ச்சி ...	ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்	13
நண்பன் ...	எஸ். வி. எஸ் ...	15
பூப் பொருத்தம் ...	"சுகி" ...	17
கு. ப. ரா ...	திருஞானம் ...	24
சிலப்பதிகாரம் ...	சர். சண்முகம் செட்டியார் ...	25
சந்திப்பு ...	ஆர். பர்னபாஸ் ...	33
சாந்தசாமியின் ஜாதகம் ...	கே. பி. கணபதி ...	38
ஐந்து வருஷத்திட்டம் ...	பி. கோதண்டராமன் ...	48
இன்ப வேட்கை ...	ஆர். அய்யாசாமி ...	58
பாசம் ...	பாசரசு ...	62
சாந்தி ...	"வல்லிக்கண்ணன்" ...	63
சாவித்திரி ...	ஆர். ஷண்முக சுந்தரம் ...	69
பைராகி ...	கோமதி சுப்பிரமணியம் ...	75
கலைக்கோயில் ...	சுத்தானந்த பாரதி ...	82
புத்தக ஆராய்ச்சி ...	... ...	88
மலர் மணம் ...	... ...	90

★

விளம்பர அட்டவணை

கே. ஆர். & சன்ஸ்	I
சிமன்ட்	II
கொச்சின் டெக்ஸ்டைல்	III
பர்மாஷெல் கோயமுத்தூர்	IV
ஸ்ரீ ராமவிலாஸ்	V
நியூ இந்தியா	VI
புரூக் பாண்ட்	VIII
ஆர்ய வைத்தியர், பிமைய செட்டி, வசந்தா டையிங் ...	IX
டாடா எஃகு	X
க்ளுகோனேட், சென்டிரல்பேங்க் ...	XI
மைசூர் சந்தன சோப், A. P. R. நல்லெண்ணெய் ...	XII
கவர்னர் யுத்தநிதி, உம்முடியார்	XIII
அரவிந்த் மில்ஸ்	XIV

ஆவணக் காப்பக நூலகம்
199795
சென்னை-600 008

இரண்டு இலைகளும் ஒரு தளிரும்...

'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ளபடி பார்த்துத் தேயிலை கொய்வதுதான் உயர் ரகத் தேயிலைக்கு அடையாளம். இந்த முறைப்படி, மிகவும் இளசான, தளிர் போன்ற மெல்லிய தேயிலைகளே சேகரிக்கப் படுகின்றன.

ப்ரூக் பாண்ட் கம்பெனியார் தங்கள் விற்பனை அதிகாரிகள் மூலம் எல்லா வியாபாரிகளுக்கும் அடிக்கடி புதிய சரக்குகள் சப்ளை செய்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் பயனாய் 'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ள தேயிலை புது மணங் கமழ உங்களுக்குக் கிடைக்கிறது.

எங்கள் பாக்டரிகளி லிருந்து புத்தப் புதிய தேயிலை இந்தியாவில் எல்லா முக்கியமான ஊர்களிலும் உள்ள எங்கள் டிப்போக்களில் ஸ்டாக் செய்யப் படுகிறது. இந்த டிப்போக்களிலிருந்துதான் எங்கள் விற்பனை அதிகாரிகள் அவ்வப்பொழுது சரக்குகள் எடுத்து விநியோகிக்கிறார்கள்.

மணமும் சுவையும் மிகுந்த புத்தப் புதிய தேயிலை வேண்டுபவர்களுக்கு எங்கள் டார்ஜீலிங் பிளெண்ட் மிகவும் உகந்தது.

ப்ரூக் பாண்ட்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

கம்பர்

தேசிக விநாயகம் பிள்ளை

[டி. கே. சி.]

கவி என்றால் இன்னது என்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது. உலகத்தில் எங்குமே கிடையாது. யாப்பியல், இந்த விஷயத்தில் என்ன உதவியும் புரிவதில்லை. வெண்பா இது, விருத்தம் இது என்று ஏதோ சொல்ல முடியலாம்; ஆனால் கவி இது என்று சொல்லவே முடியாது. ஒரு பாஷையோடும் அதிலுள்ள சிறந்த கவிகளோடும் உண்மையான ஆர்வத்தோடு, படாடோபத்தை எல்லாம் தூரத்தே விட்டு விட்டு, நெடு நாள் பழகி வருவோமானால் அது தெரிய வரலாம். அதுவும் தாய் மொழியில்த்தான் தெரியக் கூடும், இதர பாஷைகளில் தெரிய முடியாது என்று ரவீந்திரர் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லி இருக்கிறார்.

கவியை உணர்வதே இவ்வளவு கஷ்டம் என்றால், கவியைப் பாடுவது எவ்வளவு கஷ்டம் என்று சொல்லவும் வேண்டுமா? உலகத்தில் ஆயிரம் வருஷத்திற்கு ஒரு

தடவை கவி பிறக்கிறதுண்டு என்று கவியின் அருமையையும் அதன் பெருமையையும் பற்றி நன்கு ஆராய்ந்தவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்படிச் சொன்னது வெறும் வின்னியாசம் அல்ல; உண்மையைத் தெளிவு படச் சொன்ன நேரான வார்த்தையே.

உணர்ச்சியானது, சொல், இசை, கட்டுக் கோப்பு இவைகளோடு ஒத்த உருவத்தில் வெளி வந்து விட்டதென்றால் அதுவே கவி. அது அற்புத சிருஷ்டிதான். இப்படி எழுந்த ஒரு கவிக்காக அந்த பாஷைக் குரியவர் ஒரு விழாக் கொண்டாடினால் பொருத்தமே. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இவ்விதமான கவிகள் எத்தனையோ பாடி யிருக்கிறார்கள்.

தேசிக விநாயகம் பிள்ளையவர்களுடைய கவிகளெல்லாம் எளிமையிலும் எளிமையாகப் பாடப் பட்டிருக்கின்றன. அவர்கள் வசிப்பதோ தமிழ் உலகத்திலேயே தென் கோடி என்று ஒதுக்கக் கூடிய கன்னியாகுமரிப் பக்கம். மனுஷரோ ரொம்பவும் சாது, ஆடம்பரம் முற்றிலும் பூஜ்ஜியம். தலையிலே 'தலைப்பா' வாகச் சுற்றிக் கொள்வதற்குப் பட்டம் கிட்டம் உண்டா? கிடையாது!

தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம், அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூஞ் செண்டு. வயசானவர்களை விட இளைஞர்கள் பாக்கியசாலிகள்— அறுபது, எழுபது, எண்பது ஆண்டுகள் அவர்கள் இந்தக் கவிகளை அனுபவித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? தமிழ் உலகம் பிள்ளையவர்களுக்கு ரொம்பவும் கடமைப் பட்டுள்ளது.

★

எங்கள் வக்கீல்

[ரா. நா]

எங்கள் ஊர் வக்கீல்... தீக்ஷதரை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். பார்த்திருந்தால் ஆச்சரியப்படுவீர்கள். வக்கீலாக வந்து இன்னும் முழுசாக மூன்று வருஷமாக வில்லை. ஊரார் பிரமிக்கும் படியான வருமானம் வருகிறதென்றால் ஆச்சரியப்படாமல் என்ன செய்வது? அதுவும் அவருக்கு முன்னால் வந்த வக்கீல்களெல்லாம் வண்டி வாடகைக்குக்கூடப் பணம் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். இவர் மோட்டாரில் போகிறார். மேலும் தீக்ஷதர் வக்கீலின் பிள்ளையுமல்ல, வக்கீலின் மாப்பிள்ளையுமல்ல. இந்தப் பரம்பரைக்குப் புதிதாக இருந்தும் தம் தொழிலில் வெற்றி பெற்றதுதான் ஆச்சரியம்.

அவரே எங்கள் ஊருக்குப் புதிது. அவர் தகப்பனார் காபி கிளப் வைத்திருந்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் அவர் தள்ளாத வைதீக பிராமணர் என்று கூறுகின்றனர். இயற்கை வசதிகளின்றி இந்தத் தொழிலில் புகுந்து வெற்றி பெற்றது தான் ஆச்சரியமா யிருக்கிறது.

* * *

தீக்ஷதர் எங்கள் ஊருக்கு வந்து முதல் தரமான வீட்டை வாடகைக்கு வாங்கிக் கொண்டு 'வக்கீல்' என்றெழுதிய பலகையைத் தொங்க விட்டவர் முதலில் ஒரு கார் வாங்கினார். 'என்னடா அசடா யிருக்கிறது. முதலில் கார் வாங்கி விட்டது. அதற்குப் பெட்ரோலுக்காவது காசு வர வேண்டுமே' என்று ஊரார் வியந்தனர். ஆனால் அவர்களுக்குப் பிழைக்கும் வழி தெரியாது. தீக்ஷதர் அதை நன்கு அறிந்தவர். கார் இருந்தால் மதிப்பு. கட்சிக்காரர்கள் மயங்கி அங்கு வந்து குவிவார்கள் என்பது அவருக்கு நன்கு தெரியும்.

கார் வாங்கினவுடன் எங்கள் ஊர் கிளப்பில் அங்கத்தினரானார். அந்தக் கிளப்பில் தான் நீதிபதிகளும் மெம்பர்கள். அச்சமயம் ஜில்லா நீதிபதியா யிருந்தவர் டென்னிஸ் பிரியர். உடனே தீக்ஷதர் 'டென்னிஸ் பாட்' வாங்கினார். டென்னிஸ் விளையாட ஆரம்பித்தார். தினசரி நீதிபதியுடன் டென்னிஸ் விளையாடினால் இது ஊர் ஜனங்களுக்குத் தெரியாமலா போகிறது. நீதிபதியுடன் நெருங்கிப் பழகுகிறார் என்று தெரிந்தவுடன் கட்சிக்காரர்கள் அவரைத் தேடி வராமல் எங்கு போவார்கள்?

* * *

மற்றொரு நீதிபதிக்கு "பிலியட்ஸில்" பிரியம். உடனே தீக்ஷதர் 'பிலியட்ஸ்' கழி ஒன்று வாங்கி அதை இரவு பகலாகக் கற்றுக்கொண்டு எல்லாரும் இவருடன் விளையாடும்படி செய்தார். இன்னுமோர் நீதிபதிக்கு சீட்டாட்டத்தில் பிரியமா? உடனே சீட்டாட்ட கோஷ்டியையும் கடாக்ஷிக்க ஆரம்பித்தார்.

* * *

தீக்ஷதர் என்றால் கழுத்தில் ருத்திராக்ஷமும் முகத்தில் திருநீரு

மாகக் காட்சியளிப்பார் என்று எண்ண வேண்டாம். ஆசாமி சுமார் $5\frac{1}{2}$ அடி உயரம். 'புல் சூட்'; கழுத்துப் பட்டை, கோர்ட் டுக்குப் போகும் பொழுது தலைப் பாகை, கிளப்புக்கு வரும் பொழுது 'ஹாட்' இவை சகிதம் தான் காட்சியளிப்பார். இப்ப டிப் பட்டவர் என்ன ஆச்சரியம்! ஒரு நாள் பஞ்சகச்சம், விபூதி சகி தம் தரிசன மளித்தார். என்ன காரணமென்று விசாரித்ததில் புதி தாக வந்திருக்கும் பிரதம நீதிபதி கட்டுப் பெட்டி என்று தெரிந்தது. அவருக்கு திருப்புகழில் பைத்தியம் என்று தெரிந்தவுடன் தீக்ஷதரும் தினசரி திருப்புகழ் பாராயணம் செய்வதுடன் கிளப்பில் திருப் புகழ் பிரசாரமும் செய்ய ஆரம் பித்து விட்டார்.

* * *

வக்கீல் என்றால் 'சிவில் பிராக் டீஸ்' மட்டும் இருந்தால் போதுமா? கிரிமினல் பிராக்டீஸ் வர வேண்டுமே. அதற்கு என்ன வழி என்று பார்த்தார். திடீ ரென தீக்ஷதருக்கு சுகாதார வாரக் கொண்டாட்டங்களில் ஆர் வம் ஏற்பட ஆரம்பித்தது. விடு தலையான கைதிகளின் எதிர்காலத் தில் அக்கறை ஏற்படவும் ஆரம் பித்தது. இந்த சங்கங்களில் சேர்ந்தார். தாராளமாகப் பொருளுதவி செய்ய ஆரம்பித் தார். இம்மாதிரி சங்கங்களுக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட் தான் தலை வராயிருப்பார். காலக்கிரமத்தில் இந்த சங்கங்களுக்கு காரியதரிசி யானார். அதிகாரிகளுடன் அன்னியோன்யமாகப் பழக ஆரம்பித்தால் சில்லரை தெய்வங் கள் அவரைத் தூக்கிவிடக் கேட்க வேண்டுமா? சீக்கிரத்தில் தீக்ஷதர், ஊரில் பிரபல கிரிமினல் வக்கீ லானார்.

* * *

தீக்ஷதர் தன்னுடைய வெற்றி யைப் பிறர் உணரும்படி செய்வ தில் சமர்த்தர். யாரைப் பார்த் தாலும் ஒரு புன்முறுவல். ஒரு தலையசைப்பு. முத்து உதிர்ந்து விடும்போல் ஒரு வார்த்தை. கட கட வென்று சிரிப்பு. கோர்ட் டுக்குள் நுழையும் பொழுது கால் கட்டை விரலை ஊன்றிக் கொண்டு சத்தம் செய்யாமல் நடந்து பிற வக்கீல்களை தம் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு, நீதிபதிகள் கவனத்தைக் கவர்ந்த பின் லேசாக தலை வணங்கி விட்டுத் தான் ஆசனத்தில் அமர்வார். பிற வக்கீல்களெல்லாம் இவ ரையே கவனிக்கும் படி செய்து விட்டார். கோர்ட்டை விட்டு வெளியே செல்லுகையில் நீதிபதி யிடம் விடை பெற்றுக் கொண்டு தான் செல்லுவார். இவர் மிகுந்த சோலியுள்ளவர் என்பதை நீதிபதி உணர வேண்டாமா? அதற்காக விசாரணை நடந்து கொண்டிருக் கும் பொழுது எழுந்து நிற்பார். இவரைப் பார்த்து நீதிபதி 'என்ன சமாசாரம்' என்று கேட்பார். "வேறு கோர்ட்டில் வேலையிருக் கிறது. அதைப் பார்த்துக் கொண்டு இங்கு வரலாமா?" என்று கேட்பார். 'ஆஹா' என்று நீதிபதி தலையசைப்பார். உடனே எழுந்திருந்து உடை அலுங்காமல், பிற வக்கீல்களைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டு வெளியேறுவார்.

தொழிலில் முன்னேற்றமடை யாதவர்கள் இவரை 'நூதனப் பிரபு', 'காக்காய் பிடிக்கிறான்' 'என்ன சார் இந்தப் பிழைப்பு' என்றெல்லாம் ஏளனம் செய்வார் கள். தீக்ஷதர் பிழைக்கும் வழி தெரிந்தவர். வகை தெரியாதவர் கள் வாய்க்கு வந்ததைப் பேசு வார்கள். பேசிப் பயனென்ன?

மறுமலர்ச்சி

(ஜெயலட்சுமி ஆர். சீனிவாசன்)

7—3—43

"அம்மா! நீ ஏன் தான் என்னையுங்கூட அழைத்துக் கொண்டு போய்விட வில்லையோ! நான் இங்கே படுகிற பாடு கடவுள்தான் அறிவார். தாயில்லாப் பெண். இந்தக் காரணத்தினால் தானே பெரியம்மா என்னை ஒரு மாதிரியாக நடத்துகிறாள். அருந்ததி மாத்திரம் புதிது புதிதாகப் பாவாடை உடுத்திக் கொள்ளலாமா! அவள் கட்டிக் கழித்ததைத் தான் நான் தொட வேண்டுமாம். என்ன நியாயம் இது! ஊம்............ அது மட்டுமா. இன்னும் எவ்வளவோ! கணக்கேது. அம்பிகே! தாயே! உன்னையே நம்பி யிருக்கிறேன்.

15—3—43

அம்மா! இன்றைக்கு காற்று நன்றாக வீசுகிறது. அதோ நிலாவும் அடிவானில் பூத்தெழுகிறது. ஆஹா! என்ன உல்லாசமாக இருக்கிறது? பெரியம்மா, அருந்ததி எல்லாரும் சினிமாவிற்குப் போகிறார்களே? நான் மட்டும் வீட்டில் விழுந்து கிடக்க வேண்டுமா? அருந்ததியைப் போல நானும் ஒரு சிறு பெண் தானே! பெரியப்பா கேட்டார். 'துளசியையும் ஏன் சினிமாவிற்குக் கூட்டிக் கொண்டு போகவில்லை?' பெரியம்மாள் என்ன சொன்னாள் தெரியுமா? 'அவளுக்குத் தலை வலிக்கிறதாம். வரமாட்டேன் என்கிறாள்.' ஐயோடி அம்மா! இப்படியும் யாராவது சொல்வார்களா? ஆனால் இதையெல்லாம் பெரியப்பாவிடம் சொல்ல முடியுமா? சொன்னால் போச்சு, அப்புறம் இந்த வீட்டில் இருந்த மாதிரிதான். நமக்கெதற்கு அந்த ஆசை யெல்லாம். சிவனே என்று அடுப்பங் கரையில் விழுந்து கிடக்க வேண்டியது தான் என் தலையெழுத்து.

20—4—43

ஏதோ தமாஷாக எழுதுகிறேன். இப்படித் தினம் குறித்து வைப்பது ஒரு வேடிக்கையா யிருக்கிறது. ஆனால் தினமும் எழுத முடிகிறதா! அது போகிறது. வித்தியாசம் பாராட்டாமல் அத்தான் புது வருஷ பரிசு அனுப்பினாரே! எனக்குத் தரவேண்டியதைப் பேசாமல் தந்தால் தானே. தந்தாலும், அந்த ஆடையை அணிந்து கொள்ளத் தான் எனக்கு நேரமேது? படிக்கலாமென்றால் முடியுமா! பாடத்தான் முடியுமா? சரி, சரி. இன்றைக்கு இனி எழுத நேரமில்லை.

2—6—43

ஆடிக் கொரு நாள் அமாவாசைக் கொரு நாள் ஓய்வாக உட்கார முடிகிறதா? ஆமாம்! அத்தான் சீக்கிரம் வரப் போகிறாராமே! என்ன? அடேயப்பா! பெரியம்மாவுக்குத் தலைகால் தெரியவில்லை. மாப்பிள்ளை யாவதற்கு

முன்பே யாராவது இப்படி 'மாப்பிள்ளை சீமையிலிருந்து வரப் போகிறான், வரப் போகிறான்' என்று பெருமை யடித்துக் கொள்வார்களா? அவளிருக்கிறாளே, அருந்ததி, துரைசாணியே ஆகிவிட்டாள். என்னிடத்தில் முகங் கொடுத்துப் பேசப் பிடிக்கவில்லை அவளுக்கு. கணக்கு வாத்தியாரென்ன! பாட்டு வாத்தியாரென்ன! தையல் வாத்தியாரம்மாள் என்ன! ஜமாய்க்கட்டும். நன்றாய் ஜமாய்க் கட்டும். நான் யார் பொறுமைப்பட. அடுப்பூதுவதற்காவது பகவான் அருள் இருக்கிறதே! அதுவே போதும். சரி, தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது. விடிந்தால் தலைக்கு மேல் வேலை யிருக்கிறது.

25—9—43

ஏது இன்றைக்குக் காலையிலிருந்து மனசு இப்படி அடித்துக் கொள்ளுகிறதே. என்றைக்குமில்லாத உற்சாகம் இன்று இவ்வளவு எங்கிருந்து வந்தது.? அத்தான் வருகிறாரென்று? வரட்டுமே! எனக்கென்ன?

4—10—43

ஐயையோ! அவர் இருக்கும் அறைப் பக்கம் பார்க்கக் கூடாது என்றாலும் என் கண்கள் கேட்க மாட்டேனென்கிறதே! ஆமாம்! சொல்ல வாய் வர மாட்டேனென்கிறது. உள்ளமெல்லாம் என்ன இப்படி உவகை பூத்தெழுகிறது? எதை நோக்கி இதயம் இப்படி இடை விடாது அடித்துக் கொள்ளுகிறது? ஆமாம்! அவரும் இப்படிப் பார்க்கிறாரே? அதென்ன கையில். நான் எழுதி வைத்த குறிப்பா? ஐயையோ! அதையெல்லாம் படித்ததினால் தான் என்னையே மணந்து கொள்வேன் என்கிறாரோ? சங்கடத்தில் சந்தோஷம்.நல்ல அதிர்ஷ்டம். அருந்ததியைப் போல் எனக்கும் இனி அதிர்ஷ்டம் தான். அம்மா தாயே! இனி என்ன எழுதட்டும். ஆனந்தத்தால் கை நடுங்குகிறது.

கலைக் கடிதம்:

நண்பன்

[எஸ். வி. எஸ்]

அருமை நண்பனுக்கு,

அன்று உனக்கும், நமது நண்பன்.........க்கும் போதும் போதும் என்று சொல்லுகிற வரை, தமிழ்ப் பாடல்களைப் பாடி, அனுபவித்தும் இன்னும் பல விஷயங்களைப் பேசியும் தீர்த்தோம். அதற்குப் பிறகு உங்களை விட்டுப் பிரிவதென்றால் ரொம்பவும் கஷ்டமாகத் தான் இருந்தது. இந்த வருத்தம் வண்டி ஏறியதும் அதிகமாயிற்றே யொழிய குறையவில்லை. போதும் போதாததற்கு என்னைப் போலவே, உற்ற நண்பர்களை விட்டுப் பிரிந்து வந்த நண்பர் மனக் கிலேசத்தோடு என்னுடனேயே ரயிலில் ஏறினர். அவரைப் பார்த்ததும் எனக்கொரு திருப்தி, ஒருவனுகத் தோப்புக்கரணம் போடுவதைவிட, இன்னொருவனுடன் சேர்ந்து போடுவதில், ஒரு ஆறுதல். என்னைப் போல அவனும் கஷ்டப் படுகிறுனல்லவா என்பதில் தான்.

வந்தவர் ரொம்ப ரொம்ப பெரியவர். வயசிலும் சரி, அறிவிலும் சரி ரொம்ப பெரியவர். உலகம் இது வரை அவ்வளவு பெரியவரைக் கண்டதில்லை என்று சொன்னல் குற்றமில்லை.

அவர் வண்டியில் ஏறும் போதே "என்ன இருந்தாலும் இருக்கக் கூடாது" என்று சொல்லிக் கொண்டு வந்தார். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் கோபம் தாண்டவமாடியது.

என் எதிரில் தான் வந்து உட்கார்ந்தார். "இவ்வளவு கோபத்தோடு வருகிறீர்களே என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"விஷயமா? என்ன இருந்தாலும் இப்படி இருக்கக் கூடாது" என்றுர்.

"என்னது? எது?" என்று கேட்டேன்.

"நண்பர்கள் தான்" என்றுர்.

"என்ன? சினேகிதர்கள் இருக்கக் கூடாது என்று சொல்லுகிறீர்களா" என்று கேட்டேன்.

"இல்லை, சினேகிதர்கள் இருக்கலாம்; ஆனல் இப்படிப் பட்டவர்கள் தான் நமக்குச் சினேகிதர்களாக இருக்கக் கூடாது என்கிறேன்" என்றுர்.

"எப்படிப் பட்டவர்கள்"

"ரொம்பவும் நல்லவர்களாயும், படித்தவர்களாயும் நம்முடைய கருத்துக்களை ஒத்துணர்பவர்களாயுமுள்ள சினேகிதர்கள் இருக்கிறுர்களே அவர்கள் தான் கூடவே கூடாது என்கிறேன்."

"இது என்ன விபரீதமாக இருக்கிறதே. சரி, பின் உங்களுக்கு எப்படிப்பட்ட சினேகிதர்கள் வேணுமென்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"சினேகிதர்கள் என்ருல் இப்படி இருக்க வேண்டும்: ஞான சூன்யர்களாய் இருக்க வேண்டும். காலிகளாய் இருக்க வேண்டும். நாம் கிழக்கே பார்த்தால் அவர்கள் மேற்கே பார்ப்பவர்களாய் இருக்க வேண்டும். அவர்களைப் பார்த்தாலே மூன்று நாள் சோறு வேண்டியிராது என்று சொல்லத்தக்கவர்களாய் இருக்க வேண்டும்" என்று ஒருவகையாக முடித்தார்.

இதைக் கேட்டவுடனேயே உலகம் தலைகீழாகச் சுற்றுவதாகத் தோன்றியது. பிரமை பிடித்தவன் போல் இருந்தது இருந்தாற் போல் இருந்தேன். "என்ன பெரியவரே, உமக்குக் கிறுக்கு பைத்தியம் ஏதாவது உண்டா?" என்று கோபமாகக் கேட்டேன்.

அப்பொழுது பார்க்க வேண்டுமே அவர் முகத்தில் தவழ்ந்த அமைதியையும் அன்பையும்.

"இல்லையப்பா, நான் சொல்லுவது ரொம்ப பெரிய உண்மை என்று உணருவாய். ஞாபகம் வைத்துக் கொள்: பெரி(து) இனிது பேதையர் கேண்மை என்று ஆரம்பித்தார்.

நான் மிக்க பரபரப்புடன் "ஏன்" என்று கேட்டேன்.

அவர் மறுபடியும் சாந்தமாக முதலிலிருந்து சொன்னர்.

பெரி(து) இனிது பேதையர்
கேண்மை! பிரிவின் கண்
பீழை தருவ(து) ஒன்(று) இல்.

என்ருர்.

[பீழை: வருத்தம்; ஒன்று இல்: ஒற்றுமை கிடையாது.]

நான் ஸ்தம்பித்து விட்டேன். ரொம்ப பெரிய உண்மை என்று அப்பொழுதே உணர்ந்து விட்டேன் (உங்களைத்தான் பிரிந்திருக்கிறேனே) கண்ணீர் விட்டேன். அவரை நமஸ்கரிக்கப் போனேன். அவர் மறைந்து விட்டார். ஆனல் அவர் வாக்கு நான் மறக்க வில்லை. மறக்க முடியாது.

இப்படி என் பகற் கனவில் தோன்றிய பெரியார் யார் என்று தெரிந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். அவர்தான்: திருவள்ளுவர்.

நமஸ்காரம்

எஸ். வி. எஸ்

★

வாழ்க்கைக் காட்சி:

பூப் பொருத்தம்

"சுகி"

மேலநத்தம் கிஞ. முஞ. நமச்சிவாயம் பிள்ளையின் உள் அந்தரங்க எண்ணங்களில், கரிசக்குளம் பரமசிவம் பிள்ளையின் திருக்குமாரத்தியை, தம் சிரேஷ்ட புத்திரன் சுப்பையாவிற்கு மணம் முடிப்பதும் ஒன்று. கரிசக்குளம் பிள்ளைவாளும் இதற்காக நடையாய் நடந்தார். கிஞ. முஞவின் செல்வாக்கு, காரைவீடு, பையன் சுப்பையாவின் பி. ஏ. படிப்பு, அரசாங்க உத்யோகம், இதையெல்லாம் உத்தேசித்து தம் மகளை, கிஞ. முஞ வின் மருமகளாக மாற்றிவிட எண்ணியதில் தவறு இல்லை. சாடை மாடையாய் இருந்த பேச்சு, ஊர்ஜிதம் ஆகிற நிலைக்கு வந்தது.

ஆனல், அதற்குக் குறுக்கே நின்ற நபர், குறுக்குத் துறை சுப்பிரமணிய ஸ்வாமிதான். அவர் மட்டும் நல்ல மனசோடு 'பூ'க் கொடுத்து விட்டால்? ...

அந்தரங்கப் பேச்சு அம்பலத்திற்கு வந்து, சுப்பிரமணிய சுவாமியிடம் கேட்டுவிடுவதென்றே தீர்மானித்தார்கள்.

தை, கடைசி வெள்ளிக்கிழமை. வெட்டியான் வேலாயுதம், பின் தொடர, வலைப்பைக்குள் தேங்காய், பழம், சூடம் சாம்பிராணி, வெற்றிலைச் சுருளுடன் குறுக்குத் துறை நோக்கி நடந்தார்கள். மேல நத்தம் இக்கரை; குறுக்குத் துறை அக்கரை; ஊடே, தாமிர பர்ணி. ஆற்றில் குளித்துவிட்டு ஈரவேஷ்டியை முட்டுக்குமேல் கட்டி, மேல்த்துண்டை அரையில் சுற்றி இறுக்கிச் சுற்றி, திருநீர் குழைத்து கையிலும் மார்பிலும் நெற்றியிலும் பட்டை பட்டையாய் போட்டுக் கொண்டு தேவாரத்தை முணுமுணுத்தபடி உள்ளே சென்ருர்கள்.

கோவிலில், பக்த கோடிகளின் 'அரகர மகாதேவா' கோஷம். மருக்கொழுந்தும், மட்டிப்பால் பத்தியும், கமழும் சாம்பிராணிப் புகையும், வியர்வைப் புழுக்கமும் குதிங்காலில், தேங்காய்த் தண்ணீரில் தோய்ந்த ஈரமணலின் பிசக்கும் கதம்பமாக மிதந்து வந்தன. பயபக்தியோடு, தரிசனம் செய்து, காதில் மருக்கொழுந்தும், கையில் தேங்காய் மூடியும், மார்பில் சந்தனத் தேமலும் படர, சுவாமி சந்நதியில் 'பூ'க்கட்டிப் பார்த்தார்கள்.

குறுக்குத்துறை வாசி, மேற்படி சுப்ரமணிய சுவாமியார் யாருக்கு முடிச்சுப் போடுகிருரோ, அது தான் நிஜம். இந்த சம்பிரதாயங்களுக்கு உட்பட்டே ஒரு காலத்தில் பரமசிவம் பிள்ளையும், கி. மு. பிள்ளையும் இல்லறவாசி ஆனவர்கள்!

'பூ'க்கட்டிப் பார்த்ததில், சுப்பிரமணியசுவாமி நல்ல மனசோடு குருவம்மைக்கு, சுப்பையாவே புருஷன் என்று சொல்லாமற் சொல்லிவிட்டார். இருவர்களும் அடைந்த சந்தோஷம் சொல்லி முடியாது. வந்த சந்தோஷத்தில் 'அரசமர விலாஸ்' ஓட்டலில்

ஆளுக்கு அரை கப் காப்பித் தண்ணி குடித்து விட்டு, மேலநத் தம் புறப்பட்டார்கள்.

வெட்டியான் வேலாயுதம் கலியாண வேலைக்கு வேண்டிய திட்டங்களைப் போட்டு, முக்கியமாக கசமுத்து வாண வேடிக்கை, பாளையங் கோட்டை ரத்தனம் பாண்டு, மாடத்தெரு பாப்பா பாட்டு மூன்றும் முக்கிய மென முடிவு கட்டினன். இம் மூன்றும் இல்லாத கல்யாணம் — அதிலும் கி. மு. வீட்டுக் கல்யாணம் சோபிக்காது என்பது அவன் கட்சி. கரிசக்குளம் பிள்ளைவாளோ, தவசிப்பிள்ளை, சமையல், சாப்பாடு, காய்கறிவிஷயத்தை தம்மிடம் விட்டுவிடும்படி கேட்டுக் கொள்ள, கி. மு. நமச்சிவாயம் அழகர் மாடு போல தலையை ஆட்டிக் கொண்டு ஆற்றைக் கடந்து வந்தார்...... பேச்சு பல வழியில் வளர்ந்து, வழியும் குறுகி வந்தது.

* * *

குறுக்குத்துரை சுப்ரமணிய சுவாமியின் அனுக்கிரக மறிய, நெல்லை வடிவம்மாள் அடுக்கடுக்காக தோசை சுட்டு அடுக்கி, மிளகாய் துகையலும் அரைத்துவிட்டு, சுக்கு வெந்நீர் போட்டவள், பின் வாசலை வந்து எட்டிப் பார்த்தாள். தனக்கும், கினு, முனு வுக்கும் நல்ல பூக்கொடுத்த அந்த வேலாண்டி தன் மகனுக்கும் — கரிசக் குளம் குருவம்மைக்கும் சம்மதம் கொடுக்க பிரார்த்தனை செய்திருந்தாள். இதற்காகவே காலையில் ஸ்நானம் செய்த நெல்லை வடிவம்மாள் ஒருதரத்திற்கு மூணு தரமாக குறுக்குத்துறையை நோக்கி மனசார வேண்டியிருந்தாள்.

தூரத்தில் உயர்த்திப் பிடித்த இரு கரங்களிலும் வேஷ்டியை, தலைக்கு மேலாக காயப் போட்டுக் கொண்டு மூன்று உருவங்கள் வருவதைக் கண்டு, நெல்லை வடிவம்மாள் மனம் திக்குத்திக்கென்றது. வரவர அவர்கள் பேச்சொலியில் இருந்த சந்தோஷ குரலிலிருக்தும் உல்லாச நடையிலிருந்தும் சுப்பிரமணிய சுவாமியின் கிருபை கிடைத்து விட்டது என்ற தைரியத்தில் மூன்றுமுறை அவர் இருந்த திக்கு நோக்கி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

"நல்ல 'பூ' த்தான் வடிவு" என்றார் கி. மு.

"அம்மா, நெல்லை ஏதோ குருவம்மை பண்ணின புண்ணியம் உங்க வீட்டுக்கு வாராள்" என்று சந்தோஷத்தைத் தெரிவித்தார் கரிசக்குளம் பிள்ளைவாள்.

"சின்னய்யாவுக்கு கடிதாசு எழுதணும். நீங்க சாப்பிடுங்க" என்றான் வேலாயுதத் தேவர் என்ற வெட்டியான். சின்னய்யா என்றது கினு, முனுவின் திருக்குமாரன் சுப்பையா பீ. ஏ.

கோவில் பிரசாதங்களை கினு. முனு வாங்கி, தம் பத்தினி நெல்லை வடிவம்மாளிடம் கொடுக்க, அம்மாள் வெகு மரியாதையும் பக்தியும் நிறைந்த முக மலர்ச்சியோடு வாங்கி விபூதி எடுத்து, நெற்றியில் இட்டுக் கொண்டாள். மஞ்சள் பூசிய அம் முகத்தில் இலங்கிய குங்குமம், அதற்கு மேலாக பூசிய திருநீறு இரண்டும் கண்கொள்ளாக் காட்சியாக கினு. முனுவிற்குப் பட்டது.

பலகாரம் சாப்பிட்டதும் முகூர்த்தம் பார்த்து பையன் சுப்

பையாவிற்கு கடிதம் எழுதுகிறது என்ற முடிவு செய்யப்பட்டது.

2

மேலநத்தம் கிளு, முளு பையன் சுப்பையா பீ. ஏ. மாதம் 30ரூபாய்க்குத் தன் திறமையை காருண்ய கவர்மெண்டாருக்கு அடமானம் வைத்து தற்சமயம் 35 ரூபாய் பெறும் குமாஸ்தா. ஆளுலும், என்ருவது தான் தாசில் உத்யோகம் அடைய முடியும் என்ற தீர்க்கமான நம்பிக்கையால் அன்ருட வாழ்க்கையில் கசப்பு ஏற்படாதபடி நடந்து வந்தான். தகப்பனுர், கரிசக்குளம் குருவம்மையைத் தீர்மானித்து முகூர்த்தம் குறித்து அனுப்பியது அவனுக்குக் கொஞ்சம் ஆத்திரத்தைக் கொடுத்தது. தன் சம்மதம் கேளாமல், குறுக்குத்துறை சுப்ரமணியசுவாமி பூக் கொடுத்தார் என்பதற்காக ஒரு பெண்ணே, அதுவும் கரிசக்குளம் பெண்ணே மணக்கச் சம்மதிக்கவில்லே.

இன்னுமொரு காரணம். சுப்பையா பி. ஏ. கரிசக்குளத்தை ஒரு சமயம் பார்த்திருக்கிருன். ஊருக்கு மேற்கே வாய்க்கால் கரையில், குலேகுலேயாய் காய்த்துக் கிடந்த மா மரங்களில் கல்லெறிந்து குத்தகைக்காரன் கட்டி வைத்து அடித்தும் இருக்கிருன். கரிசக்குளம் என்றதும் குருவம்மையின் கற்பனே அழகைவிட, தோள்ப்பட்டை தழும்பு கொஞ்சம் உறுத்தியது.

கரிசக்குளம் என்ற பதத்திற்கு அர்த்தமே, பையன் அகராதியில் 'சுடுகாடு' என்ருகி விட்டது. அந்தச் சுடுகாட்டில், அவன் காதல் வாழ்வுக்கு இலக்கானவள் டோலக், கனகாம்பரம், பாடி, காலர் சட்டை, இத்தியாதி நாகரிகமுள்ள பெண் கிடைக்க மாட்டாள் என்பதால், 'பூ' க்கொடுத்த சுப்பிரமணிய சுவாமி உள்பட யாவரையும் சபித்தான். நல்லவேளேயாக, யாரும் எதிரே அகப்படவில்லே. அவன் கோவம் அரசாங்கத்திற்கு ஒண்ணரையணு லாபத்தில் முடிந்தது.

மதுரை,

13—2—44.

அன்புள்ள அப்பாவிற்கு,

அடியேன் சுப்பையா அனந்த கோடி நமஸ்காரம். க்ஷேமம் க்ஷேமத்திற்கு எழுதுங்கள். குறுக்குத்துறை சுவாமி 'பூ' க் கொடுத்தார் என்பதற்காக - நான் தற்சமயம் கலியாணம் செய்யப் போவதில்லே. எனக்கு, ரெவென்யூ இன்ஸ்பெக்டராக நாலு மாசம் 'ஆக்டிங்' பார்த்த பின்பே கலியாணம்.

அதுவரை கலியாணப் பேச்சே எனக்கு எழுதக் கூடாது. எழுதினல், வேலேக்கு கால்க் கடிதாசி எழுதி விட்டு, ஊருக்கு வந்து விடுவேன். இரண்டு வருஷம் போகட்டுமே. எனக்கு வயசாகி விட்டதா? இந்த இரண்டு மூன்று வருஷத்திற்குள் மேல் உத்தியோகம் கிடைக்கா விட்டால், நான் நீங்கள் குறிப்பிடுகிற பெண்ணே - இதே குருவம்மையாக இருந்தாலும் - கலியாணம் செய்யப் பின் வாங்க மாட்டேன்.

அம்மாவிற்கு நமஸ்காரங்கள்.

மனதிலே கஷ்டம் வேண்டாம். மன்னிக்கவும்.

குமாரன்

ந. சுப்பையா

மேற்படி கடிதத்தைக் கண்டதும் எல்லாரும் - குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமி நீங்கலாக அடைந்த ஏமாற்றம் சொல்லி முடியாது. கி. மு வுக்கும், நெல்லை வடிவம்மாளுக்கும் லக்ஷ்மியையே உதறித் தள்ளி விட்டதாக வருத்தம், கரிசக்குளம் பிள்ளைவாள், கணையாழியைப் பறி கொடுத்த சகுந்தலை போல் துடித்தார். வருத்தத்தை வாய் விட்டுப் பேச சற்று நேரம் பிடித்தது.

“அண்ணாச்சி, ஆறு மாசம் போனா சுப்பையா மனசு மாறும். அதுவரை நீங்க பொறுத்துப் பாருங்க. வேலாண்டி கொடுத்த பூவு பொய்யாப் போவாது” என்று நெல்லை வடிவம்மாள் கேட்டுக் கொண்டாள்.

கி. மு பிள்ளை வாயே திறக்கவில்லை. தம்முடைய பிள்ளை தாசில்தாராக வந்து தன்னாத்த கி. மு க்களை அதிகாரம் செய்வதைக் கண்ணாரக் காண வேண்டுமென நெடுநாள் தவங்கிடந்தவர். அந்த மனோரதத்திற்கு, கலியாணம் முட்டுக் கட்டையாக வருமென எதிர் பார்க்கவில்லை. குருவம்மை மருமகளாக வராவிட்டாலும் பாதகமில்லை; பையன் ராஜினா

மா பண்ணுமல் இருந்தால் போதும் என்ற நினைவு வட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்தார்.

கரிசக்குளத்துப் பிள்ளைவாள் உலகம் தெரிந்தவர். காரியவாதி. வயது வந்த பெண்ணை, இரண்டு மூன்று வருஷம் இன்னும் காபந்து செய்ய இஷ்டப் பட வில்லை. வேறே இடம் கண் காணிக்கத்திட்டம் போட்டாலும், "பிராப்தம் எப்படியோ? அப்ப டியே நடக்கும்!" என்று பேச் சுக் கொடுத்து பிரயாணமாகி விட்டார்.

இரண்டு வாரங்களுக்குப் பின், கி. மு. விலாசத்திற்கு குருவம்மை யின் கலியாணக் கடிதம் தபாலில் வந்தது.

"என்ன, நெல்லை நமக்குக் கொடு த்து வைச்சது அவ்வளவு தான்!" என்ருர் கி. மு.

நெல்லை வடிவம்மாள் "மாப் பிள்ளை யாராம்?" என்று அறிய ஆவல் கொண்டாள்.

"எந்தப் பயலா இருந்தா என்ன" என்று சுக்கு நூருகக் கிழித் தெரிந்தார், வந்த கடி தத்தை.

3

அயலிடங்களில், தன் ஜில்லாக் காரனைக் கண்டால் யாருக்கும் ஆனந்தம்; இது சகஜம். ஆனல் அவன் மேல் உத்தியோகஸ்தனுக இருந்தால், கொஞ்சம் மனக் கசப்பு ஏற்படும். தன்னை அறிந்த வ்னே அப்படி வந்து விட்டால் இன்னும் சங்கடம் சொல்லி முடியாது.

சுப்பையா, புதிதாக வந்த தாசில்தாரைப் பற்றி விபரங்களை அறிய முயன்ருன். அவனே தாசில்தாருக்கு அந்தரங்க குமாஸ்தா. வந்தவர் நல்லவராக இருந்தார். அது மட்டுமல்லாமல், அவனிடமும், அவன் வேலையிட மும் பச்சாத்தாபம் கொண்டார். அந்த வயோதிகரிடம் ரொம்பவும் வணக்கமாக நடந்துகொண்டான்.

புது ஊராக இருந்ததால், தாசில் தாருக்கு உடம்பு ஒத்துக் கொள்ள வில்லையோ என்னமோ? ஒரு நாள் ஆபீஸ் ரிக்கார்டுகளை, வீட் டிற்குக் கொண்டு வரச் சொன் ஞர். தாசில்தாரின் நன் மதிப்பையும் சிபார்சையும் பெற வீட்டிற்குப் போனுன்.

போன இடத்தில் சுப்பையா விற்கு உள்ளம் அசௌகரியப் படத் தொடங்கியது. உடம்பில் இதுகாறும் ஏற்படாத ஒரு புத்து ணர்ச்சி ஏற்பட்டது. தன்னிலை யை காதல் நிலையென்றே எண்ணி விட்டான். அந்த ஏழைக் குமாஸ் தாவின் கண்ணிற்கு ரதி, ஊர்வசி, திலோத்தமை எல்லாரும் ஓர் உரு எடுத்தது போல காட்சி யளித்த அவன் மனக் குகைக்குள் அந்த சௌந்தரிய தேவதை ஒன்றி விட்டாள்.

பெண்ணும் நல்ல அழகி. நவ நாகரிகச் சாயையும், ஜொலிப்பும் அவள் நடை உடையில் ஜதி செய் யும். கருங் கூந்தலில் வெள்ளிய நக்ஷத்திர அடுக்குகள் போல் காட்சி அளிக்கும் அந்த அர்த்த பிரைச் சந்திரனைப் போன்ற மல்லி கைக் கூட்டம், அவன் மனசை கனவிலும் வேதனைப் படுத்தியது.

"யாரைப் பார்க்கிறீர்கள்?' என்ற கேள்வியில் முல்லைப் பற்

களையும், மோகனத் தோற்றத்தை யும் கண்டான்.

"யார்? ஓகோ. சுப்பையா வா? ராஜாத்தி —"

ஆஹா! பெயர் ராஜாத்தியா? பெயரும் பொருளும் சேர்ந்து மின்னுகிற ஒரு ரோஜாப் போலல்லவா இருக்கிருள். ராஜாத்தி — என்ற பெயர் இன்ப வாதனையை உண்டு பண்ணியது.

மேலுஞ் சொன்னர் தாசில்தார். "ராஜாத்தி, சுப்பையா ஆபீஸ் கிளார்க்கு நல்ல பிள்ளை, நம்ம ஜில்லாக்காரன். வா, சுப்பையா" என்ருர்.

சுப்பையாவிற்கு உள்ளூர அதிர்ச்சி. முகத்தை நாலைந்து முறை துடைத்துக் கொண்டான். ஆபீஸ் பேப்பர்களை தாசில்தார் முன் வைத்து விட்டு "கொஞ்சம் அலுவல் இருக்கு" என நழுவ ஆரம்பித்தான்.

தாசில்தார் ராசாத்தியிடம் அவனுடைய வேலைத் திறமையைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

4

மறு நாள் ஆபீஸிற்கு வந்த தாசில்தார் சுப்பையாவின் மீது அதிகமான பிரியம் காட்டினர். அவன் எழுதிய ரெவினியூப் பரிக்ஷையில் அவனுக்கு வெற்றி ஏற்படுமெனப் புகழ்ந்தார். ஊடே பேச்சோடு பேச்சாக "கலியாணம் ஆகி விட்டதா?" என்று கேட்டும் வைத்தார்.

சுப்பையாவின் மனநிலை, ரஸக் குண்டுகளை ஊதும் குழந்தையின் மனம் போல் இன்பமாகத் துடித்தது. 'பெண்ணைக் கொடுப்பீர்களா?' எனக் கேட்கத் தீர்மானித்து விட்டான். ஆனல், சங்கோசம், தன் உத்தியோக ஏற்றத் தாழ்வு இதனல் பின் வாங்கினவன், "கலியாணம் ஆக வேண்டும்" என்ருன்.

"நீ பிரம்மச்சாரியா?" என அந்த வயோதிக தாசில்தார் சிரித்தார்.

திடீரென ராசாத்தியின் ஒயில் நிறைந்த தோற்றம் மனக்கண்முன் வந்து மறைந்தது. சுப்பையா பி. ஏ. சிரித்துக் கொண்டான்.

எதை நினைவில் கொள்ளக் கூடாது, மறக்க வேண்டும், நினைவுச்சுவடே இருக்கப் படாது. என எண்ணுகிருமோ அவை கீறல் விழுந்த கிராமபோன் தட்டுப் போல திரும்பத் திரும்ப கத்திக் கொண்டிருக்கும். காதல் கடிதம் எழுதக் கூடாது என நினைத்தவன், எழுதி விட்டுத் துன்பப் பட்டான்.

அத்தோடு தான் பெண் பார்த்து விட்டதாகவும், தகப்பனருக்கு எழுதி விட்டான்! தவறுகள் ஒன்ருக வருமா; கூட்டமாகத் தானே வந்து சேரும்!

அந்த மோகன சுந்தரி தன் கடிதத்தை, தாசில்தார் வசம் கொடுத்து விட்டால்? என்ன தலைக்கா கத்தி வந்து விடும். 35 ரூபாய்க்கு அடமானம் வைத்துள்ள தன் அடிமைத்தனத்திற்கு விடுதலை கிடைக்கும். அப்படியாவது விடுதலை கிடைத்தால்?

விதியின் விளையாட்டு விசித்திரமானது; கொடூரமானதுங் கூட. தாசில்தாரோ, நாளாவட்டத்தில் சுப்பையாவின் உத்தியோகத் திறமையையும், மேல் உத்தியோக உயர்வையும் பற்றி சிலாக்கிக்கத் தொடங்கினர். ஆசைக் கயிற்றில் அல்லல் பட்டுக் கொண்டிருந்தான்.

அகஸ்மாத்தாக, மீண்டும் தாசில்தார் வீட்டுக்குப் போக நேர்ந்தது. இந்த வேளையில் தனக்கு என்னென்ன மரியாதை நடக்குமோ என்ற திகில்; ஆனால் அதை ஆச்சர்யம் கலந்த சுபாவத்தோடு வரவேற்க ஆசை.

அந்த அழகி, இவனைக் கண்டதும், "மன்னியுங்கள்" என்றாள். அவள் குரலில் சோகமும், முகத்தில் பச்சாத்தாபமும் விளங்கின. குரல் நடுக்கமும், கை விரல்கள் ஆட்டமும் கண்டு சுப்பையா நழுவ ஆரம்பித்தான். அவன் முன்னால், பாரிஜாத புஷ்பம் விழுந்த மாதிரி அவன் எழுதிய கடிதம் விழுந்தது.

மனப்புழுக்கமும், ஏமாற்றமும் சுமையாக இருக்கவே, விறு விறென தன் அறையை நோக்கி நடந்தான்.

போகும் போதே கடிதத்தில் எழுதப்பட்டிருந்த வாக்கியக் கோவைகள் கானல் நீர்போல மிதக்கும் அவன் எழுதிய காதல் கடிதத்திற்குப் பின்னால் அவள் எழுத்துக்கள் :

"நமஸ்காரம். தங்கள் கடிதத்தை நினைவு மலர் போல் பத்திரப் படுத்திக் கொள்ள முடியாத அபாக்கியவதி நான். என்னை இக் கோலத்தில் கொண்டு வந்து படுகுழியில் தள்ளி என் வாழ்வை மண்ணாக்கிய பாவம் தங்களுடையதே. தங்களை, கரிசக்குளம் வாய்க்கால் கரையில் எப்பவோ கண்டது. என் அப்பாவும் தங்களைப் பற்றிச் சொன்னதுண்டு. நான் சாகும் வரையில் தாங்கள் எனக்குச் செய்த இந்த நரக வேதனையை என்றும் மறக்க மாட்டேன்.

குருவம்மை"

சுப்பையாவிற்கு. எதிர் பாராத தாக்குதல் நேர்ந்தது. அந்தச் சுப்பிரமணிய சுவாமி, குறுக்குத் துறை வாசி பூக் கொடுத்தது உண்மையா பொய்யா என தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

5

தாசில் பிள்ளைவாளுக்கு வந்த தபால்களில் இரண்டு முக்கியமானவை. ஒன்று சுப்பையாவுக்கு ரெவினியூ இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஆர்டர்; மற்றொன்று அவனது ராஜிநாமாக் கடிதம். அவனுடைய ராஜிநாமாக் கடிதத்தை ஏற்றுக் கொள்வதா அல்லது உத்தியோக ஆர்டரை ஏற்றுக் கொள்வதா?

இதை ராஜாத்தியிடம் சொல்லி பையனின் அசட்டுத் தனத்தைப் பற்றி சிரிப்பாய்ச் சிரித்தார். ஆனால் அவளோ, "என் மண வாழ்க்கை அவரால் பாழானது; அவர் உத்தியோக வாழ்வு என்னால் அழிந்தது" என்று சொல்லிக் கொண்டாள்.

* * *

தம் பிள்ளையை தாசில்தாராகவும் குடும்பஸ்தனாகவும் காண விருந்த மேலநத்தம் கி. மு. வின் முன்னால் இரண்டையும் உதறித் தள்ளிய ஓர் உருவம் வந்து நின்றது.

சுப்பையா, பின் வாசல் பக்கம் வந்து கண்ணுக் கெட்டிய தூரம் பார்த்தான். எதிரே தெரிந்த அந்த தாமிரவர்ணி புது வெள்ளம் இரு கரையும் பொங்கிப் புரள, புன்னகைக் குமிழிகள் போல கோலாகலமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

வெண்கலமணி 'டணர் டணர்' என ஒலித்து மெதுவாக ஆற்றின் குளிர்ந்த நீரைத் தாண்டி மிதந்து வந்த அலைகள் 'பூப் பொருத்தம்; பூப் பொருத்தம்' என நகைத்தன.

கு. ப. ரா

(திருஞானம்)

விதியின் கொடூர விளையாட்டை என்ன வென்று சொல்வது? கு. ப. ரா நம்மிடமிருந்து பிரிந்து போய் விட்டார் என்பதை நம்பவே முடியவில்லையே. கு. ப. ரா காலமாகி விட்டது தமிழ் இலக்கிய உலகுக்குமட்டும் பெருத்த நஷ்டம் அல்ல. அருமையான 'நட்பே' இந்த உலகிலிருந்து மறைந்து விட்டதோ என்று மனம் குமுறுகிறது. துக்கத்தைத் தாளமாட்டாமல் தசரதச் சக்ரவர்த்தி, "சத்தியமே, நீ மறைந்து விட்டாயா?'' என்று கலங்கினர். அப்படியே தான் நம்முடைய மனதும் கலங்குகிறது.

நண்பர்களிடம் உயிருக் குயிராக இருந்தார். அவரைப் போல அன்பும் அமைதியும் உள்ளவரைக் காண்பது அரிது. இலக்கியத்தின் எல்லா அம்சங்களிலும் கவனம் செலுத்தி, சிறப்புடன் பணி புரிந்து வந்தார். அவர் எந்த விஷயத்தைப் பற்றி எழுதினாலும், வனப்பும், வசீகரமும் கொண்டிருக்கும். அதனாலேயே எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்திருந்தார். இந்த மாதிரி மாளாத் துயரில் ஆழ்த்திவிட்டு அவர் கனவுகள் உருப் பெறும் முன்பே சென்று விட்டாரே!

சென்ற மாதம் அவர் எவ்வளவு உற்சாகத்துடன் இருந்தார்! அதுவும் வெகு நாளைய அவருடைய ஆசை நிறைவேறுவதில் பூரண திருப்தியுடன் இருந்தாரே! டி. கே. சி யுடன் அளவளாவ வேண்டுமென ரொம்ப நாளாகவே சொல்லிக் கொண்டிருந்தார். கும்பகோணம் ஜயமாருதி வாசகசாலை விழாவை யொட்டி அந்த வாய்ப்புக் கிடைத்தது. அடடா! இராத்திரி மூன்று மணி வரை டி. கே. சி யுடன் ஒரே பரவசத்துடன் இருந்தார். 'கிராம ஊழியன்' பத்திரிகை பிரசுர கர்த்தர் அ. வெ. ர. கிருஷ்ணசாமி வற்புறுத்தியதின் பேரில் தூங்கப் போகச் சம்மதித்தார். எழுத்துக்காகவே வாழ்ந்த சிறந்த எழுத்தாளர் அவர். தமிழ் நாட்டு எழுத்தாளர் சங்கம் அவசியம் வேண்டும் என்று இடை விடாது சொல்லி வந்தார். எழுத்து உலகில் கட்டுப் பாடு இருந்தால் தான் எழுத்தாளன் வாழ்வும், இலக்கியமும் தழைத் தோங்கும் என்று நம்பினர். தமிழ் நாட்டின் சாபக்கேடோ என்னவோ அது அவர் காலத்தில் கை கூடவில்லை.

இலக்கியத்தில் எவ்வளவுக் கெவ்வளவு கு. ப. ராஜகோபாலன் மனம் ஆழ்ந்து லயித்திருந்ததோ அதே போல வேதாந்தத் துறையிலும் சிந்தையைச் செலுத்தி வந்தார். யோகத்தின் நுட்பத்தை நன்கு கிரகிக்க முடிந்ததினல்தான் கு. ப. ராவினல் 'தாமரை இலைத் தண்ணீர் போல' சாதாரண வாழ்க்கையில் சாந்தியுடன் வாழ முடிந்தது. எப்போதுமே சொத்துச் சுகத்தில் அவர் கருத்தூன்றவில்லை.

இன்று கு. ப. ரா குடும்பத்திற்குப் பொருள் உதவி தேவை. இலக்கியாசிரியர்கள் உதவ முயற்சிசெய்கிறார்கள். அந்த முயற்சி பலனளிக்க வேண்டும்.

சிலப்பதிகாரம்

சர்- ஆர். கே. சண்முகம் செட்டியார்

5. இந்திர விழவூரெடுத்த காதை

தொடர்ச்சி

(169—240)

(169—88) புகார் நகரத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும், மடங்களிலும், அரண்மனையிலும், தெருக்களிலும், விழாவின் முழக்கம் நிறைந்திருக்கின்றது. எல்லா மதத்தினரும், சமய வேறு பாடில்லாமல், இந்திர விழாவைக் கொண்டாடினார்கள். தற்காலத்தில், விழா வென்றால் ஒரு சமயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சண்டையும், சச்சரவும் ஏற்படும் ஒரு சந்தர்ப்ப மாக முடிகிறது. பண்டைக்காலத்துத் தமிழ் மக்களின் விழாக்கள் இவ்விதமில்லை. விழா என்றால், எல்லா மக்களும் சேர்ந்து, கொண் டாடும் ஒரு சிறப்பான நிகழ்ச்சி. புகார் நகரத்தில் இந்திர விழா எப்படி நடைபெற்றது என்று பார்ப்போம். சிவன் கோயில், முருகன் கோயில், பலராமன் கோயில், விஷ்ணு கோயில் என்ற இவைகளி லெல்லாம் ஓமம் வளர்த்துக் கொண்டாடினார்கள். இவை யல்லாமல் மற்றக் கோயில்களில், அவரவருடைய முறைப்படிக் கொண்டாடினார் கள். புத்தர், சமணர் ஆகியவர்களின் பள்ளிகளிலும், மடங்களிலும், ஏராளமான கூட்டங்கள் நிறைந்து புராணங்களையும் நீதி நூல்களையும் வாசிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அரசனுடைய அரண் மனையிலும் விழாக் கொண்டாட்டம் சிறப்பாக நடை பெற்றது. இந்த மகிழ்ச்சியான நாளில் எல்லா மக்களும் கலந்து மகிழ வேண்டுமென்று, சிறையில் அடைக்கப்பட்ட பகைவர்களையுங்கூட அரசன் விடுதலை செய்து விட்டான். பழந்தமிழர் இசை ரசிகர்கள் ஆதலால், யாழ் முதலிய பலவித இசைக் கருவியாளரும், வாய்ப் பாட்டில் வல்ல பாணர் களும் இனிமையான இசை வகைகளை நகர் எங்கும் எழுப்பினார்கள். இராப்பகலாகச் சிறிய தெருக்களிலும் தேரோடும் பெரிய வீதிகளிலும் முரசடிக்கும் ஓசையால், நகரத்து மக்கள் தூங்கவுமில்லை.

நகரெங்கும் விழாக் கொண்டாட்டம்

169 பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்,
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்,

வால்வளை மேனி வாலி யோன் கோயிலும்,
நீலமேனி நெடி யோன் கோயிலும்,
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழா அ
நான் மறை மரபின் தீ முறை ஒருபால்;
நால்வகைத் தேவரும், மூவறு கணங்களும்,
பால்வகைத் தெரிந்த பகுதித் தோற்றத்து —
வேறுவேறு கடவுளர் சாறு சிறந்து ஒருபால்;
அறவோர் பள்ளியும், அறன் ஓம் படையும்,
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்;
திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஒருபால்;
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித்தளை நீக்க அருள் சிறந்து ஒருபால்,
கண்ணுளாளர், கருவிக்குயிலுவர்,
பண்யாழ்ப் புலவர், பாடற் பாணரொடு
எண் அருஞ் சிறப்பின் இசை சிறந்து ஒருபால்;
முழவுக் கண் துயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக் களி சிறந்த வியலுள் ஆங்கண்;

பதவுரை

[பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் — பிறவாத உடலையுடைய பெரியவனாகிய சிவபிரான் கோயிலும்; அறுமுகச் செய்வேள் அணிதிகழ் கோயிலும் — ஆறுமுகத்தையுடைய முருகனின் அழகு விளங்குகின்ற கோயிலும்; வால் வளை மேனி — ஒளி பெருந்திய சங்குகளைப் போல வெள்ளை நிறமுடைய; வாலியோன் கோயிலும் — வெள்ளை மூர்த்தியின் கோயிலிலும் (பலராமன் கோயிலிலும்) நீலமேனி நெடியோன் கோயிலும் — நீல நிறமான திருமாலின் கோயிலும்; மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் — முத்து மாலை அணிந்த வெண் கொற்றக் குடையை உடைய; மன்னவன் கோயிலும் — அரசன் அரண்மனையிலும்; மாமுது முதல்வன் — மிக்க முதுமையை யுடைய உலக முதல்வனாகிய பிரமனின்; வாய்மையின் வழா அ — உண்மை மொழியினின்றும் பிறழாத; நான் மறை மரபின் — நான்கு வேதங்களின் முறையிலேயே; தீ முறை ஒரு பால் — தீ வளர்க்கும் அறமுறைகள் ஒரு பக்கம் நடக்க;

நால்வகைத் தேவரும் — நான்கு வகையான தேவர்களும்; மூஅறு கணங்களும் — பதினெட்டு வகைத் தேவர் கூட்டங்களும்; பால்வகைத் தெரிந்த — வேறுபாட்டு வகைகள் புலப்படக் கூடிய; பகுதித் தோற்றத்து — பகுத்து வைக்கப்பட்ட தோற்றத்தையுடைய; வேறு வேறு கடவுளர் — பல வேறு தேவர்களின்; சாறு சிறந்து ஒரு பால் — திருவிழா ஒருபக்கம் சிறப்பாக நடைபெற;

அறவோர் பள்ளியும் — புத்தர் பள்ளிகளிலும்; அறன் ஓம் படையும் — தருமத்தைக் கற்பிக்கும் இடங்களிலும்; புற நிலை கோட்டத்தும் — புறம்பாக வுள்ள திருக்கோயில்களிலும்; புண்ணியத் தானமும் — மற்றுமுள்ள புண்ணிய இடங்களிலும்; திறவோர் உரைக்கும் செயல் — நூல் வல்லோர் கூறும் அறவுரைகள்; சிறந்து ஒரு பால் — ஒருபக்கம் சிறப்பாக சொல்லப்பட;

கொடித் தேர் வேந்தனொடு கூடா மன்னர் — கொடி பறக்கும் தேரையுடைய மன்னனோடு பொருந்தாத பகை வேந்தரின்; அடித்தளை நீக்க — அடிகளில் இடப்பட்ட விலங்குகளைப் போக்குவதற்கு; அருள் சிறந்து ஒருபால் — ஒருபக்கம் அரசன் அருள் சிறக்கப் பெற்று;

கண்ணுளாளர் — பெரும் பாணர் என்னும் இசைகாரரும்; கருவிக் குயிலுவர் — தோலால் செய்யப்பட்ட இசைக் கருவியை இசைப் போரும்; பண்யாழ்ப் புலவர் — இசையின் பண்களை யாழில் வைத்துப் பாடிக் காட்ட வல்லவரும்; பாடல் பாணரொடு — வாய்ப் பாட்டில் வல்ல பாணர்களோடு; எண் அரும் சிறப்பின் இசை சிறந்து ஒருபால் — எண்ணுதற்கரிய சிறப்பினையுடைய இசைகளை எழுப்பி ஒரு பக்கம் சிறக்க;

முழவுக் கண் துயிலாது — முழவினுடைய கண்கள் ஓய்வு பெறாமல்; முடுக்கரும் — சிறிய தெருக்களிலும்; வீதியும் — தேரோடும் பெரிய வீதிகளிலும்; விழாவுக்களி சிறந்த — விழாக் கொண்டாட்டம் சிறப்புற்ற; வியலுள் ஆங்கண் — அகன்ற ஊரிடத்தில்;

ஓம்படை — பாதுகாப்பு; அறத்தைப் பாதுகாக்குமிடம் அறனோம்படை, விழாக் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியினாலே காவலில் வைக்கப்பட்ட பகைவர்களை அரசன் விடுதலை செய்தான். கண்ணுளாளர்— இசைகாரர். வியலுள் — அகன்ற ஊர்.]

★

(*189—201*) நகர வீதிகளில் வேடிக்கை பார்த்துக் கொண்டு, இளைஞர்கள் விலை மாதர்களோடு திரிகிறார்கள். தம் காதலரைப் பிரிந்த பெண்கள், துக்கத்தில் மூழ்கித் தம் வீட்டை விட்டு வெளிவராமல் இருக்கிறார்கள். மாதவிக்கு இவ்வித நிலைமை வரவில்லை. கோவலனும், மாதவியும் களிப்போடு தெருவில் சுற்றித் திரிகிறார்கள். தெருக்களிலெல்லாம், இன்பக்களிப்பை ஊட்டும் ஒரே கோலமாயிருக்கிறது. முல்லை, மல்லிகை, இருவாட்சி, குவளை செங்கழுநீர் என்ற இவைகளால் தொடுக்கப்பட்ட மாலைகளைக் கோவலனும் மாதவியும் அணிந்திருக்கிறார்கள். நாளங்காடியில் கடைகளிலெல்லாம், பலவிதப் பூக்கள் குவியல் குவியலாக நிறைந்து, நறுமணத்தை வீசுகின்றன. சந்தனமும், அகிற் புகையும் நிறைந்த மேனியுடனே, பெண்கள் கும்பல் கும்பலாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கோவலன் காமக் குறிப்பான இன்பமொழிகளைப் பேசுகின்றான். கோவலனுடன் சில இசைகாரர்களும், நகரக் காமுகர்களும் திரிகிறார்கள்.

கோவலன் மாதவியுடன் திரிதல்

189 காதற் கொழுநனைப் பிரிந்து, அலர் எய்தா,
மாதர்க் கொடுங் குழை மாதவி தன்னொடு,
இல்வளர் முல்லை, மல்லிகை, மயிலை,
தாழிக் குவளை, சூழ் செங்கழுநீர்
மயில்பூம் கோதைப் பிணையலிற் பொலிந்து,
194 காமக் களி மகிழ்வு எய்திக், காமர்
பூம் பொதி நறுவிரைப் பொழிலாட்டு அமர்ந்து;

நாள் மகிழ் இருக்கை நாளங்காடியில்,
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப் ;
புகையும் சாந்தும் புலராது சிறந்து,
199 நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்,
குரல் வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு,
திரிதரு மரபின் கோவலன் போல ;

பதவுரை

[காதற் கொழுநனைப் பிரிந்து — தன்னால் காதலிக்கப்பட்ட கணவனைப் பிரிந்து; அவர் எய்தா — அவரை அடையாத; காதலி தன்னொடு — மாதவியோடு; இல் வளர் முல்லை — வீட்டில் வளர்கின்ற முல்லைப் பூ; மல்லிகை — மல்லிகை மலர்; மயிலை — இருவாட்சி; தாழிக்குவளை — தாழிகளில் வளர்ந்த குவளைமலர்; சூழ் செங்கழுநீர் — வண்டுகள் சூழ்ந்த செங்கழுநீர்ப் பூ; (ஆகியவைகளால்) பயில் பூம் கோதைய பிணையலின் பொலிந்து — நெருங்கத் தொடுக்கப்பட்ட பூ மாலையாகிய பிணையல் என்ற மாலைவகையால் அழகு பெற்றும்: காமக் களி மகிழ்வு எய்தி — காமக் கிளர்ச்சியால் மிக்க களிப்படைந்து: காமர் பூம்பொதி நறுவிரை — விருப்பந்தரும் பூக்கள் நிறைந்து நறு மணமுள்ள; பொழிலாட்டு அமர்ந்து — சோலையில் விளையாடுதலை விரும்பியும்; நாள் மகிழ் இருக்கை நாள் அங்காடியில் — நாள் தோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பினை யுடைய; நாள் அங்காடியில் — காலைக் கடையில்; பூமலி கரணத்து — பூக்கள் நிறைந்த இடமான பூவிற்கும் இடங்களில்; புது மணம்புக்கு — புதிய மணத்தினுள் புகுந்தும்; புகையும் சாந்தும் புலராது சிறந்து — அகிற் புகையும் சந்தனமும் காய்ந்து விடாமல் மேலும் பூசி அழகு மிகுந்தும்; நகை ஆடு ஆயத்து நன்மொழி திளைத்து — நகைத்து விளையாடுன்ற கூட்டத் தோடு காமக் குறிப்பான இன்ப மொழிகளை இடைவிடாது பேசியும்; குரல் வாய்ப் பாணரொடு — குரல் என்னும் இசையைப் பாடவல்ல பாணர்களோடும்; நகரப் பரத்தரொடு — நகரத்து காமுகர்களோடும்; திரிதரு மரபின் — திரிகின்ற இயல் போடே; கோவலன் போக — கோவலன் செல்ல ;

அலர் — தன் காதலனைப் பிரிந்து வருந்துவதைப் பற்றி, ஊரார் கூறும் சொற்கள். தாழி — சிறு தொட்டி; ஆயம் — கூட்டம், திளைத்தல் — இடை விடாது பேசுவது.

★

(202—227) சித்திரை மாதம் இளவேனிற் காலம். சுருதி பாடும் வண்டோடு, தென்றற் காற்று நகர வீதிகள் எங்கும் திரிகின்றது. அந்தத் தெருக்களில், கண்டோர் கண்ணைக் கவரும் அழகுடைய விலை மாதர்கள், மன்மதன் படை வீரர்களைப் போலத் திரிகிறார்கள். நிலா வானது, தன்னுடைய பகைவனான இராகுவுக்கு பயந்து, புகார் நகரத் திற்கு வந்து விட்டதோ என்று தோன்றுகிறது, அவர்களுடைய முகத் தைப் பார்த்தால். அவர்களுடைய கரிய கூந்தல் நிலாவைச் சுற்றியிருக் கும் கரிய மேகங்கள் போல் இருக்கின்றது. நிலாவிடத்தில் ஒரு களங்கம் உண்டு; ஆனால், இப்பெண்களுடைய முகத்தில் களங்கம் என் பதே கிடையாது. கயல் மீன் போன்ற கண்களும், குமிழம் பூப்

போன்ற மூக்கும் இப்பெண்களின் முகத்தை அழகு செய்கின்றன. இவர்களுடைய உருவத்தைப் பார்த்தால், மின்னற் கொடியோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. மின்னற் கொடி என்ருலும் சாதாரணமான மின்னற் கொடியல்ல. மன்மதன், குளிர்ந்த நிலாவையே நிலமாகக் கொண்டு, அந்த நிலத்தில், அமுதம் என்னும் நீரைப் பாய்ச்சி வளர்த்த கொடியான மின்னற் கொடி இது. சோழ மன்னனுக்கு, எல்லாச் செல்வத்தையும் கொடுக்க லட்சுமி புகார் நகரத்தில் குடி கொண்டிருக்கிருள். தாமரையானது, அவளைத் தேடிக் கொண்டு, இந்தப் பெண்களைப் போல் மாறு வேடம் பூண்டு இவ்விதம் வந்ததோ என்று தோன்றும். இப்பெண்களுடைய உறுப்புக்களைப் பார்க்கும் போது, இவர்கள் தம்மைக் கண்டவர் உயிரை மயக்கித் தம் வசப்படுத்தும் வலிமையை உடையவர்கள்; இந்த வலிமையைப் பார்க்கும் போது, நீதி நெறி தவ்ருமல், அரசு புரியும் சோழ மன்னனுடைய நாட்டில் புகுவதற்கு அஞ்சி, யமனே இப்பெண்ணுருவாக வந்தானே என்று தோன்றும்.

தெருவில் திரியும் நகர இளைஞர், இப்பெண்களைப் பார்த்ததும், அவர்களை இழுத்துத் தழுவியதால், இப்பெண்கள் மார்பில் இருக்கும் சந்தனக் குழம்பு, தங்கள் மார்பில் பட்டது. இந்தக் கோலத்தோடு, இந்த இளைஞர்கள் தங்கள் மனைவியரை அடைந்தார்கள்.

தெருவில் திரியும் விலைமாதரும் நகர இளைஞரும்

இளிவாய் வண்டினொடு இன்னிளவேனிலொடு,
மலய மாருதம் திரிதரும் மறுகில்
கரு முகில் சுமந்து, குறுமுயல் ஒழித்து, ஆங்கு —
இரு கருங் கயலோடு இடைக்குமிழ் எழுதி,
அங்கண் வானத்து அரவுப் பகை அஞ்சித்
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டு கொல்?
நீர்வாய் திங்கள் நீள் நிறத்து, அமுதின்
சீர்வாய்த் துவலைத் திருநீர் மாந்தி,
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த,
வான வல்லி வருதலும் உண்டு கொல்?
இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்,
திருமகள் புகுந்தது, இச்செழும்பதியாம் என?
எரி நிறத்து இலவமும், முல்லையும் அன்றியும்,
கருநெடுங் குவளையும், குமிழும் பூத்து, ஆங்கு —
உள்வரிக் கோலத்து உறுதுணை தேடிக்,
கள்ளக் கமலம் திரிதலும் உண்டு கொல்?
மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சிப்,
பல் உயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்,
ஆண்மையின் திரிந்து, அருந்தொழில் திரியாது,
நாணுடைக் கோலத்து நகை முகம் கோட்டிப்,
பண்மொழி நரம்பின் திவவுயாழ் மிழற்றிப்,
பெண்மையின் திரியும் பெற்றியும் உண்டு என;
உருவிலாளன் ஒரு பெருஞ் சேனை
இகல் அமர் ஆட்டி, எதிர் நின்று விலக்கி, அவர்
எழுதுவரிக் கோலம் முழுமையும் உறீஇ,
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொடு;

பதவுரை

[இளிவாய் வண்டினொடு — இளி என்னும் சுரத்தைப் பாடுகின்ற வண்டுகளோடும்; இன் அளவேனிலொடு — இனிய இளவேனிலோடும்; மலய மாருதம் — பொதிய மலையிலிருந்து வரும் தென்றற் காற்று; திரிதரு மறுகில் — உலாவுகின்ற தெருக்களில்;

கருமுகில் சுமந்து — கரியமேகத்தைச் சுமந்து; குறு முயல் ஒழிந்து — சிறிய முயல் போன்ற களங்கத்தை நீக்கி; ஆங்கு —; இருகரும் கயலோடு — இருபக்கங்களிலும் இரண்டு கரிய கயல் மீன்களோடும்; இடைக் குமிழ் எழுதி — அவற்றின் நடுவில் ஒரு குமிழம் பூவையும் பெற்று; அம் கண் வானத்து — அழகிய இடத்தையுடைய வானத்தில்; அரவுப் பகை அஞ்சி — பாம்பு தன்னைப் பிடிக்கும் என்ற பகைமைக்கு அஞ்சி; திங்களும் — சந்திரனும்; இண்டுத் திரிதலும் உண்டுகொல் — இவ்வுலகில் வந்து திரிவதும் உண்டோ;

நீர் வாய் திங்கள் நீள் நிலத்து—குளிர்ச்சி பொருந்திய சந்திரனாகிய நீண்ட நிலத்திலே; அமுதின் சீர் வாய் — அமுதத்தின் சீர்மை வாய்ந்த; துவலைத் திருநீர் — துளிகளையுடைய அமுத கலையாகிய நீரை; மாந்தி — குடிக்கச் செய்து; மீனேற்றுக் கொடியோன் — ஆண் மீன் எழுதப் பட்ட கொடியுடைய மன்மதன்! மெய்பெற வளர்த்த — வடிவு நன்கு விளங்கும் படியாக வளர்த்தெடுத்த; வானவல்லி வருதலும் உண்டு கொல் — மின்னற் கொடி இந்நிலவுலகில் வருதலும் உண்டோ?

இருநில மன்னற்கு — பெரிய உலகத்தை ஆளும் மன்னவனுக்கு; பெரு வளம் காட்ட — மிக்க வளத்தைக் காட்டுவதற்காக; திருமகள் — லட்சுமி; இச்செழும்பதி — இச்செழிப்பான நகரில்; புகுந்தாம் என — புகுந்தாளாம் என்று; எரி நிலத்து இலவமும் — நெருப்புப் போலச் சிவந்த நிறத்தையுடைய இலவம் பூவும்; முல்லையும் அன்றியும் — முல்லைப் பூவையும் அல்லாமல்; கருநெடும் குவளையும் குமிழும் பூத்து — கரிய நீண்ட குவளை மலரும் குமிழப் பூவும் பூத்து; ஆங்கு — அந்நகரில்! உள்வரிக் கோலத்து உறுதுணை தேடி — வேறு உருவத்தோடு தனக்கு உற்ற துணைவியாகிய திருமகளைத் தேடிக் கொண்டு: கள்ளக் கமலம் திரிதலும் உண்டுகொல் — கள்ளத் தனமுடைய தாமரை திரிவதும் உண்டோ?

பல் உயிர் பருகும் பகுவாய்க் கூற்றம் — பல உயிர்களையும் கொல்லுகின்ற, பிளந்த வாயையுடைய எமன்; ஆண்மையின் திரிந்து— தன் ஆண்மைத் தன்மையினின்றும் மாறுபட்டு; (அதாவது, ஆண்மைத் தன்மையை விட்டு) தன் அரும் தொழில் திரியாது — தன்னுடைய அரிய கொலைத் தொழிலில் மாறு படாமல்; நாணுடைக் கோலத்து — நாணம் நிறைந்த உருவத்தோடு; நகை முகம் கோட்டி— இனிய புன்முறுவல் பூத்த முகத்தையும் எழுதி; பண்மொழி நரம்பின் — இனிய இசையைப் பாடுகின்ற நரம்பினையுடைய; திவவு யாழ் மிழற்றி — கட்டமைந்த யாழில் இசையை எழுப்பி; பெண்மையின் திரியும் — பெண்ணுருவோடு திரிகின்ற; பெற்றியும் உண்டென — தன்மையும் உண்டு கொல் என்று;

உருவிலாளன் ஒரு பெருஞ் சேனை — மன்மதனுடைய ஒப்பில்லாத பெரிய சேனையாகிய மகளிரை; இகல் அமர் ஆட்டி — காதற் சண்டைக்கு இழுத்து வென்று; எதிர் நின்று விலக்கி—அக்காமுகர்கள் அவரெதிரே நின்று தடுத்து; அவர் எழுது வரிக் கோலம் — அம்மகளிர் தமது முலைகளில் எழுதிய தொய்யில் முதலிய அழகிய வரிகள்; முழுமெய்யும் உறீஇ — தமது மார்பு முழுவதும் படிந்து; விருந்தொடு புக்க — அப்புதிய கோலத்தோடு வீட்டிலே புகுந்த; பெருந்தோட் கணவரொடு — பெரிய தோளையுடைய தமது கணவருடனே ;]

★

(228—34) அருந்ததியைப் போல், பத்தினிகளான மனைவியர், தம் கணவர் வரும் கோலத்தைக் கண்டு, கோபத்துடன் சிவந்த கண்ணோடு இருக்கிறார்கள். கணவனுடன் கூடிய பின்னரும், சினம் தணியவில்லை. இதைக் கண்ட கணவர், "இக்கலவி யின்பத்திலும் தீராத கடைச்சிவப்பைத் தீர்க்கும் மருந்து, இவ்வுலகில் வேறு என்ன இருக்கின்றது" என்று தெரியாமல் நடுங்குகின்றனர்.

இவர்கள் தங்கள் மனைவியரை அடைதல்

உடன் உறைவு மரீஇ, ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனை உறை மகளிர்,
மாதர் வாள் முகத்து மணித் தோட்டுக் குவளைப்
போது புறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்திலதாயின், யாவதும்
மருந்தும் தருங்கொல் இம் மாநில வரைப்பு எனக்
கையற்று நடுங்கும் நல்வினை நடுநாள் ;

பதவுரை

உடன் உறைவு மரீஇ — தம் கணவருடன் கூடி வாழ்தலைப் பெற்று; ஒழுக்கொடு புணர்ந்த — இல்லற ஒழுக்கத்துடனே பொருந்திய; வடமீன் கற்பின் — அருந்ததி போன்ற கற்பையுடைய; மனை உறை மகளிர் — இல்லற மகளிரின்; மாதர் வாள் முகத்து — அழகிய ஒளிபொருந்திய முகத்தில் உள்ள; மணித் தோட்டுக் குவளைப் போது — நீலமணி போலும் இதழ்களை யுடைய குவளை மலரின் அழகை; புறங் கொடுத்து — தோற்கடித்து; போகிய செங்கடை — நீண்டு சிவந்த கடைக் கண்ணின் சினம்; விருந்தின் தீர்ந்திலது ஆயின் — நாம் இப் புதிய கோலத்தோடு வந்திருந்தும் தீராது போனால்; இம் மாநில வரைப்பு — இப் பெரிய நிலவுலகம்; யாவதும் மருந்தும் தருங்கொல் — இதைத் தீர்க்க ஒரு சிறு மருந்தும் வல்லதோ?; என — என்று; கையற்று — செயலற்றுப் போய்; நடுங்கும் — நெஞ்சு நடுங்குகின்ற; நல்வினை நடுநாள் — நல்ல விழாச் சிறப்பை யுடைய நடு இரவிலே ;]

★

(235—40) இந்திர விழா நாளில் ஊரெங்கும் ஆடல், பாடல், காதல் ஆகிய களிப்புகள் நிறைந்திருக்கக் கணவனைப் பிரிந்த கண்ணகியின் துயரமான நிலை எவ்வளவு பரிதாபமானது. தன் உள்ளத்தில் உறையும் துயரத்தை என்ன மறைத்த போதிலும், கண்களில் நீர் சொரிந்து, கண்கள் சிவக்கின்றன. மாதவியோ, காதலனுடன் கூடி,

அளவில்லாத மகிழ்ச்சி பெற்றிருக்கிறாள். இவளும், தன் உள்ளத்தில் உள்ள களிப்பை மறந்தாலும், கண்களில், ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது. விலை மாதரோடு கூடித் திரிந்த நகர இளைஞர் தம் வீடு சேர்ந்து மனைவியரை அடைந்தார். கோவலனும், அம்மாதிரிப் பத்தினியாகிய தன் மனைவியை எப்போது அடைவானோ? இவனும் விரைவில் திரும்பி வருவான் என்னும் குறிகள் தோன்றுகின்றன. மாதவிக்கு, அவளுடைய வலது கண் துடிக்கின்றது. கண்ணகிக்கு இடது கண் துடிக்கின்றது. பெண்களுக்கு இடது கண் துடித்தால் விரைவிலே நன்மை உண்டாகும் என்பதற்கு, அது ஓர் அறிகுறி.

கண்ணகியின் துயரம்

உள்உக நறும்தாது உறைப்ப, மீது அழிந்து,
கள்உக நடுங்கும் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும்
உள் நிறை கரந்து அகத்து ஒழித்து, நீர் உகுத்தன ;
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன ;
விண்ணவர் கோமான் விழவு நாளகத்து என்.

பதவுரை

[உள் உக நறும்தாது உறைப்ப — உட்புறம் சிதைந்து அதனால் நறுமணமுள்ள தாதுக்கள் தேனைச் சொட்டிட விடுவதால்; மீது அழிந்து— பூவின் மேற் பகுதி அழிந்து ; கள் உக — தேன் கீழே வழிந்து விழ ; நடுங்கும் — நடுங்குகின்ற ; கழுநீர் போல — செங்கழுநீர்ப் பூப்போல்; கண்ணகி கருங்கணும் — கண்ணகியினுடைய கரிய கண்களும் ; மாதவி செங்கணும் — மாதவியினுடைய சிவந்த கண்களும் ; உள்நிறை கரந்து — கண்ணகி உள்ளுக்குள் தமது கற்பையும், மாதவி உள்ளுக்குள் தனது நிறைந்த களிப்பையும் மறைத்து ; ஒளித்து — மூடி வைத்தலால் ; நீர் உகுத்தன — கண்ணீரைச் சிந்தின ; எண்ணுமுறை — கூறிய முறைப் படியே ; வலத்தினும் இடத்தினும் துடித்தன — வலப் பக்கத்தினும், இடப் பக்கத்தினும் துடித்தன ; விண்ணவர் கோமான் விழவு நாளகத்து — இந்திரனுடைய விழா நாளிலே.

உறைத்தல் — சொட்டுதல். கண்ணகி தன் கணவனைப் பிரிந்து வாடுவதால், அவள் கண்களைக் கருங்கண் என்றார். மாதவி கோவலனுடன் கூடி மகிழ்தலால், அவள் கண்கள் செங்க்ண் எனப்பட்டன.]

இந்திர விழவூ ரெடுத்த காதை முற்றிற்று.

மனோச் சித்திரம் :

சந்திப்பு

(ஆர். பர்னபாஸ்)

திருநாகேஸ்வரம்

எனதன்புள்ள ஜயராமனுக்கு,

சகல சம்பத்தும் உண்டாகும்· முன் தபாலில் நீ தெரிவித்தபடி உனக்கு லீவு கிடைக்குமானால் எடுத்துக் கொண்டு ஊர் வந்து போகவும். உன் தங்கை கலியாண விஷயம்பற்றி கொஞ்சம் பேச வேண்டியிருப்பதால் அவசியம் வந்து போக வேண்டும்.

இப்படிக்கு,

உன் பிரியமுள்ள அம்மா

ருக்மணி

ஜயராமனுக்கு செக்ரடேரியட்டில் வேலை. ஜுடீஷில் பகுதியில் உள்ள காரியதரிசிக்கு, பெர்சனல் கிளார்க்காக வேலை பார்த்து வந்தான். மாதச் சம்பளம் ரூ. 80. ராயப்பேட்டையில் மாதம் ரூ. 15-க்கு ஒரு அறை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தானும், தன் ஆபீஸிலுள்ள மற்றொரு குமாஸ்தாவுமாக இருந்து வந்தனர். ஜயராமனுக்கு 23 வயதிருக்கும், லட்சணமான பிள்ளை. நடை உடை விஷயத்திலும் மேல்நாட்டு மோஸ்தரையே கையாண்டு வந்தான். சொந்த ஊர் திருநாகேஸ்வரம், கும்பகோணத்திற்கு முந்தின ஸ்டேஷன். ஊரில் விதவையான தன் தாய்க்கு அரை வேலி நஞ்சை நிலமிருக்கிறது. அதன் மாசூலைக் கொண்டும், தன் சம்பாத்தியத்தில் எஞ்சும் சொற்ப தொகையைக் கொண்டும் அவன் தாயும், தங்கையும் ஏதோ கண்ணியமாய் காலம் கடத்தி வந்தார்கள். அந்தத் தங்கையின் கல்யாணத்தை முன்னிட்டுத்தான் ருக்மணி, ஜயராமனுக்கு மேற்கூறிய கடிதம் எழுதினாள்.

ஜயராமன் ஆபீஸில் ரஜா பெற்றுக் கொண்டு, ஒரு சூட்கேசுடன் மாலை 7-40க்கு புறப்படும் வண்டிக்கு 6-மணிக்கே எக்மோர் ஸ்டேஷன் வந்தடைந்தான். திருநாகேஸ்வரத்திற்கு டிக்கட் வாங்கிக் கொண்டு நெருக்கமில்லாத ஒரு பெட்டியைப் பார்த்து உட்கார்ந்து கொண்டான். பிரயாணிகள் வந்து குவிந்து கொண்டே இருந்தார்கள். மணியும் 7-30 ஆயிற்று. ஜயராமன் பையிலிருந்த ஒரு பாக்கெட் சிகரெட்டுகளும் புகைந்து போய் விட்டன. பிளாட்பாரத்தில், பச்சை தலைப்பாகை அணிந்த ரயில்வே அதிகாரிகளும், மூட்டைகள் தூக்கி வந்த போர்ட்டர்களும், கருப்புக் குல்லாயணிந்த மங்கின விளக்கொளி யிடையே தென்பட்டனர். வழியனுப்பிச் செல்ல வந்த ஆண்களும், பெண்களும், ரயில் எங்கு ஓடிப் போகிறதோ என்ற தோரணையில் ஜன்னல்களையும், கதவுக் கம்பிகளையும் பிடித்துக் கொண்டு ஏதேதோ பேசிக் கொண்டு நின்றனர். மணி 7-40 ஆயிற்று. "கிணுகிணு" என்று மணி ஒருமுறை ஒலித்து ஓய்ந்தது. இந்த சமயத்தில் ஒரு போர்டர் பெரிய பெட்டி ஒன்றைத் தூக்கிக் கொண்டு மூச்சுத்திணற ஓடிவந்தான். அவன் பின்னே ஒரு பெண்ணும் விரைந்து வந்தாள். அங்கு நின்ற கார்டு அவளை மிகத் துரிதப் படுத்தவே இடவசதியைக் கவனிக்காமல் ஜயராமன் பெட்டியில் ஏறினாள் அந்தப்பெண்.

இதற்கு முன்னதாகவே அநே கருக்கு நிற்கத்தான் இடம் கிடைத்தது. இருந்த போதிலும் அவனுடைய பலகையில் உட்கார்ந்திருந்த மூன்று பெண்கள், புதிதாய் வந்த பெண்ணுக்கும் ஒண்டி ஒடுக்கி ஒருவாராய் கொஞ்சம் இடம் கொடுத்தார்கள். இத்தனைக்குள் வண்டியும் ஜிலு ஜிலுவென்று கூட்டிலிருந்து விடுபட்ட பறவை போல பறந்து கொண்டு புறப்பட்டது.

17 நபர்கள் உட்கார வேண்டிய அந்தப் பெட்டியில் ஏறக்குறைய 40 பேர் அடைந்திருந்தார்கள். அவர்களில் கடைசியில் வந்தவளைச் சேர்த்து 4 பெண்கள். ஏனையோர் ஆண்கள். இவர்களில் தமிழ்த் தெரிந்தவன் ஜயராமன் ஒருவன்தான். மற்றவர்களெல்லாம் வடதேசத்திலிருந்து சிலோனுக்குப் போகிறவர்கள். ஆனுல் அங்கு உட்கார்ந்திருந்த மூன்று பெண்களும் எங்கு போகிருர்கள் என்பது மட்டும் தெரியவில்லை ஜயராமனுக்கு.

தாம்பரத்தில் வந்து நின்ற சில விஞடிகளுக்கெல்லாம் வண்டி திரும்பவும் புறப்பட்டது. ஜன்னலருகே உட்கார்ந்திருந்த ஜயராமன் தலையை வெளிப் பக்கம் நீட்டி நிலவொளியில் ஓடிக்கொண்டிருந்த வயல்களையும், மரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கும் சமயம்...... "நீங்கள் எவ்வளவு தூரம் போகிறீர்களோ?" என்று கணீரென்று ஒரு கேள்வி கேட்டு அவனையும் அறியாமல் உட்புறம் திரும்பினுன். இந்தக் கேள்வி உண்மையிலேயே அவனைக் கேட்டதல்ல. நான்காவதாக வந்த பெண், பக்கத்திலுள்ள பாட்டியம்மாளைக் கேட்ட கேள்வி அது.

"நாங்கள் மூன்று பேரும் காஞ்சீபுரம் வரையில் போகிருேம் அங்கு ஒரு பிரார்த்தனை" என்று அந்த பாட்டி சொன்னவுடன் அப்பெண்ணின் முகம் சற்று மாறுபட்டு தெளிந்தது. ஆம். காஞ்சீபுரத்திற்கு செங்கற்பட்டில் வண்டி மாறியாக வேண்டும். இன்னும் 10 நிமிஷங்களில் வண்டியும் செங்கற்பட்டை அடைந்து விடும். இதன் பிறகு வேறு சம்பாஷணை ஒன்றும் இல்லை.

செங்கற்பட்டு ஜங்ஷனில் மேற்சொன்ன மூன்று பெண்களும் இறங்கி விடவே, கீழே உட்கார்ந்திருந்த மீசை தாடிகளோடு கூடிய சிலர் காலியாயிருந்த இடத்தைக் கைப்பற்ற முன் வந்தார்கள். இதற்குள் அந்தப் பெண் சட்டென்று எழுந்து ஜயராமன் எதிரில் வந்து, அவனுக்கும், முன் உட்கார்ந்திருந்த மூன்று பெண்களுக்குமிடையே செங்குத்தாய் வைக்கப் பட்டிருந்த அவனுடைய சூட்கேசை சுட்டிக் காட்டி 'இதை அந்தப் பக்கமாய் தள்ளி வைத்து எனக்கு இந்தப் பக்கம் (அவனுக்குப் பக்கத்தில்) கொஞ்சம் இடம் தருவீரா?" என்று கனிவுடன் இயற்கையான நாணத்தோடு கேட்டாள். இதற்கு பதில் சொல்ல முடியாமல் ஜயராமன் அவள் கேள்வியை வரவேற்கும் பாவனையுடன், பெட்டியை ஒரு ஆள் உட்காரும்படி இடம் விட்டுத் தள்ளி, தானும் ஜன்னலோடு ஜன்னலாய் ஒட்டி உட்கார்ந்து கொண்டு அப்பெண்ணுக்கு இடம் விட்டான். அவளும் தன் நன்றியைக் கூறி அவன் பக்கத்திலமர்ந்து கொண்டாள்.

இப்பொழுது இவர்கள் இருவர் தவிர தமிழ்த் தெரிந்தவர்கள் அங்கே வேறு எவரும் இல்லை. வண்டி செங்கற்பட்டை விட்டு வெகு தூரம் சென்று கொண்டிருந்தது. 'கய் மொய்'

ன்று ஏதோ அன்னிய பாஷை யில் பேசிக் கொண்டிருந்த தாடிக் காரர்கள் வாயைப் பிளந்து பல மோஸ்தரில் குறட்டை விட ஆரம் பித்தனர், ஜயராமனுக்கு கொஞ்ச மேனும் தூக்கம் வர வில்லை. அப்பெண்ணுக்கும் அப்படியே எனலாம்.

அவளுக்கு சுமார் 18 வயதிருக் கும். நல்ல வெட்டுள்ள முகம், பாவனைகளும் தற்கால மேம் பாடான நாகரிகத்திற்கு கொஞ்ச மாகிலும் கீழ்ப்பட்டதல்ல. ரயில் ஓடும் வேகத்தில் அவள் பூசியிருந்த 'சென்டின்' வாசனை காற்றில் கலந்து வந்து ஜயராமன் மூக்கைத் துளைத்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கிடையே அவனுக்கு தூக்கம் வராதது நியாயம் தானே!

இவனுக்கு இப்படியென்றால், மடம், நாணம் கொண்ட, ஒரு யுவதி முன்பின் அறியாத ஒரு வாலிபனின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு எப்படி கண் அயரமுடியும். அவனுக்கோ ஒரு பெண் தேவதையின் பிரசன் னத்தால் தூக்கம் பிடிக்கவில்லை. அவளுக்கோவெனில் மேற் சொன்ன காரணத்துக்கு மேலாக, செங்கற்பட்டில் தன்னைத் தனியே விட்டுச்சென்ற பெண்களைப்போல் இவனும் அடுத்த ஸ்டேஷனில் இறங்கினால் இந்த காட்டு மிராண் டிகளிடையே தான் என்ன செய் வது என்று யோசிக்கும் போது தூக்கத்திற்குப் பதில் திகில் அதிக ரித்தது. வண்டி நின்றவுடன் வேறு கம்பார்ட்மெண்டில் ஏறி உட்காரலாமென்றால் பளுவான பெட்டி ஒன்றிருக்கிறது. அதற்கு மேல் எல்லா கம்பார்ட்மெண்டு களிலும் அளவு மீறிக் கூட்டம் இருக்கிறது. தன் சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு 'நீங்கள் எவ்வளவு தூரம் போகிறீர்கள்... நான் மாயவரத்திற்கு அடுத்தாற் போல் உள்ள குற்றாலம் போக வேண்டும். துணை யாருமில்லையே என்றுதான் கேட்டேன்' என்று முதன் முதலாக சம்பாஷணையைத் தொடங்கினாள். ஜயராமன் ஒரு புன்முறுவல் செய்து தான் திருநாகேஸ்வரம் போவதாகவும், குற்றாலம் தாண்டியே தன் ஊர் போக வேண்டியிருப்பதால் துணை யைப் பற்றி கவலைப்பட வேண்டா மென்றும் சொன்னான். இதைக் கேட்ட அப்பெண் ஆச்சரியத் துடன் 'அப்படியானால் என் ஸ்டேஷன் தாண்டி நான்காவது ஐந்தாவது ஸ்டேஷன் தான் உங்களுக்கு, ரொம்ப சௌகரிய மாய் போயிற்று...... நீங்களில்லை யானால் என்பாடு பெரிய திண்டாட்டமாகப் போயிருக்கும்" என்று மிகவும் தாராளமாக தன் நன்றியைத் தெரிவித்தாள்.

ஜயராமனுக்கு குற்றாலம் நன்றாகத் தெரியும். அங்குதான் அவனுடைய மாமா வசிக் கிறார். அவளை மேலும் ஏதாவது கேட்கலாம் என்று எண்ணி 'குற்றாலத்தில் அப்பாவுக்கு என்ன வேலை? — நீங்கள் ஏது, தனியாக இவ்வளவு தூரம்— எனக்கு குற்றாலத்தில் அநேகரைத் தெரி யும்" என்று கேட்டான். "நான் க்வீன் மேரிஸ் காலேஜில் இண்டர் மீடியட்— இரண்டாவது வருஷம், பரீட்சை எழுதியிருக் கிறேன். என் அப்பா பலரா மய்யர் பூர்வீகமாக குற்றாலத்தி லேயேதான் வசித்து வருகிறார். 2 வேலி சாகுபடி, அவரை அங்கு சுற்றுப் புறத்தில் 15, 20 மைல் வட்டாரத்திற்கு தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். பஞ்சாயத்துப் போர்டு கோ-ஆப் ரேடிவ் சொசைட்டி எல்லாம் அவர் கையில்தான்" இப்படியாக அப்பெண் வரிசையாக அடுக்கிக் கொண்டே போகப் போக

ஜயராமனின் முகம் ஆச்சரியத்தினாலும், ஆவலினாலும் பூரித்தது. இவ்வளவு நேரம் தூக்க மயக்கத்தால் சோம்பிச் சுருங்கி யிருந்த அவன் கண்களில் ஒளி வீசத் தொடங்கிற்று. சாய்ந்து கொண்டிருந்தவன் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். இவ்வளவு மாறுதல்களையும் அப்பெண் உணரவுமில்லை, எதிர் நோக்கவுமில்லை.

வண்டியும் விழுப்புரம் வந்தடைந்து சில நிமிஷங்களில் மெயின் லைன் வழியாக பறந்து கொண்டிருந்தது. ஜயராமனுக்கு ஏற்பட்ட மாறுதல் ஆச்சரியப்படத் தக்கதல்ல. போன வருஷம் ரஜா வாங்கிக் கொண்டு ஊர் வந்திருக்கும் சமயம் குற்றாலத்தில் வாழும் தன் மாமா திருநாகேஸ்வரம் வந்து பலராமய்யரைப் பற்றியும், அவர் மகள் சாந்தாவைப் பற்றியும் மிகவும் சொல்லியிருக்கிறார். சாந்தா மதராசில் படித்துக் கொண்டிருப்பதையும் தெரிவித்திருக்கிறார். தவிர பலராமய்யரும் நெருங்கிய சிநேகிதர்கள் ஒருவர் வார்த்தை மற்றொருவர் மீற மாட்டார்கள். அதற்கு மேலாக ஜயராமனுடைய தங்கைக்கு மணம் ஆன அடுத்த மாதமே சாந்தாவின் கலியாணத்தையும் முடித்துவிடலாம் என்று நிச்சயமாகி இருந்தது. இதைப் பற்றியெல்லாம் ஜயராமன் இது வரை அதிகம் சிந்திக்கவில்லை. தங்கைக்கு வரன் பார்த்த பிறகல்லவா இந்தக் காரியம். இப்படியாக அவன் அங்கு இருந்த போதிலும் ஜயராமனின் சிந்தனையெல்லாம் க்வீன்மேரீஸ் காலேஜ், திருநாகேஸ்வரம், குற்றாலம், மாமா, பலராமய்யர் இப்படியாக பல திக்குகளில் பரவிக் கிடந்தன. இதற்குள் அங்கு வந்த டிக்கட் பரிசோதகர் குறட்டை விட்டுக் கொண்டிருந்த மீசைக்காரர்களை யெல்லாம் தாண்டி, சம்பூாஷித்துக் கொண்டிருந்த இவர்களிடம் வந்து, ஜயராமனை நோக்கி 'ஸார், டிக்கட்' என்று கேட்டதும் ஜயராமன் 'சுய' உணர்வுற்று, கோட்டின் நான்கு பைகளிலும் தேடி டிக்கட்டை எடுத்து நீட்டினான். பரிசோதகர், 'என்ன ஸார், ஒரு டிக்கட் தானா ......உங்க மிஸஸ்' என்று கேட்டதும், சற்று நேரம் நிலை தடுமாறி விட்டான் ஜயராமன். இன்ஸ்பெக்டர் கவனித்தாரில்லை.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சாந்தா சந்தர்ப்பத்தை சமாளிக்க சமயோஜிதமாய் தன் டிக்கட்டை எடுத்து நீட்டினாள். ஜயராமன் ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் எச்சில் உமியும் பாவனையில் எழுந்து ஜன்னல் பக்கமாய் வெளியே கழுத்தை நீட்டிக் கொண்டான். பரிசோதகர் தூக்க மயக்கத்தில் எந்த ஊர் டிக்கட்டுகள் என்று பார்க்காமலே அவைகளின் பின்புறத்தில் ஏதோ தலையெழுத்தைப் போட்டு இரண்டு டிக்கட்டுகளையும் சாந்தாவிடம் கொடுத்து விட்டு மற்றப் பிரயாணிகளை எழுப்பும் வேலையில் ஈடுபட்டான். சற்று நேரத்திற்குப் பின் தலையை வெளியே நீட்டி நின்று கொண்டிருந்த ஜயராமன் வெட்கத்தால் தலைகுனிந்து ஒரு அசட்டுப் புன்னகையுடன் சட்டென்று தன்னையறியாமல் சாந்தாவிற்கு சற்று அருகிலேயே உட்கார்ந்து விட்டான். இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்வி, திரும்பத் திரும்ப அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அது ஒரு நல்ல சகுனம் என்றே எண்ணினான். சாந்தாவின் சமயோஜிதப் புத்தியைப் பற்றியும், தனக்கு இவ்வித புத்திசாலிப் பெண் வாய்க்கப் போவதைப் பற்றியும் எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணித் தனது எதிர்கால இல்லற

வாழ்க்கையைப் பற்றி மனக் கோட்டை கட்டலானுன். இது சமயம் சாந்தா ஒரு டிக்கட்டை அவனிடம் "இந்தாருங்கோ உங்கள் டிக்கட்" என்று நாணத்துடன் நீட்டினுள். அவனும் அதை வாங்கிக் கொண்டான். மறு க்ஷணமே அவள், 'மன்னிக்க வேண்டும், டிக்கட் மாறிவிட்டன' என்று தன் கையிலிருந்த திருநாகேஸ்வரம் டிக்கட்டை அவனிடம் கொடுத்து குற்ருலம் டிக்கட்டை அவள் பெற்றுக் கொண்டாள். இச்சம்பவம் மணப் பந்தலில் தனக்கும் சாந்தாவுக்கும் நடக்கவிருக்கும் தேங்காய், பழம், அரிசி மாற்றுதலை ஜயராமன் ஞாபகத்துக்கு கொண்டு வந்தது.

இதுவரை அதிகம் கவனிக்காத ஜயராமன் இப்பொழுது அடிக்கொருமுறை தன் உயிர்த் துணையாளை உற்று நோக்கி அவள் அழகைத் திருட்டுத்தனமாய் பருக ஆரம்பித்தான். இப்படியாகத் தனக்கும் வரப்போகும் மனையாளுக்கும் ஏற்பட்ட விநோதப் பரிச்சியத்தைப் பற்றி பலவாராக சிந்தித்து ஆனந்திக்கும் சமயம், யாரோ தான் அணிந்திருக்கும் கால் சட்டையை பெஞ்சோடு சேர்த்து இழுத்தாற் போல உணர்ச்சியுற்று சாந்தாவின் பக்கமாய் திரும்பினுன் ஜயராமன்.

ஆம் அவளேதான், அவனுக்கும் பெஞ்சுக்குமிடையே சிக்கிக் கொண்டிருந்த தன் புடவையின் தலைப்பை விடுவித்துக் கொண்டிருந்தாள். எல்லாம் இந்த டிக்கட் பரிசோதகனுல் வந்த கோளாறு அல்லவா. இக்காட்சி, மணமான பிறகு இளங் குட்டிப் படைகள் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் முந்தானை முடி போட்டு திண்டாட வைக்கும் கட்டத்தை கண்முன் நிறுவியது. வண்டியும் மாயவரம் ஸ்டேஷனை அடைந்தது.

குற்ருலத்திற்கு இன்னும் இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் தான் இருக்கின்றன. இப்படியே இருவருமாக இன்னும் எத்தனை ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்வதற்குச் சித்தமாயிருந்தான் ஜெயராமன். இவ்விதமான அபூர்வ சந்தர்ப்பம் எந்த மணமகனுக்கும் கிடைத்திருக்காது என்று எண்ணினுன்.

இன்னும் ஒரு ஸ்டேஷன்தான். அடுத்த ஸ்டேஷனில் தன் மனதிற்கினிய மனைவி தன்னை விட்டு பிரியப் போகிருள் என்னும் எண்ணம் ஜெயராமனை மிகவும் வாதித்தது. தன் மாமா ஒரு வருஷத்திற்கு முன் சொன்ன விஷயத்தை ஏன் சாந்தாவிடம் சொல்லிவிடக் கூடாது. எனக்குத் தெரிந்ததை ஏன் அவளும் தெரிந்துகொள்ளக்கூடாது தெரிந்து கொண்டால் எவ்வளவோ சந்தோஷப்படுவாளே என்று கூட எண்ணினுன். ஆனுல் 'ஆக்கப் பொறுத்தது, ஆறப் பொறுக்கவில்லையோ' என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டு, அடுத்த ஸ்டேஷனில் அவளை வழியனுப்ப அவள் பெட்டியை கதவோரமாய் நகர்த்தி வைத்து நின்றுகொண்டிருந்தான் ஜெயராமன்.

வண்டியும் வந்து குற்ருலம் பிளாட்பாரத்தில் நின்றது. சாந்தாவும் இரண்டு கைகளையும் கூப்பி நமஸ்காரம் சொல்லி கீழே இறங்கினுள்.

தூயவெள்ளை ஆடை அணிந்த ஒரு சிறுவன் 'சாந்தா' என்று கூப்பிட்டு ஓடி வந்து அவள் கைகளைப் பற்றவே ஜன்னல் வழியாகச் சென்ற மின்சார விளக்கின் வெளிச்சம் அவள் உதடுகளில் புன்னகை விளையாடுவதைக் காட்டியது!

நகைச் சுவை:

சாந்தசாமியின் ஜாதகம்

கே. பி. கணபதி

மாஜி சைகிள் ரிப்பேரர் சாந்தசாமி, எதிரே யிருந்த கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே தன் அறையில் உட்கார்ந்திருந்தான். "கணர், கணர்" என்று மணி பன்னிரண்டு அடித்தது. சாந்தசாமியும் "படார் படார்" என்று பன்னிரண்டு தடவை தன் தலையில் அடித்துக் கொண்டான். தனக்கு முப்பதாவது வயசு ஆரம்பிக்கும் நேரத்தை மணி அடித்துக் காட்டிய அந்தக் கடிகாரத்தை உடைத்துத் தூளாக்கி விடலாமா என்று யோசித்தான். அந்தக் கடிகாரம் தன்னிடம் ரிப்பேருக்கு வந்தது என்பது ஞாபகத்துக்கு வரவே அவன் தன் ஓங்கிய கையை மேஜையின் மீது குத்தினன். உடனே மேஜையின் மேலிருந்த அவனுடைய ஜாதகம் ஒரு துள்ளுத் துள்ளி அவன் மடியில் வந்து விழுந்தது. "சை" என்று சொல்லி விட்டு யோசனையில் ஆழ்ந்தான். அவனுடைய முப்பதாம் வயதின் ஆரம்பம் அவனுக்கு அவ்வளவு வெறுப்பைக் கொடுத்தது.

அவனுடைய ஜாதக விசேஷப்படி, முப்பதாவது வ்யதில் அவன் களவு செய்து, அதனல் ஜெயிலுக்குப் போக வேண்டி வருமென்று முன்னமே நன்ருகத் தெரிந்து கொண்டிருந்தான். சோதிடத்தில் அவனுக்கு அபார நம்பிக்கை உண்டு. சில காலத்திற்கு முன் அவனே ஒரு ஜோசியனக இருந்தான். அவன் நடத்தி வந்த தொழில்களில் இதுவும் ஒன்று. அவனுடைய ஜாதகத்திலுள்ள கிரகங்கள் இடம் விட்டு இடம் மாறும் போது, அவனும் தொழில் விட்டுத் தொழில் மாறிக் கொண்டே வந்து, கடைசியாக கடிகார ரிப்பேரராகி ஆறு நாள் தான் ஆயிற்று. அதற்குள்ளாக அவனுடைய முப்பதாம் வ்யதின் ஆரம்பமும் வந்து விட்டது.

கண்யமாகவே வாழ்க்கை நடத்திவரும் தனக்குச் சிறைவாசம் எந்த வகையில் வரக்கூடும் என்று சாந்தசாமி தனக்குள்ளேயே பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். தான் எவ்வகையிலும் களவு செய்ய முடியாது என்ற ஒரே முடிவைத்தான் அவன் மூளை திரும்பத் திரும்பக் கூறியது. ஆனல் "களவு செய்து அதனல் சிறைவாசம்" என்று உள்ளங்கை வெள்ளரிக்காய் போல, அவ்வளவு தெளிவாகச் சொல்லியது அவனுடைய ஜாதகம். களவுக்கும் அவனுக்கும் வெகு தூரம். பொய் சொல்லவோ தெரியவே தெரியாது. (இதனலேயே அவன் ஜோசியத் தொழிலை விட்டு விட நேர்ந்தது. அவன் நல்லவனக இருந்த ஒரு குற்றத்தைத் தவிர வேறு ஒரு குற்றமும் அவனிடம் கிடையாது.)

* * *

சாந்தசாமியின் பெற்ருேர்கள் வெகு காலத்திற்கு முன்னமேயே இறந்து விட்டார்கள். அவனுக்கு உறவு என்று சொல்லக் கூடியவர்கள், அவனுடைய அண்ணன் கைலாசம் ஒருவன் தான்.

கைலாசத்துக்கும் சாந்தசாமிக்கும் வயதில் ஐந்து நிமிஷங்கள் தான் வித்தியாசம். (இருவரும் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தார்கள்.) பெற்றோர்கள் இறந்தவுடன், அண்ணனும் தம்பியும் தங்கள் வீடு வாசலை விற்றதில் ரொக்கமாக ஆயிரம் ரூபாய் வந்தது. அதை ஆளுக்கு ஐநூறாகப் பங்கு வைத்துக் கொண்டார்கள்.

கைலாசத்துக்கு ஏராளமாகப் பணம் திரட்ட வேண்டுமென்ற ஆசை. ஆகையால் தான் தம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு ரெங்கூனுக்குப் போய் விட்டான். சாமி, நாணயத்துடன் பல தொழில்களில் முயற்சி செய்த தன் பலனாகத் தன் ஆஸ்தி முழுவதையும் இழந்து விட்டான். அவன் ஜோசியத் தொழிலைக் கை விட்ட பிறகு மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய ஜாதகத்தில் கண்டிருந்தபடியே எதிர் பாராத இடத்திலிருந்து சிறிது பண உதவி கிடைத்து வந்தது. அதாவது இதுவரை தகவலே தெரிவிக்காமலிருந்த அவனுடைய அண்ணன் கைலாசம் யார் மூலமாகவோ தன் தம்பியின் கஷ்ட நிலைமையை அறிந்து, ரெங்கூனிலிருந்து இருபது ரூபாய் மணியார்டர் அனுப்பியிருந்தான். அதன் பின்னால் அவனிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. தான் ஒரு பெரிய கடையில், மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்து வருவதாகவும், அவனுக்கு மாதா மாதம் பத்து ரூபாய் அனுப்புவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

அண்ணன் அனுப்பி வந்த ரூபாயைக் கொண்டும், சில சில்லரை ரிப்பேர்கள் செய்தும் ஒரு தினுசாகத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். இவ்வாறிருக்கையில் திடீரென்று ஆறுமாத காலமாக அண்ணனிட மிருந்து பணமோ கடிதமோ ஒன்றும் வரவில்லை. சாந்தநாயகம் (சாமிக்கு 'நாயகம்' என்றும் பெயர்) எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் பதிலில்லை.

இதற்கிடையே நாயகத்தின் வாழ்க்கையில் திடீரென்று காதலும் வந்து குறுக்கிட்டு விட்டது. அவன் படங்களுக்குச் சட்டம் போடும் தொழிலை நடத்தி வந்த போது சுந்தரி என்னும் கன்னிகை தன் போட்டோ படத்திற்குச் சட்டம் போடுவதற்காக அவனுடைய கடைக்கு வந்தாள். கடை வாசலிலுள்ள சாக்கடையின் மேல் போடப்பட்டிருந்த பலகையின் மேல் அவள் நின்று கொண்டிருந்த போது பலகை அளுடைய பளுவைத் தாங்க முடியாமல் 'சடார்' என்று முறிந்து விடவே அவள் சாக்கடைக்குள் விழுந்து விடப் பார்த்தாள்.

ஆனால் தயாராகக் காத்துக் கொண்டிருந்த இரண்டு கைகள் சமய சஞ்சீவிகளாக உதவி, அவளைப் பிடித்து நிறுத்தி விட்டன. அக்கைகள் நாயகத்தின் கைகளாகவே இருந்தன. நாயகத்தின் கைகள் தன் மீது பட்டவுடன் சுந்தரிக்கு உடம்பு 'ஜில்' லென்று ஐஸ் கட்டி போலக் குளிர்ந்து விட்டது. ஆனால் காதல் பாணங்களோ சுந்தரியை நெருப்புப் போலத் தகிக்க ஆரம்பித்தன. உஷ்ணத்திற்கும் குளிர்ச்சிக்கும் நடுவே அகப்பட்டுக் கொண்ட சுந்தரிக்கு, அந்த சீதோஷ்ண நிலைமையிலிருந்து வெளியேறுவதற்கு சாந்தநாயகத்தைக் கணவனாக அடைவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால், தான் கொண்டு வந்த போட்டோவை தன் காதலனை நாயகத்திடமே கொடுத்துத் தன்னைக் காதலிக்கும்

படி சொல்லி விட்டுப் போய் விட்டாள். சாந்த நாயகத்திற்குச் சுந்தரியின் மீது முன்னமே ஏற்பட்டிருந்த ஆசை இப்பொழுது காதலாக மலர்ந்து தவழ்ந்தது.

* * *

கடிகாரத்தின் எதிரே ஒரு மணி நேரமாக ஆழ்ந்த யோசனையிலிருந்த சாந்த நாயகத்திற்கு உலகத்தின் மீது அளவில்லாத வெறுப்பு ஏற்பட்டது. "யோக்கியமாக நடக்கும் போதே தண்டனை கிடைக்கப் போகிற தென்றால், என்ன உலகம் இது!" அவனுடைய நிலைமையில் யார் இருந்திருந்தாலும் இப்படித் தான் சொல்லி யிருப்பார்கள்.

நாயகம் தன்னிட மிருந்த கடிகாரங்களை யெல்லாம் அதனதன் சொந்தக்காரர்களிடம் கொண்டு போய்க் கொடுத்து அவர்களிடம் ரசீதும் பெற்றுக் கொண்டான். ஒரு வேளை அவர்களில் யாராவது நாயகம் தங்கள் கடிகாரத்தைக் கொடுக்கவே இல்லை யென்று வழக்குத் தொடர்ந்து தன்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடலா மல்லவா! அதற்காகவே அவன் மிகுந்த முன் எச்சரிக்கையோடு ஒவ்வொருவரிடமும் ரசீது பெற்றுக் கொண்டான்.

காதல் பாதை முனிசிபல் ரோடுகள் போலக் கரடுமுரடானது என்றும் ரோஜாக் குச்சி போல முள் நிறைந்தது என்றும் எங்கேயோ படித்ததாக அவனுக்கு ஞாபகம் வந்தது. காதலனுக்கு கொடிய துன்பங்கள் வருவது இயற்கைதானே! சிறை வாசத் துன்பமும் காதலனுக்கு வரலா மல்லவா! ஆதலால் நாயகம் தன்னைக் காதலன் பதவியிலிருந்து நீக்கிக் கொண்டதாக சுந்தரிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி விட்டான். துன்பம் வரப்போவதை முன் கூட்டியே அவன் அறிந்து கொண்டதனால் அவைகளை அணை போட்டுத் தடுத்து விடுவதற்காக இந்தக் காதல் தியாகத்திலும் அவன் துணிந்து நின்றான்.

பின்பு, தன் கடிகாரக் கடையை ஒரே பத்து ரூபாய் நோட்டாக மாற்றி இடுப்பில் சொருகிக் கொண்டான்! அங்கிருந்து நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான். டிக்கட் கொடுக்கப்படும் ஜன்னல் மூடியிருந்ததால் வண்டி வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதென்று அவன் யூகித்துக் கொண்டான். 'சென்னை—திருச்சி, திருச்சி—சென்னை' என்று அவன் மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது. கால் மணி நேரப் போராட்டத்திற்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தான். கீழே கிடந்த ஒரு காகிதத்தை எடுத்து இரு சம பாகமாகக் கிழித்தான்.

ஒன்றில் திருச்சி என்று எழுதினான். மற்றொன்றில் சென்னை என்று எழுதி, இரண்டையும் மடித்துக் குலுக்கித் தன் முன்னால் போட்டான். (தர்மசங்கடமான நிலைமை ஏற்படும் போது நாயகம் இம்மாதிரித் திருவிளச் சீட்டுப் போட்டுப் பார்த்து அதன் படி நடப்பது வழக்கம், அவன் திருச்சிக்குப் போவதா, சென்னைக்குப் போவதா என்ற பிரச்சனையை அவன் எடுக்கப் போகும் ஒரு சீட்டே தீர்மானிக்க வேண்டும்.

சாந்த நாயகம் தன் கண்ணை மூடிக் கொண்டு இரண்டு சீட்டுகளில் ஒன்றை எடுக்கப் போன சமயத்தில் "பாண்டிச்சேரிக்குப் போனால் பயமில்லாமல் வாழலாம்" என்று பக்கத்தில் யாரோ சொன்னது அவன் காதில் விழுந்

த்து. உடனே நாயகம் சீட்டை எடுக்காமலே துள்ளிக் குதித்து எழுந்தான். (அவன் சீட்டை எடுக்க எண்ணியிருந்தாலும் அது அவன் கைக்கு அகப்பட்டிராது. ஏனென்றால் அவன் கண்ணை மூடிக்கொண்ட போது அடித்த காற்று அந்தச் சீட்டுகளை எங்கோ கொண்டு போய் விட்டது.) கடவுளே அசரீரியாக வந்து பிரயாணப் பிரச்சனையைத் தீர்த்துத் தனக்கு வழி விடுவதாக அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. தன் மூளையில் பாண்டிச்சேரியின் ஞாபகம் இதுவரை வராமல் போனதிற்காகத் தன் தலையில் நாலைந்து அடி அடித்துக் கொண்டான்.

உற்சாகத்தோடு கூட்டத்தை நெருக்கித் தள்ளிக் கொண்டு பாண்டிச்சேரிக்கு ஒரு முழு டிக்கட் வாங்கினுன் நாயகம். பின்பு அலட்சியமாக டிக்கட் பரிசோதகரிடம் அதைக் கொடுத்து வாங்கிக் கொண்டு "பிளாட் பார"த்தில் வந்து நின்ருன். அப்பொழுது மலர்ந்த வெண் தாமரையை வென்றது அவன் முகம். அந்தச் சமயத்தில் ஒரு வண்டு அல்லது தேனீ வழி தவறி அவன் பக்கத்தில் வந்திருந்தால் அவனுடைய உதடுகளைச் சும்மா விட்டு விடாது. அவன் மனதில் உதித்த உற்சாகம், கவி பாரதியின் "ஜெயமுண்டு பயமில்லை, மனமே" என்ற அடியை ஞாபக மூட்டியது. சாந்த நாயகத்தை வெகு சீக்கிரமாகப் பாண்டிச்சேரியில் கொண்டு சேர்ப்பதற் கென்றே ரயிலும் அன்று அரை நிமிஷம் முன்னதாக வந்து விட்டது. ரயிலில் ஏறியவுடன் அவனல் பாடாமலிருக்க முடியவில்லை. அவன் பாடப் பாட அவனுக்கு ரயிலில் தாராளமாக இட வசதி கிடைத்தது. வழி முழுதும் பாட்டுத் தான்.

அவன் பாண்டிச்சேரி ஸ்டேஷனில் இறங்கியதுமே, அந்த நகரம் தன்னை ஒரு அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொண்டதென்று கற்பனை பண்ணிக் கொண்டான்.

தனக்குச் சிறைத் தண்டனை கிடைக்குமென்ற பயம் அவனை விட்டு விலகி விட்டது. ஆனல் அவனுக்கு வயிறு என்று ஒன்று இருக்கிறதே! சாந்த நாயகம் தன் வயிறைப் பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. அவனுக்குத் தெரியாத தொழில் என்ன இருக்கிறது? பாண்டிச்சேரிக்கு என்ன 'தொழில் தேவையாக இருக்கிற தென்று கண்டு கொள்வதற்காக அவன் பாண்டிச்சேரிக் கடைத் தெருவை இரண்டு தடவை சுற்றிப் பார்த்தான்.

பாண்டிச்சேரிக்கு எத்தனையோ தொழில்கள் தேவையாக இருந்தாலும், நாயகம் தன் பொருளாதார நிலைமையை உத்தேசித்து சித்த வைத்தியம் ஆரம்பிக்கலாமென்று தீர்மானித்துக் கொண்டான். தொழிலை நடத்துவதற்கு ஒரு இடம் வேண்டுமே! கடைத் தெருவில் இரண்டொரு காலிக் கடைகளைக் கேட்டுப் பார்த்தான். அவற்றின் வாடகை, அவன் எதிர்பார்க்கும் வருமானத்தை விட நாலைந்து மடங்காக இருந்ததால், மற்ற இடங்களில் போய் அலைந்து விசாரித்தான். அவனுடைய அதிர்ஷ்டம் அவனை வெகு தூரம் அலையவைக்க வில்லை. ஊரின் வடக்கே மாதம் இரண்டு ரூபாய் வாடகையில் ஒரு சின்ன அறை வாடகைக்குக் கிடைத்தது. நாலே கேஸ்களில் தனக்கு நல்ல பெயர் கிடைத்து விடுமென்றும், பிரபலமடைந்த பின்பு, சித்தவைத்தியரான தான், எந்தப் பொந்துக்குள் பதுங்கி யிருந்தாலும் ஜனங்கள்

தேடி வருவார்களென்றும் அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. இருந்தாலும், ஆரம்பத்தில், தான் ஒரு சித்த வைத்தியர் என்பதைப் பாண்டிச்சேரி வாசிகளுக்கு எப்படித் தெரிவிப்பது? அதற்காக "நாயகம் பிரபல சித்த வைத்தியர்" என்று ஒரு பலகையில் எழுதினன். அதோடு தன்னைப் பற்றி நாலு பேரிடம் சொல்லி வைக்கும்படி அந்த அறையின் சொந்தக்காரரிடம் கேட்டுக் கொண்டான். எழுதி வைத்த போர்டு காய்வதற்குள் அவன் கடைத் தெருவுக்குப் போய் ஒரு டஜன் காலிப் புட்டிகளும், சில மூலிகைகளும் வாங்கிக் கொண்டு வந்தான். அரை மணி நேரத்திற்குள் புட்டிகளில் பச்சை, சிவப்புத் தண்ணி மருந்துகளும் வெள்ளை, கருப்புப் பவுடர்களும் நிறைந்து விட்டன. அவனுடைய தற்காலப் பொக்கிஷ நிலைமை, அந்த அறையிலுள்ள ஒரு ஜன்னலையே கண்ணாடி அலமாரியாகப் பாவிக்கும்படி செய்தது. மருந்து பாட்டில்களை எல்லாம் அதிலேயே அழகாக அடுக்கி வைத்தான். மருந்து வேலை முடிந்தது. மருந்து வைக்கப் புட்டிகளும் வசதியாகக் கிடைத்தது. புட்டிகளை வைக்க அலமாரியில் தயார் பண்ணி விட்டான். இன்னும் என்ன வேண்டியிருக்கிறது? ஒன்றே ஒன்று தான் பாக்கி! அதுதான் ஒரு சித்த வைத்தியருக்கு வேண்டிய முக வெட்டு! கையோடு கொண்டு வந்திருந்த சிறு மூட்டையை அவிழ்த்து, க்ஷவரக் கத்தியை எடுத்து தீட்ட ஆரம்பித்தான் சாந்த நாயகம். அதே சமயத்தில் அந்த அறையின் சொந்தக்காரர் அவனெதிரில் தோன்றினர்.

சாந்த நாயகம் மிகவும் சந்தோஷத்தோடு, "இப்பொழுதே யாருக்காவது என்னுடைய உதவி தேவையாக இருக்கிறதா?" என்று கேட்டான். வந்தவர் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "இல்லை சார், என்னுடைய பணத் தேவையை உத்தேசித்துத்தான் உங்களிடம் வந்தேன்" என்றார். "ஓஹோ! வாடகையை முன் கூட்டியே கொடுத்துவிட வேண்டுமோ!...... ஆமாம்! நேற்றே சொன்னீர்களே!...... சார்! இப்போ ஒரு ரூபா, பன்னிரண்டணாக் குறைவாக இருக்கிறது. நாளைக் காலையில் கண்டிப்பாகத் தந்து விடுகிறேன். அதுவரைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அவரை அனுப்பி விட்டான்.

சாந்தநாயகம் அவரிடம் மறுநாள் வாடகையைக் கொடுப்பதாகச் சொன்னது எக்கச்சக்கமான அந்த நிலைமையைச் சமாளித்துக் கொள்ளத்தான். உண்மையில் மறுநாள் காலையில் தான் வாக்குறுதி செய்தபடி கொடுக்க முடியாதென்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். அவர் வெளியே போனவுடன் "நாளைக் காலையில் எப்படி வாடகை கொடுப்பது" என்ற கவலையில் மூழ்கி விட்டான். பாண்டிச்சேரி வழக்கப்படி வாடகையை முன் கூட்டியே கொடுத்துவிட வேண்டுமென்று வீட்டுக்காரர் சொல்லியிருந்ததை நாயகம் மறந்தே போனன். அதனலேயே தன் கையிலிருந்த பணம் முழுவதையும் செலவழித்து மூலிகைப் பொருள்கள் வாங்கி விட்டான். மீதியிருந்த நாலணு அவனுடைய அன்றையச் சாப்பாட்டிற்கே போதாமலிருந்தது. மறுநாள் காலைக்குள், இரண்டு ரூபாய் வரும்படி வருவதென்பதும் நடக்காத காரியம். ஆகவே அவன் இந்த இக்கட்டான நிலைமையில் கிடந்து தத்தளித்துக் கொண்டே க்ஷவரத்தை ஆரம்பித்தான்.

அப்பொழுது தெருவில்,

"என்ன டாக்கீஸ்?"

"மாயா டாக்கீஸ்!"

"என்ன தார்?"

"பட்டணத்தார்!" என்று கிளம்பிய சினிமா விளம்பரச் சப்த அலைகள், க்ஷவரம் பண்ணிக் கொண்டிருந்த சாந்தநாயகத்தின் காதுகளில் போய் மோதின. உடனே பட்டினத்தாரின் வாழ்க்கை அவன் கண்முன் ஒரு திரைப்படச் சுருள் போலத் தொங்கியது. அவன் படித்திருந்த பட்டினத்தார் பாட்டும் ஞாபகத்துக்கு வராமலிருக்கவில்லை. பாடினன்.

"மாடுண்டு, கன்றுண்டு, மக்களுண்டென்று
மகிழ்ந்ததெல்லாம்
கேடுண்டெனும் படிக் கேட்டு விட்டோமினிக்
கேள் மனமே (அடபாவி மனமே கேள்!)
ஓடுண்டு, கந்தையுண்டு, உள்ளெழுத்தைந்து
ஓத உண்டு (நிச்சயமாக உண்டு)
தோடுண்ட கண்டனடியார் நமக்குத்
துணையுமுண்டே"

(குறிப்பு: வளைவிற்குள் போட்டிருக்கும் வார்த்தைகள் பாடபேதங்கள் அல்ல. சாந்தநாயகம் தன் உற்சாகத்தினல் சேர்த்துப் பாடிய வார்த்தைகள் தான்.)

சாந்த நாயகம் பாட்டைப் பாடி முடித்ததும், சந்நியாசமே தன்னைச் சிறை வாசத்திலிருந்து காக்கக் கூடிய, மாபெரும் சாதனம் என்று உறுதி கொண்டான். மண், பெண், பொன் இவற்றில் பற்று வைத்திருந்தால் தானே இடைஞ்சல்! உண்ணவும், உடுக்கவும், படுக்கவும், அப்பன் பட்டினத்தார் கூறியபடி தீர்மானித்து விட்டால், என்னை யார் என்ன செய்ய முடியும்? முப்பதாவது வயது முடிந்த பிறகு வேண்டுமானல் துறவறத்தைத் துறந்து விட்டு இல்லறத்திற்குத் தாவிக் கொள்கிறது! இவ்வாறு அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் சுந்தரி அவனுடைய மனக் கண் முன் தோன்றினள். உடனே ஆனந்தபரவசத்தால் அவனுடைய உடம்பு குபீரென்று பூரிப்படைந்தது. ஆனல் அவன் கன்னங்களில் உலாவிக் கொண்டிருந்த க்ஷவரக் கத்தி, கன்னச் சதைகள் பூரித்து எழுவதை அறியாமல் அப்படியே நின்று விட்டது. மேலெழுந்த சதை கத்தியைத் தள்ளவே சாந்த நாயகத்தின் கன்னத்தில் சிறிது காயம் ஏற்பட்டது. தன்னிடமிருந்த மருந்துகளின் குணங்களை அவன் நன்ருக அறிந்திருந்ததால், நாயகம் வெட்டுக் காயத்தில் கொஞ்சம் மண்ணைத் தெள்ளிப் போட்டான்.

சிறிது திறந்து வைக்கப் பட்டிருந்த அந்த அறைக் கதவு முழுவதும் திறக்கப் பட்டது. கதவோடு ஒரு தாடியும், தாடியைத் தொடர்ந்து, அதை உடைய ஒரு சாமியாரும் அறைக்குள் நுழைந்தார். சாந்த நாயகம் தன்னுடைய ரண சிகிச்சை ஒருவருக்கும் தெரிந்து விடக் கூடாதென்பதற்காகக் கடைக் கண்களால் அவரைப் பார்த்து விட்டு "சாமியாரே! இது வைத்தியசாலை; வீடல்ல" என்ருன்.

சாமியார் சாவதானமாக, "அப்பனே நான் உன்னிடம் பிச்சை கேட்க வரவில்லை. என்னுடைய காவி அங்கியையும் இந்த மூட்டையையும் இங்கே கொஞ்சம் வைத்திருக்க வேண்டும். பக்கத்திலுள்ள குளக்கரையில் போய் ஸ்நானம் பண்ணி விட்டு வந்து எடுத்துக் கொள்கிறேன்" என்ருர்.

சாந்த நாயகம் அவரை மறுபடி திரும்பிப் பார்க்காமலே "சரி, சரி. வைத்து விட்டுப்போம்" என்றான். சாமியார் தான் அணிந்திருந்த காவி அங்கி, யோக தண்டம், தலைப்பாகை, மூட்டை ஆகியவைகளை ஒரு மூலையில் வைத்து விட்டுப் பின் பக்கத்து வாசல் வழியாக ஒரு சந்திற்குள் போய், அங்கிருந்து அடுத்த தெருவிற்குப் போய் விட்டார்.

சுவாமியார் போன கால் மணி நேரத்திற் கெல்லாம் சாந்த நாயகத்தின் கண்கள் அவர் வைத்து விட்டுப் போன வஸ்துக்களைக் கூர்மையாகப் பார்த்தன. தன் தீர்மானத்திற் கேற்றபடியே சகல சாதனங்களும் அமைந்து வருவதைக் காண அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சட்டென்று தன் மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்த தன் ஜாதகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு சாமியாரின் மூட்டைப் பக்கம் போனான். அதை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கொஞ்சம் சில்லறையும், சில காகிதங்களும், சில மூட்டைப் பூச்சிகளும் இருந்தன. நாயகம் அதோடு தன் ஜாதகத்தையும் வைத்துக் கட்டினான். சாமியாரின் தலைப்பாகையையும் அங்கியையும் எடுத்து அணிந்து கொண்டான்.

தன்னையே மேலும் கீழும் பார்த்துப் பரவசமடைந்தான். மூட்டையைக் கையில் வைத்துக் கொண்டு யோக தண்டத்தை முழங்கைக்கும் இடுப்பிற்கும் இடையில் வைத்தபடியே, அங்கு தொங்க விடப் பட்டிருந்த கையகலத் தகரக் கண்ணாடியின் முன் போய் நின்றான். ஒரு நிமிஷத்திற்கு முன் அதே கண்ணாடிக்குள் முக வெட்டுள்ள, ஒரு சித்த வைத்தியராகத் தோன்றிய சாந்த நாயகம் இப்பொழுது சாக்ஷாத் சாந்த நாயகானந்த அடிகளாகக் காக்ஷியளித்தார். தன்னை விட்டுப் பிரிய இருக்கும், தனது ஆஸ்திகளான மருந்து பாட்டில்களையும் க்ஷவரக் கத்தியையும் ஒரு முறை ஆசை தீரப் பார்ப்பதற்காகச் சிறிது கீழே உட்கார்ந்தார் சாந்த நாயக அடிகள். பாசம் பெரிதல்லவா? ஆசையை விட்டு விட்டு நாயகம் எழுந்த போது தன் அறைக்குள் நான்கு போலீஸ்காரர்கள் நுழைவதைக் கண்டு திடுக்கிட்டான். "உலகத்தையே துறந்து விட்ட தனக்கு இனி இந்த மானிடப் பதர்களிடம் என்ன பயம்!" என்று எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டு அவர்களைப் பார்த்து "ஏது இங்கே வந்தது?" என்று சாவதானமாகக் கேட்டான்.

அதற்குள் ஒரு போலீஸ் அடுத்தவனைப் பார்த்து "அடேடே! சாமியார் அதுக்குள்ளே தாடியை மழுங்கச் சிரைச்சுட்டாரே!" என்றான். உடனே அடுத்தவன் நாயகானந்த அடிகளைப் பார்த்து ஏளனமாக, "சுவாமிகாள்! உங்களுடைய தாடி போய் விட்டால் உங்களை அடையாளம் கண்டு பிடிக்க முடியாதென்று எண்ணி விட்டீர்களோ?" என்றான். இன்னொரு போலீஸ் "சரி, சரி, வாரும் எங்களோடு. உம்மைக் கைது செய்திருக்கிறோம்" என்றான்.

சாந்த நாயகம் தைரியத்தைக் கைவிடாமல் "என்னையா கைது செய்யப் போகிறீர்கள்? நான் எந்தக் கேஸில் சம்பந்தப்பட்டிருக்கிறேன்?" என்று சரமாரியாகக் கேள்விகளை ஆரம்பித்தான்.

"அட இதுதானப்பா பூலோகம். நடக்கறயா; கல் தாக்குடுக்கணுமா? செட்டியார் கடையிலே பணத்தை அமுக்கிக்கிட்டுப் பாண்டிச் சேரியிலே சாமியார் வேஷம்

போட்றியோ! வாப்பா கைலாசம்" என்றான் ஒரு போலீஸ். "ஐயையோ! என்பேரு கைலாசம் இல்லையே. எம்பேர் சாந்தநாயகம். செட்டியார் கடையே எனக்குத் தெரியாதய்யா!" என்று பதறினான் நாயகம். "ஏம்பா கதை விடறே? நீ இங்கேதான் வந்திருப்பேன்னு செட்டியார் தந்தி குடுத்திருக்காரப்பா! ரெங்கூனிலே இருந்து உன்னுடைய போட்டோவைக் கூட அனுப்பிச்சிருக்காரு. இதோ பாரு! நீ மூந்தா நாளு கப்பலே விட்டு இறங்கறபோதே ஒரு மாதிரி "திரு திரு"ன்னு முழிச்சே! நாங்களும் உன்னைப் பாத்தும் பாராதது போலே போயிட்டோம். நீ தாடி வளர்த்திருந்ததனாலே கொஞ்சம் சந்தேகமா இருந்துது. உன் மேலே ஒரு கண்ணு வச்சுக்கிட்டே வந்தேன். இப்போ நீ தாடியையும் எடுத்துட்டே. அடையாளம் கண்டு பிடிக்க ரொம்ப சௌகரியமாப் போச்சு. நாங்க உன்னைத் தொடர்ந்து வருகிற சங்கதியை நீ எப்படியோ தெரிஞ்சுக்கிட்டு இங்கே வந்து தாடியை எடுத்துட்டே. எப்படியும் கைலாசம் கைலாசம் தானே. உன் படத்தை நல்லாப் பாத்துக்கிட்டயா! அதிலே இருக்கறது நீதானா? வேறே யாரு சொல்லு, கைலாசம் இப்பவாவது ஒப்புக் கொள்றயா அல்லது இன்னும் பேரு ஏதாவது மாத்தப் போறயா கைலாசம்?" என்று புரளியாகச் சிரித்தான் ஒரு போலீஸ்.

படத்தைப் பார்த்தவுடன் சாந்தநாயகம் திக்பிரமை பிடித்தவன் போல நின்று விட்டான். அவனுக்கு எல்லா விஷயமும் விளங்கி விட்டது. ஆகையால் ஒன்றுமே பதில் பேசாமல் அவர்களோடு நடந்தான். கேஸ் விசாரணையின் போது உண்மையையே சொல்ல வேண்டுமென்று தீர்மானித்து விட்டான். ஆனால் கைலாசம் தன் அண்ணன் தானென்று சொல்லி அவனைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை. அவன் அவ்வாறு சொல்லியிருந்தாலும் ஒருவரும் அதை நம்பியிருக்க மாட்டார்கள். ஏனென்றால் கேஸ் நடந்தபோது சாக்ஷியாக விசாரிக்கப்பட்ட செட்டியார் கடைக் கணக்குப்பிள்ளை நாயகத்தின் கன்னத்தை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு "கைலாசம் தன்னுடைய அடையாளத்தை மாற்றுவதற்காகத் தன் கன்னத்திலுள்ள நீள மருவைக்கூடக் கத்தியால் வெட்டி மறைத்திருக்கிறானே" என்றார். இவ்வளவு தெளிவாக அவனைக் கைலாசம் தான் என்று தீர்மானித்த பிறகு, அவன் என்ன சொல்லியும் பயனில்லையல்லவா! ஆனாலும் அவன் கடைசிவரை தன் பெயர் நாயகம் தானென்றே சாதித்து விட்டான். அதில் அவனுக்கு ஒரு திருப்தி.

"குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளாததோடு தன் பெயரையும் மறைக்க முயன்றதால் ஒன்பது மாதம் சிறைவாசம்" என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஜெயிலில் இருந்த சாந்த நாயகம் ஒருநாள் தன்னோடு இருந்த சகாக் கைதி ஒருவனிடம் தன் ஜாதகப் படி நடந்த அத்தனை விவரத்தையும் அண்ணன் பெயரை மட்டும் மறைத்துச் சொல்லிவிட்டு, "அதில் கண்டிருந்தபடி சிறைவாசம் கிடைத்தது. ஆனால் களவு செய்த பின் தண்டனை என்று ஜாதகம் சொல்கிறதே! நான் ஒரு இடத் திலும் களவு செய்யவில்லையே! அதுதான் எனக்குப் புரிய வில்லையே!" என்றான்.

உடனே அந்த நண்பன் "ஜோசி யரே, நீர் அந்தச் சாமியாரின் மூட்டை முடிச்சுகளைத் திருடினது களவு இல்லாமல் என்னது? இது கூடத் தெரியவில்லையே ஜோசிய ருக்கு!" என்று அவனுடைய சந் தேகத்தை நிவர்த்தி செய்து வைத் தான்.

ஒன்பது மாத சிறைவாசமும் முடிந்து சாந்த நாயகம் வெளியே வந்தான். ஜெயில் வாசலில் கைலாசமும் அவனுடைய மனைவி சுந்தரியும் ஒரு வண்டியோடு காத் துக் கொண்டிருந்தார்கள். நாயகத் தைக் கண்ட கைலாசம் ஓடியே போய் அவனைக் கட்டிக் கொண்டு "தம்பி என்னை மன்னிப்பாயா?" என்று கதறிவிட்டான்.

"அண்ணா இதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். எல்லாம் என் ஜாதகப்படி நடந்தது. அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று சிரித்தபடி வண்டியினுள் இருந்த சுந்தரியைக் கவனித் தான். "சொன்னது உண்மை தான். நான் மோசம் போனேன்!" என்று சுந்தரி கைலாசத்தைப் பார்த்துக் கூச்சலிட்டாள். அவள் சொன்னதன் அர்த்தம் புரியாமல் நாயகம் திகைத்துக் கொண்டிருக் கையில் கைலாசம் ஆரம்பித்தான் "தம்பி, என்னுடைய சாமியார் வேஷச் சாமான்களை நீயென்று தெரியாமலே பாண்டிச்சேரியில் வைத்து உன்னிடம் கொடுத்து விட்டு நேராக ஊர் போய்ச் சேர்ந் தேன். நமது வீட்டையெல்லாம் பழையபடி வாங்கிவிட்டேன்.

"பின்பு எனக்குப் பதிலாக நீ அகப் பட்டுக் கொண்ட செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். அதன் பின்புதான் பாண்டிச்சேரி யில் வைத்தியசாலை வைத்திருந்தது நீதானென்று தெரிய வந்தது. உடனே பாண்டிச்சேரிக்கு வந்து என் குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையை நானே ஏற்றுக் கொள்ளலாமென்று நினைத்தேன்.

"ஆனால் சுந்தரி என்னை விடவே இல்லை. நான் நாயகம் இல்லை என்று அவளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவள் கேட்கவே இல்லை. அவள் என் னைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டாள்" என்று எல்லா விபரத் தையும் விளக்கினான்.

"அதைப் பற்றியும் நான் வருந்த வில்லை அண்ணா!" என்றான் நாய கம்.

"தம்பி நான் உனக்கு எவ்வ் ளவோ தீங்கு செய்து விட்டேன்" என்று கைலாசம் வருந்தினான்.

"அண்ணா, நீங்கள் ஒன்றுமே தீங்கு செய்யவில்லை. எல்லாம் என்னுடைய முப்பதாம் வயது செய்த கொடுமைகள்! இன்னும் மூன்று மாதங்கள் தான் இதன் அட்டகாசம் நடக்கும். அதன் பின்பு கல்யாணமும் குபேர சம் பத்தும் கிட்டும் என்று ஜாதகம் சொல்லுகிறது அண்ணா"

"தம்பி! நீ சொல்லுவது மிகவும் உண்மை. சுந்தரியின் தங்கைக்கு, அவளுடைய பாட்டி ஒரு கிரா

மத்தையே ஆஸ்தியாக விட்டிருக்கிறாள். அவள் உன்னையே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அநேகமாகச் செய்து விட்டேன்." என்று சொல்லிக் கொண்டே மூவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். "மூன்று மாதத்திற்குப் பின்தான் எனக்குக் கல்யாணம் நடத்தவேண்டும்" என்றான் சாந்த நாயகம். அவ்வாறே முப்பத்தோராவது வயதில் அவன் சுந்தரியின் தங்கையை மணந்து குபேர சம்பத்தைப் பெற்றான்.



ஐந்து வருஷத்திட்டம்

பி. கோதண்டராமன்

இரவு மணி ஏழரை இருக்கும். மேரி கல்லூரி மாணவிகள் விடுதி கலகலப்பாக இருந்தது. இறுதிப் பரிட்சைகள் யாவும் முடிந்து கோடை விடுமுறை தொடங்கி விட்டபடியால், பலர் அன்றே தத்தம் ஊருக்குச் செல்ல மூட்டை கட்டித் தயாராக இருந்தனர். மறு நாள் செல்ல உத்தேசித்திருந்தவர்கள் கூட்டங்கூட்டமாக நின்று தமாஷாகப் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தனர்.

ஆனல், மிஸ் சுந்தரி இக்கூட்டங்களில் எங்கும் காணப்படவில்லை. அவள் மேல் மாடியில் தென்னண்டை கோடியில் கிழக்குப் பார்த்த தன் விசாலமான அறையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தாள். அன்று மாலே 5 மணியோடு பி. ஏ. ஆனர்சு இறுதிப் பரிட்சைகள் யாவும் முடிந்து விட்டன. அப்பரிட்சைகளுக்காக இரவில் நீண்ட நேரம் படிக்க நேர்ந்ததால், அவள் உடல் நலம் குன்றியிருந்தது. அன்றிரவு விடுதியில் ஓய்வெடுத்துக் கொண்டு, அடுத்த நாள் தியாகராயநகரிலுள்ள தன் மாமாவைப் பார்த்துவிட்டு கோயமுத்தூருக்குப் பிரயாணஞ் செய்யலாமென்று இருந்தாள். விடுதிக்கு எவ்வளவு செலுத்த வேண்டும்? புத்தகாலயத்தில் என்னென்ன புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்? பொழுது போக்குக்காக 'இக்கின் போதாம்சில்' என்னென்ன புத்தகங்கள் வாங்கலாம்? என்னும் விஷயங்களில் அவளது சிந்தனை இப்போது சென்று கொண்டிருந்தது.

இந்த நிலையில், திடுமென்று 'சுந்தரி! சுந்தரி!' என்று கூப்பிட்டுக்கொண்டே மிஸ் கமலா உள்ளே நுழைந்தாள்.

"ஆறு மணிக்கு நான் விடுதியின் வாயிலில் நுழைந்து கொண்டிருந்த சமயம், ராஜாங்கக் கல்லூரியில் படிக்கிருரே, மிஸ்டர் கே. சுந்தரம், அவர் இக்கடிதத்தை உன்னிடம் சேர்த்து விடும்படிக் கொடுத்தார். ஊருக்குப் போகிற அவசரத்தில் மறந்து விட்டேன். இப்போதுதான் நினைவு வந்தது. அதுதான் ஓடி வந்தேன். இந்தா நான் போகிறேன். நீ நாளைக்குத் தான் போகிருப்போலிருக்கிறது?"

சுந்தரி, கமலாவிடமிருந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு, "தாங்ஸ் கமலா. ஆமாம், நான் நாளைக்குத் தான் போகப் போகிறேன். பரிட்சை மண்டபத்திலிருந்து வந்ததிலிருந்து ரொம்ப களைப்பாயிருக்கிறது. உன்னை வழியனுப்ப ஸ்டேஷன் வரையிலும் வரவேண்டுமென்று ஆசைதான். ஆனல் என்னவோ போலிருக்கிறது. என்னை மன்னித்து விடு" என்ருள்.

"பாதகமில்லை, சுந்தரி. நீ ஓய்வெடுத்துக்கொள். இன்றைக்குநன்ருகத் தூங்கினல் நாளைக்கு எல்லாம் சரியாய்விடுமென்று எண்ணுகிறேன். நான் போய் வருகிறேன்."

"போய் வா, கமலா. ஐ விஷ் யு குட் லக்!"

"ஐ விஷ் யு தி சேம், சுந்தரி."

கமலா சென்ற பின் மிஸ் சுந்தரி கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதில் பின் வருமாறு கண்டிருந்தது.

“அன்பார்ந்த மிஸ் சுந்தரி, நீங்கள் பரீட்சையில் எல்லா வினாப் பத்திரங்களுக்கும் நன்றாக விடையளித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நானும் நன்றாக எழுதியிருக்கிறேன். எனக்கு இரண்டாம் வகுப்பு கிடைக்கலாம்.

நிற்க, நீங்கள் கோயமுத்தூருக்கு எப்போது போகப் போகிறீர்கள்? நாளை மாலை வரையிலும் தங்கியிருப்பீரென்று நம்புகிறேன். ஒரு நாள் இருந்து விட்டுத்தான் போங்களேன். ஒரு நாள் தாமதமாகச் சென்றால் அப்பாவுக்குக் கவலையேற்பட்டுவிடுமா என்ன? நான் இன்னும் சில நாட்கள் இங்கேயே தங்கியிருக்க உத்தேசித்திருக்கிறேன்.

நான் உங்களிடம் சில முக்கியமான விஷயங்கள் பேசவேண்டும். நாளைக்குக் காலை 9-மணிக்கு உங்களை விசிடர்கள் அறையில் சந்திப்பேன். தயை செய்து வார்டனிடம் அனுமதி பெற்று வைத்துக் கொள்ளவும்.”

பிற பின் — கே. சுந்தரம்.

கடிதத்தை மடித்துக் கையில் வைத்துக் கொண்டே சுந்தரி இவ்வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்தாள்: “சுந்தரம் என்னத்தைப் பற்றி என்னிடம் பேச வருகிறார்? அவர் எனக்கு அறிமுகமானவரே. அவரை நான் சென்ற மூன்று வருடங்களாக அறிவேன். இருவரும் பி. ஏ ஆனர்சு, இண்டர் கொல்லீஜியேட், பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் நடைபெறும் இடங்களில் நான் அவரைப் பன்முறைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். பரிசுச் சொற்போரில் இருவரும் வாதஞ் செய்திருக்கிறோம். இவ்வளவுக்குமேல் நான் அவருடன் நெருங்கிப் பழகியதில்லை. அப்படியிருக்க, என்னுடன் முக்கியமாகப் பேச வேண்டிய விஷயம் யாதோ? ஒருக்கால் காதல் கீதல்............சே! அவர் அப்படிப்பட்டவரல்ல. மிகவும் அடக்கமும் நேர்மையுமுள்ளவர். அன்றியும் அவர் சாஸ்திரி மகன் நான் முதலியார் மகள். என்னவோ விசேஷம் இருக்க வேண்டும். பார்ப்போம்.”

அதற்குள் கடைசி பந்திச் சாப்பாட்டுக்கு மணியடிக்கவே அவசரம் அவசரமாகக் கீழே இறங்கிப் போனாள். சாப்பாட்டிற்குப் பின் அறைக்கு முன்பாகவுள்ள வராந்தாவில் சிறிது நேரம் காற்று வாங்கிவிட்டுப் படுக்கச் சென்றாள்.

* * *

மறுநாட்காலை 8-45 மணிக்கு சுந்தரி விசிடர்கள் அறையில் ஆஜராக இருந்தாள். ஒன்பது அடித்ததும் சுந்தரம் உள்ளே நுழைந்தான்.

“நமஸ்காரம், மிஸ்டர் சுந்தரம் வாருங்கள் இப்படி உட்காருங்கள்.”

“நமஸ்காரம் மிஸ் சுந்தரி.”

இருவருக்கும் இடையே இருந்த நீண்ட மேசையின் இருபுறத்திலும் நேருக்கு நேராக உட்கார்ந்தனர்.

“மிஸ் கமலா தங்கள் கடிதத்தை என்னிடம் கொடுத்தாள். படித்துப் பார்த்தேன். வார்டனும் அனுமதியளித்தார். கொஞ்சம் தேநீருக்குச் சொல்லியிருக்கிறேன் இதோ வந்து விடும்.”

“தேநீர் எதற்காக இப்போது?”

“பாதகமில்லை.”

பணிப்பெண் அதற்குள் உள்ளே நுழைந்து இரண்டு கோப்பைகளில் தேநீரும் இரண்டு தட்டுகளில் கேக்குகளும் மேசையின்மீது வைத்து விட்டுச் சென்றாள். சுந்தரி ஒரு தட்டை அவர் முன் வைத்து ஒரு கோப்பைத் தேநீரை எடுத்து கரண்டியால் கலக்கி அவர் கையில் எடுத்துக் கொடுத்தாள்.

சுந்தரம் அவளைப் பார்த்து புன்முறுவலித்துக்கொண்டே அதை வாங்கி “தாங்க் யு” என்றான்.

பின்னர் இருவரும் தேநீர் அருந்தினர். முடிந்ததும் வெளியே

காத்துக் கொண்டிருந்த பணிப் பெண் உள்ளே நுழைந்து கோப் பைகளையும், தட்டுகளையும் எடுத் துச் சென்றாள்.

"மிஸ் சுந்தரி, நீங்கள் பரீட்சை யில் எப்படி எழுதியிருக்கிறீர்கள்? பொருளாதார சாஸ்திர வினாப் பத் திரம் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது இல்லையா?"

கும் இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன. நீங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?"

"என் அப்பா என்னை லா கா லேஜில் சேர்ந்து படிக்கும்படிச் சொல்லி வருகிறார். எனக்கு வக் கீல் தொழிலே பிடிக்க வில்லை. சமூக சாஸ்திர ஆராய்ச்சிகளி லேயே என் மனம் செல்கின்றது

"ஆமாம், கொஞ்சம் கடின மாகத்தான் இருந்தது. ஆனால் மார்ஷல், டாசிக், ஜதார்-பேரி இவற்றை நன்றாகப் படித்திருந் தால் சிரமப்பட வேண்டியதில்லை. மொத்தத்தில் நான் எல்லாப் பத் திரங்களுக்கும் நன்றாகவே விடை யெழுதியிருக்கிறேன். எனக்கும் இரண்டாம் வகுப்பு கிடைக்க லாம்."

"ரொம்ப சந்தோஷம். அப் புறம் என்ன செய்யப் போகிறீர் கள்?"

"இப்போது ஒரு யோசனையு மில்லை. அப்பா என்ன சொல்லு கிறாரோ. பல்கலைக் கழகத்தில் ரீடர்ஷிப் வேலை கிடைத்தால் ஒருக் கால் ஒப்புக் கொள்வேன். எதற்

எனக்கும் பல்கலைக் கழக ஆராய்ச் சித் துறையில் இறங்க விருப்ப முண்டு. ஆயினும் இன்னும் யாதொன்றும் முடிவு செய்ய வில்லை."

இருவரும் ஒரு நிமிடம் மௌன மாக இருந்தனர். பின்னர் சுந் தரம் பேசவாரம்பித்தான்.

"மிஸ் சுந்தரி! நான் உங்களி டம் மனம் விட்டுப் பேச வந்திருக் கிறேன், தாங்கள் ஒன்றையும் தவறுதலாகக் கொள்ள மாட்டீர் களே?"

"தவறுதலாகக் கொள்வா னேன்? நீங்கள் முறை தவறி யாதொன்றும் பேசமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீங்கள் தாராளமாகப் பேசலாம்"

"நம்முடைய சமூக வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தீவிரமான அபிப்பிராயங்கள் உண்டு. தங்கள் தகப்பனர் தென்னிந்தியாவில் ஒரு பிரபல சுயமரியாதைக்காரராக இருப்பதால், தங்களுக்கும் முற்போக்கான கொள்கைகள் இருக்குமென்றேஎண்ணுகிறேன்"

"சமூக விஷயங்களில் நான் முற்போக்கான கொள்கைகள் உடையவளே. நமது நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில், சாதி என்பது அடியோடு ஒழிந்து மக்களனைவரும் ஓரினமாக வேண்டும். தமிழர் இன்றுள்ள நிலைக்குத் தமிழரனைவருமேதாம் காரணமென்பது என் அபிப்பிராயம். மற்றுமொரு விஷயம். நம்முடைய கொள்கைகளின்படி நாம் வாழ்க்கையில் நடக்கத் தயங்குகிறோம். ஒரு உதாரணம் எடுத்துக் கொள்வோம். எங்கள் விடுதியில் பல சாதிகளைச் சேர்ந்தவர்களிருக்கிறோம். ஆயினும், ஒரு குடும்பத்தினரைப் போல வாழ்கிறோம்.

"இங்கேயுள்ள பிராம்மணப் பெண்கள் தங்கமான பெண்கள். அவர்களிற் சிலர் என் நெருங்கிய தோழர்கள். அவர்களிடத்தில் சாதியுணர்ச்சி மருந்துக்குக் கூட கிடையாது. ஆனல் இதை விட்டுச் சென்று நம்முடைய குடும்பங்களில் ஐக்கியப்படும் போது மீண்டும் சூழ்வினல் கெட்டு அடியோடு மாறி விடுகிறோம். சூழ்வில் அமிழ்ந்து விட்டால், நம் தனிக் கருத்துக்களை வலியுறுத்தவோ, அவற்றின்படி வாழ்க்கை நடத்தவோ முடிவதில்லை.

"பழையபடி சாதியுணர்ச்சிக்கு உட்படுகின்றோம். இளமையில் கற்ற கல்வியும், பயிற்சியினல் விரிந்த உள்ளமும் வாழ்க்கையிற் பயன் படாமற் போய் விடுகின்றன. இந்த நிலைக்கு நாமனைவருமே பொறுப்பேற்க வேண்டும். சமூகத்தில் படித்தவர்களும் அறிவாளிகளும் தம் விழுமிய கருத்துக்களின்படி வாழ்க்கையை நடத்தி பாமர மக்களுக்கு எப்போது வழி காட்டுகின்றனரோ, அப்போதே நமக்கு விமோசனமுண்டு. இதற்கு ஏதாவதொரு வழி கண்டு பிடிக்க வேண்டும்."

"பேஷ், மிஸ் சுந்தரி. என் மனத்திலிருந்தவற்றையே நீங்கள் எடுத்துரைத்தீர்கள். இதற்கு ஏதாவதொரு வழி கண்டு பிடிக்க வேண்டுமென்று சொன்னீர்களே அந்த வழியில் உருப்படியான காரியமொன்றைச் செய்வது பற்றி உங்களிடம் பேசவே நான் இங்கே வந்திருக்கிறேன்."

"உங்கள் யோசனை யென்ன சொல்லுங்கள்"

"அதை எப்படி வெளிப்படையாகச் சொல்வதென்று தயங்குகிறேன்"

"தயங்குவானேன்? மனத்திலுள்ளதைக் கூறுங்கள்."

"சரி, நீங்கள் தைரியமளிப்பதால் கூறுகின்றேன். இதோ பாருங்கள் மிஸ் சுந்தரி. நான் உங்களைப் பற்றி ஒரு சிறிது அறிவேன். உங்களோடு நெருங்கிப் பழகிய என் மாமாவின் பெண் லலிதா உங்களைப் பற்றி என்னிடம் பல தடவை பேசியிருக்கிறாள்."

"எந்த லலிதா? சென்ற வருடம் 'டைபாய்டு' சுரம் வந்து இறந்து விட்டாளே அவளா?"

"ஆம். அவளே தான். அவளும் நீங்களும் ஒரே அறையில் இருந்து வந்ததாக என்னிடம் சொல்லியிருக்கிறாள்."

"ஆமாம். நாங்கள் இருவரும் ஒரு வருஷம் ஒரே அறையில் வசித்து வந்தோம். தங்கமான குணம். நல்ல புத்திசாலி. நாங்கள் இருவரும் அக்கா தங்கையைப் போல இருந்து வந்தோம். எங்களுக்குள் கள்ளங்கவடு வஞ்சனை கிடையா. ஒருவருள்ளத்தை ஒருவர் அறிவோம். அவள் உங்கள் உறவினரென்பது இப்போது தான் தெரிகிறது."

"உங்கள் இருவருக்குமிடையே இருந்து வந்த நட்பைப் பற்றி பல தடவை என்னிடம் சொல்லியிருக்கிறுள். அவளிடமிருந்தே உங்களைப்பற்றிச் சில விஷயங்கள் அறிந்து கொண்டிருக்கிறேன். நான் தமிழ் நாட்டின் சமூக நிலையைப் பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம், என் வாழ்க்கையில் சீர்திருத்தஞ் செய்து மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டு மென்னும் எண்ணம் எழுவதுண்டு. அப்போது என் சீவியப் பணியில் உங்களது ஒத்துழைப்பையும் பெற்ருல் எவ்வளவு நன்ருயிருக்கும் என்று கருதுவதுண்டு. உங்கள் ஒத்துழைப்பு கிடைக்குமா வென்று கேட்கவே இங்கு வந்துள்ளேன்."

"உங்கள் கருத்துக்கள் தெரிகின்றன. ஆனுல் நான் எவ்விதம் தங்களுடன் ஒத்துழைக்கக் கூடும் என்பது தான் விளங்க வில்லே. தங்கள் திட்டம் என்னவோ?"

"என் மனத்திலுள்ளதை இதோ விளக்குகிறேன். நம் தமிழ் நாட்டின் பிரதான சமூகப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. தமிழ் நாட்டைப் பொருத்த மட்டில் தமிழர் என்ற உணர்ச்சி தான் இருக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்த மட்டில் இந்தியா என்ற ஒரே உணர்ச்சி தான் ஓங்க வேண்டும். மொழி, இலக்கியம், சமூகப் பண்புகள் ஆகிய விஷயங்களில் தமிழராயிருப்போம். இந்நாட்டிற்கே உரிய பொது விஷயங்களிலும் கலைப் பண்புகள் விஷயத்திலும் இந்தியராயிருப்போம். தான் தமிழன், இந்தியன் என்ற ஒரே இனவுணர்ச்சி தான் ஓங்கவேண்டும். பிரிவினையை உணர்த்தும் சாதிகளும் அசட்டுக் கொள்கைகளும் அடியோடு ஒழிய வேண்டும். வித்தியாசங்களைக் கற்பனை செய்து மக்களிடையே துவேஷ உணர்ச்சியைக் கிளப்புவது அறிவுடைய செயலாகாது. நம்முடைய தமிழ் நாட்டில் ஒற்றுமையை யுண்டாக்க ஒரே வழிதான் உண்டு. பிராமணர் - பிராமணரல்லாதாருக்குள்ளும், பிராமணரல்லாதாருள் பல பிரிவினருக்குள்ளும் கலப்பு மணம் பெருவாரியாக நிகழ வேண்டும்."

"மிஸ்டர் சுந்தரம், தாங்கள் இதுகாறும் சொல்லி வந்த விஷயங்களில் உமக்கும் எனக்கும் யாதொரு அபிப்பிராய பேதமுங் கிடையாது. ஆம், தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். சாதியை வெட்டி வீழ்த்த வேண்டும்.

"கலப்பு மணமே சாதியை ஒழிக்கும். நம்முடைய சீர்திருத்தக்காரர்கள் இதை யெல்லாம் ஒப்புக் கொள்வர். ஆனுல், நாம் பேச்சளவோடு நின்று விடுகிறேம். இதற்கு என்ன வழி என்பது தான் தெரியவில்லே. தாங்கள் ஏதாவதொரு திட்டம் போட்டிருக்கிறீர்களா என்று கேட்கிறேன்."

"திட்டத்திற் கென்ன? என் மனத்தில் ஒரு திட்டம் உளது. அதை எழுத்தால் எழுதி விடுவது எளிது. ஆனுல் முதலில் ஒரு உருப்படியான காரியத்தில் இறங்கிய பின்னரே நம் திட்டத்தை

வெளியிட்டு அதன் பொருட்டு முயல வேண்டும்.''

"அந்த உருப்படியான காரியம் என்னவோ?''

"கொள்கை விஷயத்தில் ஒன்று பட்டுள்ள நாமிருவரும் முதலில் மணந்து கொள்ள வேண்டும்.''

இவ்விதம் சொல்லிக் கொண்டே சுந்தரம் சுந்தரியின் முகத்தைப் பார்த்தான். சுந்தரியின் முகம் செக்கச் செவேலென்று சிவந்தது. உடனே தலையைத் தொங்கப் போட்டு கீழ் நோக்கினுள். ஆனல் விரைவில் தன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு தலை நிமிர்ந் தாள். சுந்தரம் அதை கவனித்து மேலும் சொன்னன்:

"மிஸ் சுந்தரி, என்னை நம்புங் கள். காதல் கீதல் என்ற அசட் டுணர்ச்சியுடன் நான் இவ்வண் ணம் தங்களுடன் பேசுவதாகக் கருத வேண்டாம். விழுமிய கருத் தொன்றே என்னை உந்து கின்றது.''

சுந்தரி மௌனஞ் சாதித்தாள். ஆனல் அமைதியாக இருந்தாள்.

"இதோ பாருங்கள், மிஸ் சுந் தரி. இளைஞராகிய நாம் தூய மனத்துடன் விஷயங்களை ஆராய் கிருேம். ஒரு விஷயம் உண்மை என்று மனத்தில் பட்டவுடனே அதை அனுபவமாகப் பெற எத்த கைய தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கிருேம். இது இளைஞர்க் குரிய சிறப்பியல்பு. ஆனல் பின்னல் நமக்கு நேருவ தென்ன? தாங்களே முன்பு கூறியபடி நம்முடைய வேகம், உணர்ச்சி, லட்சியம் யாவும் காற்று வாக்கில் சென்று விடு கின்றன. வாழ்க்கை உயிரற்ற தொரு சம்பிரதாயமாய் விடுகிறது. இப்படியே போய்க் கொண் டிருந்தால் நமது சமூகத்தின் கதி என்ன வாகும்? சொல்லுக்கும் செயலுக்கும் இடையே பெரும் பிளவேற் பட்டால் நாம் முன் னேறுவதெங்கனம்? ஆதலால், விழுமிய கொள்கைகளிலும் லட்சி யங்களிலும் நாட்டங் கொண்ட இளைஞர் தம் கொள்கைகளின் படி வாழ்க்கையை நடத்த முன் வர வேண்டும். சூழ் நிலையை எதிர்த்துப் போராட வேண்டும். தனித்து நிற்கவும் அஞ்சாது, மதி கெட்ட உலகை நம் வழித் திருப்ப முயல வேண்டும். ஒரே கருத் துடைய நாமிருவரும் இக்காரியத் தில் ஈடுபடுவதன் பொருட்டு மணந்து கொள்வோம்.''

சுந்தரி மீண்டும் முகஞ் சிவந் தாள்.

"மிஸ் சுந்தரி, நான் திடுதிப் பென்று இப்படிப் பேசுவதற் காக என்னை மன்னிக்க வேண் டும். நாம் புரட்சி மயமான காலத்தில் வாழ்கிறேம். எங்கும் வேகமும், சுறுசுறுப்பும், உணர்ச் சியும் காணப்படுகின்றன. இந்த நிலையில் வளைத்து வளைத்துப் பேசா மல் வெட்டொன்று துண்டிரண் டாகப் பேசுவதே முறை. தமி ழர்களாகிய நாம் பல ஆண்டு களாக வீணே காலத்தைப் போக்கி வருகிறேம். புரட்சி யைப் பற்றிப் படிக்கிறேம். ஆனல் புரட்சியில் ஈடுபடாமல் மந்தமாக இருக்கிறேம். புறத்தே வீரப் பேச்சு, அகத்தில் கோழைத்தனம்: இந்த இரட்டை வாழ்வு ஒழிய வேண்டும். நாம் அடிமைக் குழியிலிருந்து வெளி யேற வேண்டுமாயின், அகத்தி லும் புறத்திலும் புரட்சி கரமான மாறுதல்களுக்கு இணங்கியாக வேண்டும். புரட்சி யின் அவசியத்தை உணர்ந்த நாம் நம்மைப் பிரிக்கும் சாதித் தளைகளை யகற்றி, திருமணத்தில் ஒன்றி, மற்றவர்களுக்கு வழி காட்ட

வேண்டும். தீவிர மாறுதல்களுக்கு இதுவே காலம்.''

சுந்தரி ஒரு நிமிடம் சும்மாயிருந்தாள். அவளுடைய உள்ளத்தில் ஏதோ கொந்தளித்துக் கொண்டிருந்ததென்பது அவள் இடையிடையே விட்ட பெருமூச்சால் தெரிந்தது. அதை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அமைதியாகச் சொன்னாள்.

"மிஸ்டர் சுந்தரம், நீங்கள் பேசியதெல்லாம் சரி. ஆனால் நாம் இதுகாறும் மாணவர் என்ற முறையிலேயே ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம். இதர விஷயங்களில் நாம் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் ஏற்பட வில்லை. திருமணம் என்பது கிள்ளுக் கீரையன்று; அது வாழ்க்கையை அடியோடு மாற்றும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். உள்ளத்தைப் பற்றிய இப்பெரு விஷயத்தை இப்படி ஒரு நொடியில் முடிவு செய்து விடமுடியுமா? அன்றியும், மண வாழ்க்கை வெற்றிகரமாக நடப்பதற்குக் காதல் இன்றியமையாததல்லவா? ஒருவரையொருவர் நன்கறியாத நாம் திடுமென்று மணந்து கொள்வதெங்ஙனம்?''

"மிஸ் சுந்தரி, சுதந்தர மணத்திற்குக் காதல் இன்றியமையாதது தான். நான் காதல் மணத்தை 'ஆதரிப்பவனே'. சங்க காலத்தில் போல் சாவதானமாகக் காதல் நாடகம் நடத்து வதற்கு இது சமயமா? அன்றியும், காதல் மணம் என்று இப்போது கூறப்படும் மணங்களில் நாம் உண்மையான காதலைக் காண்கிறோமா? நாம் காண்பது பெரும்பாலும் சதையுணர்ச்சி; காமம்; உடல் கவர்ச்சி; உடலில் கவர்ச்சியுள்ள வரையில் இக்காதல் நீடிக்கிறது. கவர்ச்சி நீங்கினால் காதலேது? கத்திரிக்காயேது? ஒரு புருடன் காதல் என்று சொல்லி ஒருத்தியை மணக்கிறான். சிறிதுகாலத்திற்கெல்லாம் வேறொரு பெண்ணின் மீது இச்சை செல்கிறது. அதை அந்தரங்கமாக நிறைவேற்றிக் கொள்கிறான்.

சமூகம் அறிய வந்தாலும் அவனைச் சும்மா விட்டுவிடுகிறது. பெண்ணின் நிலையோ முற்றிலும் மாறானது. உள்ளத்தில் காதல் வறண்டு அவள் மாறுபடினும் தன்னிச்சையின்படி அவள் யாதொன்றும் செய்ய முடிவதில்லை. சமூகத்தின் கண்காணிப்பும் பந்தங்களும் அவள் விஷயத்தில் மட்டும் அவ்வளவு கண்டிப்பு. இந்த நிலையில் வாழ்க்கையில் உண்மையான காதலேது? உண்மையான காதல், உள்ளத்தை உயிரைப் பற்றியது. அது தூயதானது. அதற்கு அழிவே கிடையாது.

உயர்விலும் தாழ்விலும் சீவனிலும், சாவிலும் உண்மைக் காதலர் ஒன்றியிருப்பர். ஒரு லட்சியத்தின் பொருட்டு மணப்பவரிடயே ஆரம்பத்தில் இத்தகைய காதல் இல்லாதிருக்கலாம். ஆனால் அந்த மணம் நாளடைவில் உண்மைக் காதலாக வளருகின்றது. லட்சியத்தில் ஒன்று பட்ட காதலரே சிறந்த காதலர். நாம் அத்தகைய காதலராகத் திகழவேண்டுமென்பதே என் விருப்பம்.''

"மிஸ்டர் சுந்தரம், கருத்தளவில் நான் இதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், நாம் மணந்து கொள்வதற்கு எத்தனையோ தடங்கல்கள் உள்ளனவே. நீங்களோ பிராம்மணர்; நானோ முதலியார் இனம். இந்து சட்டப்படி நம்முடைய மணம் செல்லாது. இது முதல் தடை. இரண்டாவது, நம்முடைய பெற்றோர்கள் இம்மணத்திற்கு இணங்கார். சட்டத்திற்கு விரோதமாகவும் உற்றார் உறவினர் சம்மதமில்லாமலும் இக்காரியத்

தைச் செய்து நாம் சமூகத்தில் தனித்து நிற்கமுடியுமா?''

"மிஸ் சுந்தரி, லட்சியத்தைக் கடைப்பிடித்து நிற்போருக்கு இக்கஷ்டங்கள் யாவும் உண்டு. ஆனால், அஞ்சா நெஞ்சினராய் நாம் இவற்றைச் சமாளித்து வெல்ல வேண்டும். நம்முடைய கொள்கைகளில் உறுதியான நம்பிக்கை மட்டும் இருப்பின், இவற்றை நாம் நிச்சயமாக வெல்வோம். இப்போது பரிபாலனஞ் செய்யப்பட்டு வரும் புராதனச் சட்டம் நமக்குத் தடையாயிருக்கிறது தான். ஆனால் ரிஜிஸ்டர் மணம் நமக்கு அபயமளிக்கிறது.

"இக்காலத்தில் பல லௌகீக சௌகரியங்களை உத்தேசித்து ரிஜிஸ்டர் மணம் செய்து கொள்கிறார்கள். நாம் சமூக நலன் கருதியும், எதிர்கால வேலையை உத்தேசித்தும் தூய எண்ணத்துடனும் இம்முறையில் மணஞ் செய்து கொள்வோம். நாளடைவில் சமூக நிலைக்கேற்பச் சட்டமும் மாறத்தான் போகிறது. பழைய சம்பிரதாயத்தில் ஊறிப்போன பெற்றோர்கள் இணங்கார் என்பது உண்மையே. அதற்காக நம் லட்சியத்தைக் கைவிட்டு விடுவதா? நம்முடைய விழுமிய கருத்துக்களைச் சொல்லி அவர்களின் மனதை மாற்ற முயலுவோம். அது முடியாதாயின், அவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் நம் வேலையைப் பார்ப்போம். என்னைப் பொறுத்த வரையில் என் தகப்பனார் இணங்கமாட்டார் என்று எனக்குத் தெரியும். உன் தகப்பனார் எப்படியோ?''

"சம்பிரதாயத்திற்கு விரோதமாகச் செல்லும் இயல்பு அவரிடம் கிடையாது. ஆயினும், நான் உறுதியாக நின்றால், அதிகமாகத் தடைபோட மாட்டார் என்று எண்ணுகிறேன். நான் அவருடைய ஒரே செல்வ மகள். எனக்குத் தாயாரில்லை. ஆகவே, என்மேல் அவருக்குப் பிராணன். நான் கண்ணீர் விட்டால் அவர் பொறுக்க மாட்டார்''

"நானும் என் தகப்பனாருக்கு ஒரே மகன். எனக்கும் தாயில்லை. நம்மிருவருக்கும் எவ்வளவு ஒற்றுமை யிருக்கிறது பார்த்தாயா? ஆனால் என் தகப்பனார் வைதிகம். இதற்கெல்லாம் சம்மதியளிக்க மாட்டார். கூடிய மட்டிலும் எதிர்த்துப் பார்ப்பார். இறுதியில் எக்கேடாவது கெட்டுப்போ என்று விட்டுவிடுவார்.''

"அவருக்கு என்ன வேலை?''

"லேவாதேவி அன்றியும் தஞ்சையிலும் திருச்சியிலும் ஏராளமான நிலபுலன்கள் உண்டு.''

"என் தகப்பனாரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அவருக்குக் கோவையில் இரண்டு பஞ்சாலைகள் சொந்தம். இருபது லட்சத்திற்குக் குறைவில்லை.''

"பொருளாதார விஷயத்திலும் நாம் சற்றேறக்குறைய ஒரே நிலையில்தான் இருக்கிறோம். நம்மிருவருக்கும் எவ்வளவு பொருத்தம் பார்த்தயா? உன் பெயர் சுந்தரி; என் பெயர் சுந்தரம். நாம் சற்றேறக்குறைய சமவயதினர் என்றே எண்ணுகிறேன். எனக்கு 23 ஆகிறது. உனக்கு?''

"எனக்கு 21 ஆகிறது.''

"அப்புறம் நாமிருவரும் ஒரே வகுப்பில் படித்து ஒரே பரிட்சை கொடுத்திருக்கிறோம். சமூக விஷயங்களில் நமக்கு ஒரே லட்சியமும், கொள்கையும்தாம். நம்முடைய தகப்பன்மார்கள் இணங்கி வந்தால், நம்மிருவரின் செல்வத்தையும் நம் லட்சியம் நிறை

வேறும் பொருட்டுத் தாராளமாக செலவு செய்யலாம். அந்த செல்வம் கிட்டாவிடினும் பாதகமில்லை. நமது வாழ்க்கைக்குத் தேவையான பொருளைச் சம்பாதித்துக் கொள்ளும் ஆற்றல் நமக்குண்டு சமூகப் பணியே நமக்கு சீவனும் இன்பமுமளிக்கும். உள்ளத்தில் அமைதியும் திருப்தியும் இன்பமும் இருப்பின், மற்ற விஷயங்களைப் பற்றி நமக்கென்ன கவலை? நம்மிருவருக்குமிடையே இவ்வளவு அனுகூலங்களும், ஒற்றுமையும் இருந்தும், நாம் இவற்றைக் கை நழுவ விடுவது துரதிருஷ்டமாகும் ஆதலால், மிஸ் சுந்தரி, நீ தான் முடிவு செய்ய வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் தீர்மானஞ் செய்தாய் விட்டது."

சுந்தரி மௌனமாக இருந்தாள். ஒரு பெரிய காரியத்தில் எப்படி இலேசாக இறங்கி விடுவது என்ற ஒரு தயக்கம் அவளிடத்தில் காணப்பட்டது.

"ஏன் மிஸ் சுந்தரி? ஏன் இந்தத் தயக்கம்? அச்சத்தை விடுங்கள். என்னைப் பூர்த்தியாக நம்புங்கள். என் உயிருள்ளவரையில் உங்களைக் கைவிடேன். லட்சியத்தின் பொருட்டாகவும், சமூக நலனுக்காகவும், செல்வம், பதவி, சுகம் ஆகிய யாவற்றையும் துறந்த தமிழ் வீரி இவள் — எனச் சரித்திரம் கூறப்போகும் பெருமையை இழக்காதீர்கள்!"

"மிஸ்டர் சுந்தரம், நீங்கள் சொல்வதோ மகத்தான வேலை; வாழ்க்கையை உருத் தெரியாமல் மாற்றி விடுந்தன்மையது. தகப்பனரின் நிழலில் இருந்து கொண்டு இடைவிடா இன்பத்தைத் தவிர வேறொன்றையும் அறியாப் பேதைச் சிறுமியாகிய என்னை உற்றார் உறவினரின் தொடர்பையறுத்துக் கொண்டு வாழ்க்கைச் சுழலில் தனித்து நிற்குமாறு அழைக்கிறீர்கள். எனக்குப் பயமாயிருக்கிறது."

"மிஸ் சுந்தரி, மகத்தான வேலையாயிற்றே என்று மலைக்க வேண்டாம். லட்சியத்தின்மீது இடைவிடா ஆர்வமும், நெஞ்சில் உறுதியுமிருந்தால், மலைபோல் வரும் கஷ்டங்கள் சூரியனைக்கண்ட பனி போல் மறைந்து விடும். இவ் வேலையில் நீங்கள் தனித்து நிற்க மாட்டீர்கள். உயிரும் உடலும் போல நாமிருவரும் இணைபிரியாமல் என்றும் சேர்ந்தே இருப்போம். நம்மிருவரின் உறுதியும் தியாகமும் வீணாகப் போகா. இன்று நம்மை எதிர்ப்பவர், இறுதியில் தலை வணங்கி நம்முடன் சேருவர். முற்போக்காளரின் ஆதரவும், ஆசியும் நமக்கு என்றும் இருந்துவரும். இளைஞர் நம்மை மேன்மேலும் பின் தொடர்வர்."

"மணந்து கொண்ட பின் நமது திட்டமென்ன?"

"மணந்தவுடன் நாம் நம்முடைய கொள்கைகளைத் தமிழ் நாடெங்கும் பிரசாரஞ் செய்ய வேண்டும். ஆங்காங்கு கலப்பு மணச் சங்கங்கள் அமைக்க வேண்டும். அவற்றில் இளைஞர்களைப் பெருவாரியாகச் சேர்க்க வேண்டும். பல இளம் பிரசாரகர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களையும் இவ்வேலையில் மும்முரமாக ஈடுபடச் செய்ய வேண்டும், ஐந்து வருடங்களில் ஐந்து லட்சம் தமிழர் குடும்பங்களில் கலப்பு மணம் நடைபெறச் செய்வதே நமது திட்டம். இத்திட்டம் வெற்றிபெறின், நாம் நம் வாழ்வின் பயனையடைவோம். தமிழ் நாட்டில் கலப்பு மணம் மிகவும் சகசமாகிவிடும். சாதி ஒழியும் பின்னர் வேறு திட்டங்கள் போட்டு மும்முரமாக வேலை செய்தால் தமிழரை ஓரினமாக்கி விட

லாம். இம்மகத்தான வேலைக்குத் தான் உன் ஒத்துழைப்பை நாடுகிறேன்."

"என் அன்பார்ந்த சுந்தரம்!— நான் இனி உங்களை மிஸ்டர் சுந்தரம் என்று அழைக்கப் போவதில்லை. சுந்தரம் என்றே உரிமையுடன் அழைப்பேன் — நீங்கள் இறுதியில் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டீர்கள். லட்சியத்தின் மீதுள்ள உங்கள் ஆர்வமும், தளரா உறுதியும் என்னையும் பற்றிக் கொண்டன. இனித் தயங்கேன். கடவுளையும் உங்களையும் நம்பி, உங்களுடன் தோளுக்கு தோள் நின்று இம் மகத்தான பணியில் ஈடுபடுகிறேன். இன்று நான் உம்முடன் ஐக்கியப் பட்டு விட்டேன். இனி என்னை ஆட்கொண்டு பாதுகாக்க வேண்டியது உங்கள் புனிதமான கடமை. உங்கள் கடமையில் நீங்கள் இம்மியளவும் பிறழமாட்டீர்கள் என்னும் நம்பிக்கை எனக்குப் பூரணமாக உண்டு."

"சபாஷ் சுந்தரி! உன் தைரியத்தை மெச்சுகிறேன். நீ சாமான்னியப் பெண்ணல்ல. தமிழ்த் தாய் ஈன்றெடுத்த வீரப் புதல்வி நீ! உன்போன்ற ஆயிரக்கணக்கான வீரப்பெண்மணிகள் இவ்வரிய பணியில் ஈடுபடுமாறு நம் அன்னை பாரதத்தாய் அருள் புரியட்டும். உன் கை கொடு."

சுந்தரி கை கொடுக்க, இருவரும் ஆர்வமுடன் கை குலுக்கினர்.

கலைக் கதை:

இன்ப வேட்கை

ஆர். அய்யாசாமி எம்.ஏ

அவன் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டான். பாலை வனத்திலே பிருந்தாவனத்தைக் காணமுடியுமா? காட்டுத்தீயின் நடுவில் நிலவொளியின் அமுத இன்பத்தை அனுபவிக்கக் கூடுமா? உலகம் அவனுக்குத் துன்ப மயமாகத் தோன்றியது. விடுதலைக்கு வழியில்லையா?

அவன் ஒரு பக்தன். உடலும் உள்ளமும் குழைய ஈஸ்வர நாமத்தைப் பாடுவதே அவன் தொழில். ஆனால் பக்தியும் பஜனையும் அவனுக்கு ஆறுதல் கொடுக்கவில்லை. அலை எப்போது ஓயும்? சாந்தி வெள்ளத்தைப் பருகி எப்போது ஆன்ம வேட்கை தணியும்? விடுதலைக்கு வழியே இல்லையா?

தற்கொலை? — அதற்கு அவன் தயாராயில்லை. தற்கொலை மகா பாவமென்னும் சாஸ்திர நியதியை அவன் பரிபூரணமாக நம்பினன். துறவு? — சர்வ சங்க பரித்தியாகத்துக்கு மேலான மோக்ஷ மார்க்கமில்லையென்பது உண்மைதான். ஆனால் அவன் மனம் அதற்குப் பக்குவமடையவில்லை. ஒரு நாள் வழக்கம்போல் அவன் கோவிலுக்குப் போனபோது உடலெங்கும் விபூதியணிந்து திகம்பரனகிய ஒரு துறவியைக் கண்டான். ஆலயத்துக்கு எதிரில் இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் அந்த முனிபுங்கவன் உலகத்தை மறந்து அசஞ்சலபக்தியால் விழிகளைப்பாதிமூடித் தியானத்தில் வீற்றிருந்தான். வலிய ஆகர்ஷிக்கும் கம்பீரமான தோற்றம்! மாசற்ற இன்பத்தினல் ஒளி வாய்ந்த மணிவதனம்!

பக்தன், அவனை அணுகி, "ஐயனே! இந்த ஆனந்தத்துக்கு வழியென்ன? என் மனத்துயரம் என்று தீரும்? கொஞ்சம் கருணை செய்யுங்கள்" என்று வேண்டினன்.

துறவி கண்களை அகலவிரித்துப் புன்முறுவல் பூத்த முகத்துடன், "குழந்தாய்! உன் ஆசை நிறைவேறும். பக்தியும் பஜனையுமே அதற்கு மார்க்கம்," என்றுன்.

பக்தன் ஆச்சர்யத்தினல் மலைத்தான். "நான் இப்போது மேற்கொண்டுள்ள பக்தியும் பஜனையும் போதாதா? இந்த ஊரில் என்னை விடச்சிறந்த மெய்யன்பன் இல்லையென்பது பொதுஜன வாக்கு. இதைவிட மேலான பக்தி எங்கிருந்து உண்டாகும்? எப்படி யுண்டாகும்? உண்டாக வழியிருக்க வேண்டும். இல்லையென்றல் எனக்கு மன சுகம் இல்லாததன் மர்மம் என்ன? இந்த யோகியின் அருள் வாக்கு ஒரு போதும் பொய்யாகாது. ஆனல் என் பக்தியில் என்ன குறையிருக்கிறது? என்ன பிழையிருக்கிறது?" என்று சிந்திக்கத் தொடங்கினன்.

அதன்பின் இக்கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதே அவன் நோக்கமாயிற்று. உறக்கத்திலும் கனவிலும் அந்தத் துறவியின் வார்த்தை அவனை அலட்டத் தொடங்கியது. ஞானிகளை அணுகினன். அறிஞர்களை அடைந்து ஆலோசனை கேட்டான். பலரும்

பலவிதமாகச் சொன்னார்கள். ஒன்றும் அவனுக்குத் திருப்தி யளிக்கவில்லை.

முடிவில் ஆசையும் சஞ்சலமும் பிடர்பிடித்துத் தள்ள அவன் ஊரைவிட்டுப் புறப்பட்டான். உண்மையான ஆனந்தத்தை எங்கே பெறலாம்? குற்றமில் லாத பக்திச் சுடரை எங்கேயடைய லாம்?

உலகப்புகழ்வாய்ந்த ஒவ்வொரு கோவிலுக்கும் அவன் சென்றான். குயில் நாதம் தோற்கும் மதுர மான குரலில் இறைவனுடைய ஆயிர நாமங்களையும் பாடி உருகி னான். மதுரை, காஞ்சி, ஸ்ரீரங்கம், சிதம்பரம், ராமேஸ்வரம் ஆகிய சகல ஆலயங்களிலும் அவனு டைய அன்புவெள்ளம் பெருக் கெடுத்தோடியது. ஆனால் இன்ப வேட்கை மட்டும் அவனுக்குத் தீர்ந்தபாடில்லை. சாந்திமயமான இமயத்தின் சிகரத்திலே எழுந்தரு ளிய மீனாக்ஷியும், பறையனைப் பார்ப்பனனாக்கிய சிதம்பர மூர்த்தி யும் காத்தலே தொழிலாகக் கொண்ட அரங்க நாதனும் அவ னைக் கைவிட்டனர்.

உலகம் அவனைத் தொழுதது. அன்பர்கள் அவன் காலடியின் மண்ணைத் தலைமேல் அணிந்து மகிழ்ந்தனர். அவன் கீர்த்தி எங் கும் பரவியது. ஆனால் அந்தப்புக ழும் ஆராதனையும் அவனுடைய ஆன்ம அதிருப்தியையே அதிக மாக்கின.

கால்கள் ஓய்வு கொள்ளவில்லை. ஓய்வுக்கு இடந்தான் ஏது? காடும் மலையும் கடந்தான். நதியும் பொழிலும் தாண்டி நடந்தான். கடைசியில் அவன் இயற்கை வனப்பு வாய்ந்த ஒரு சிற்றூரை அணுகினான். வாவென்றழைக் கும் கோபுரங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் தங்கச் சிலைகளும் உள்ளங்கவரும் சிற்பங்களும் அங்கே காணக் கிடைக்கவில்லை. வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்று அழிக்கவும், தாய்மார்கள் தங்கள் பெண்களுக்கு மணமக் களைத் தேடிப்பிடிக்கவும் அந்தந்தப் பொருள்களுக்கு இல்லாத குணங் களையெல்லாம் ஏற்றிச் சொல்வது போலத் தங்கள் தங்கள் ஆலயங் களிலுள்ள விக்கிரகங்களின் தனி வல்லமையைப் பற்றிக் கொட்டி முழக்கும் க்ஷேத்திர அதிகாரிகளும் அங்கே இருக்கவில்லை. ஒரு சிறு கோவில்; யாதொரு அலங்கார மும் இல்லாத ஒரு சின்னஞ் சிறு சிவாலயம்தான் அந்த ஊரில் இருந்தது. சிவலிங்கத்தின் முன் னால் ஒரு ரிஷப விக்ரகமும் உண்டு.

பக்தன் நடந்த களைப்பினால் அயர்ந்து தூங்கினான். ஆனால் வழக்கம்போல் அதிகாலையிலேயே கண் விழித்துப் பாட ஆரம்பித் தான்.

அது நடவு காலம். கோவி லின் உள்ளிருந்து வெளியே பார்த் தால் குடியானவர்கள் வயற்புறங் களில் பயிர் நடும் காட்சியைக் கண்ணெட்டும் திக்குகளிலெல் லாம் காணலாம்.

பக்தனுடைய குரலிலே இனிமையிருந்தது. ஆனால் மனத் திலே இனிமையிருக்கவில்லை. “இந்த ஏழையின் சஞ்சலம் எப் போது நீங்கும்? அருட்பெருங் கடலாகிய இறைவனே, எனக்கு விமோசனமே இல்லையா?” என்று வேண்டிக் கொண்டு அவன் எழுந்தான்.

உடனே அவன் எதையோ கண் டது போலத் திடுக்கிட்டான். கோவிலுக்கு முன்னால் இருந்த ரிஷப விக்கிரகம் அவனைப் பார்த்து இரங்கிக் கண்ணீர் விட்டு, “அன்பனே! உன்னை ஸ்வீகரிப்ப தற்கு பகவான் அந்த மூலஸ்

தானத்தில் இல்லை," என்று சொல்வது போலவும் பிறகு மெளனமாகத் தலையை வயலின் பக்கம் திருப்புவது போலவும் தெரிந்தது. என்ன ஆச்சர்யம்! பக்தன் நந்தியைக் கூர்ந்து கவனித்தான். இது உண்மைதானா? அல்லது வெறும் மன மயக்கமா? தலை வயற்புறம் தான் திரும்பியிருந்தது. ஆனால் அதன் கண்களில் நீர்த்துளி தென்படவில்லை. "நான் கோவிலுக்குள் நுழைந்தபோது ரிஷபத்தின் தலை எந்தப் பக்கம் திரும்பியிருந்தது?" என்று அவன் நினைத்துப் பார்த்தான். ஆனால் அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை.

பக்தன் வாயிற்படியில் நின்று கொண்டு வயலை நோக்கினான். நாட்டுப்புறத்தின் தெய்வீக அழகு அவன் கண்வழி நுழைந்தது. எங்கு பார்த்தாலும் தூய்மையின் நடனம்! காலையிளங் காற்று ஆனந்தமாகத் தவழ்ந்து கொண்டிருந்தது. உதய சூரியன் செங்கதிர்களை அள்ளித் தெளித்து இந்திரஜாலம் செய்துகொண்டிருந்தான். பக்தனுடைய உள்ளத்தில் அவனை அறியாமலே ஒரு மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது. ஆத்ம வஞ்சனையின் நர்த்தனரங்க மாகிய நகரங்களில் செல்வத்தின் நடுவில் இருந்து பழகிய அவனுக்குப் பிரகிருதி தேவியின் பரிசுத்தமான தோற்றம் ஆச்சரியகரமாக இருந்தது. நள்ளிரவில் ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் வானின்றிழிந்து மலரிதழ்களை அவிழ்க்கும் பனித்துளிபோல அந்தக் காட்சி அவன் மனத்தை மலரச் செய்தது.

பக்தன் அசையாமல் நின்றான். ரமணீயமான அந்த வயல்வெளியைக் கண் கொட்டாமல் பார்த்தான். அங்கே அரை நிர்வாணிகளான குடியானவர்கள் ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பச்சைப் பசேரென்ற நெற்பயிர்கள் மந்தமாருதத்தில் அசைந்தாடின. கொஞ்சம் தூரத்தில் காய்த்துக் குலுங்கும் தென்னை மரங்கள் தலை தூக்கி நின்றன. உழவர்களின் பாட்டும் காற்றிலே மிதந்து வந்து அவன் காதுகளில் இன்பத்தேனை ஊற்றியது. ஒரு புறம் பாம்பு நெளிவது போல் வளைந்து வளைந்து சென்ற சிற்றருவி யொன்று தென்பட்டது. மற்றொரு புறத்தில், வயலுக்கும் தோப்புக்கும் அப்பால், ஒரு பெரிய குன்றும் நிமிர்ந்து நின்றது.

திடீரென்று கிடைத்த அந்த மன நிம்மதியைக் குறித்து பக்தன் சிந்தித்தான். அந்தி நேரம் வரையிலும், பின் உறங்கும் வரையிலும் அதற்குப் பிறகு கனவிலும் அதே எண்ணம் தான் அவன் நெஞ்சில் குடி கொண்டிருந்தது.

மறுபடியும் மனமயக்கம் தானா? அல்லது ரிஷபம் உண்மையிலேயே பேசுகிறதா? பக்தன் மீண்டும் நந்தியின் தோற்றத்தைக் கண்டான்.

"அன்பனே! உன் துயரத்தைக் கண்டு மனம் இரங்கினேன். அதனால்தான் கண்ணீர் விட்டு வருந்தி வயற்புறம் திருப்பி உனக்கு ஆனந்த மார்க்கத்தைக் காட்டினேன். நீ ஒரு பக்தன் என்பதில் சந்தேகமில்லை. உன்பஜனை குற்றமற்ற தென்பதிலும் ஐயம் இல்லை. ஆனால் இறைவன் இருக்கும் இடத்தை இது வரையிலும் நீ கண்டுபிடிக்கத் தவறினாய். மீண்டும் சொல்லுகிறேன். நீ ஒரு சிறந்த பக்தன். ஆனால் யாருடைய பக்தன்? கடவுளின் பக்தனா? அல்லது உன் சொந்த சகோதரர்களின் பக்தனா? நாள் முழுதும் வயலிலே உழைத்து மகிழும் அந்தப் பேதைகள் உன் உடன் பிறப்பல்லவா? ஜீவனத்துக்கு வழியில்லாமல் தயங்கி

னாலும் மனத்திருப்தியைக் கைவிடாத அந்த ஏழைகள் உன் சகோதரர்களல்லவா? நீ அவர்களைத் தொழுவதுண்டா? இறைவனைப் பஜிப்பதால் நீ என்ன எதிர்பார்க்கிறாய்? செல்வமா? ஆம் என்றால், பூமித்தாய் தங்க கர்ப்பம் உள்ளவள். அந்த ஏழைகளுடன் ஏழையாய் நீயும் வயலில் இறங்கி வேலை செய்தால், கிடைக்காத பொருளும் உண்டோ? கடவுளின் மக்களைக் கைதூக்கி விடுவதைக் காட்டிலும் சிறந்த பஜனை ஏது? பக்தனே, உனக்குத் துக்கத்திலிருந்து விடுதலை வேண்டுமா? அப்படியானால் முதலில் உன் ஆத்மாவை மறந்துவிடு. அந்தப் பேதைகளை உன்னத நிலைக்குக் கொண்டுவரும் பெரும் பணியில் இறங்கு. உன் இன்ப வேட்கை தீருவதற்கு இதுவே சிறந்த வழி,'' என்று தூக்கத்தின் நடுவில் ரிஷபம் பேசுவது போலிருந்தது.

அதற்குப் பின்னும் அவன் பக்தனாயிருந்தான். கடவுளின் மக்களைப் பஜிக்கும் பரம பக்தன். ``எனக்கு விடுதலை வேண்டும்,'' என அவன் ஆலயம் தோறும் நடந்து திரிந்து வருந்தவில்லை. பாடுகிடந்து உடலை வருத்தித் துன்பம் கொள்ளவுமில்லை.

அந்தச் சிறிய கோவில் இன்னும் இருக்கிறது. வயலின் பக்கம் திரும்பி அவனுக்கு இன்பவழியைக் காட்டின ரிஷப விக்கிரகமும் இருக்கிறது. ஏழைக்குடியானவர்கள் இன்னும் வயல்களில் வேலை செய்கிறார்கள். அந்த பக்தன் தன் இஷ்ட தெய்வத்தை ஏழைகளின் மத்தியில் தான் ஏழையின் உருவத்தில் கண்டானென்றும் மக்கள் நம்புகிறார்கள். அதையொட்டி அந்தச் சிறு கோவிலில் ஒரு உற்சவமும் நடக்கிறது. ஆனால் இன்று அந்த ஆலயத்துக்குத் தான் பிரதானம். உற்சவத்துக்குத்தான் மகிமை. அக்கோவிலுக்கருகில் நின்றுகொண்டு வெகு நாட்களுக்கு முன், ஒரு மெய்யன்பன், ``ஆத்ம சுகம் வேண்டுமானால் ஆத்மாவை மறந்து சொந்த சகோதரர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்,'' என்று அருளிய பெருந் தத்துவத்தை உலகம் மறந்து விட்டது.

வாழ்க்கைச் சித்திரம்:

பாசம்

[பாசரசு]

நந்த கோனாரின் ஆட்டுக் கொட்டிலிலே திண்டு (ஆட்டின் பெயர்) யாருடைய வரவுக்கோ எதிர் பார்த்துக் கொண்டு படுத்திருந்தது. திண்டுவின் முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது. கொட்டிலின் வெளிக் கதவு வழியாகச் சலங்கைச் சத்தம் கேட்டது. திண்டு கண்களை இறுக மூடிக் கொண்டது. வெகு நேரமாகக் களைத்துத் தூங்குவது போல் பாசாங்கு செய்தது. சுந்து (பெண் ஆட்டின் பெயர்) கொட்டிலின் வாசற்படியைத் தாண்டி உள்ளே வந்ததும் வராததுமாக கொட்டிலைச் சுற்றிப் பார்த்தது. திண்டு பார்த்து விட்டு கொஞ்சம் கனைத்து சத்தம் செய்தது. திண்டு நிஜமாகவே தூங்கிக் கொண்டிருந்தால் இந்தக் கனைப்பைக் கேட்டு விழித்தெழுந்திருக்கலாம். பாசாங்கு செய்யும் பொழுது இடிமுழக்கங் கூட திண்டுவை அசைக்க முடியாது!

சலங்கை அதிக ஓசை செய்யும்படி சுந்து குதித்துக் குதித்து திண்டுவின் பக்கத்தில் வந்து நின்றது. அப்பொழுதும் திண்டு அசைவதாகக் காணோம்.

"என்ன நான் வந்திருக்கிறேன். உங்களுக்கு இன்னும் தூக்கமா?'' என்று கொஞ்சுதலாகக் கேட்டது சுந்து.

திண்டு கண்களைத் திறந்தது. ஆனால் வாயைத் திறக்க வில்லை. சுந்து மேலும் பேச ஆரம்பித்தது.

"இப்படி யெல்லாம் பண்ணினால் அந்த விஷயத்தைப் பற்றி உங்களை ஒன்றும் கேட்க மாட்டேன் என்று எண்ணம் போலிருக்கிறது. நான் உங்களை விடப் போகிறதில்லை. நேற்று சாயந்திரம் அந்தத் தஞ்சுவோடே உங்களுக்கென்ன வேலை......? அவளைப் பார்த்தால் உங்களுக்குச் சந்தோஷம் தலைக்கேறி விடுகிறது. என்ன கொஞ்சுதல்? என்ன ஆட்டம்? என்ன ஓட்டம்?...ப்பா... நேற்று உங்களைத் தொடர்ந்து என்னால் ஓடிவர முடியவில்லை. வயிற்றில் குழந்தையை வைத்துக் கொண்டு எப்படி ஓடுவது? நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் திரும்பவும் அந்தத் தஞ்சுவோடு பேசுவதாக இருந்தால், சத்தியமாகச் சொல்லுகிறேன், இப்பொழுதே நான் இறந்து விடுகிறேன். பிறகு உங்களிஷ்டப்படி ஆடலாம், ஓடலாம்! நேற்று என் மனம் என்ன பாடு பட்டது தெரியுமா? நீங்கள் தானே முதலில் என்னிடம் கெஞ்சி, கூத்தாடி, பிறகு...... இப்பொழுது தஞ்சுவோடு கொஞ்சப் போய் விட்டீர்கள்......'' என்று சொல்லிக் கொண்டே போயிற்று. இவ்வளவு நேரம் வாயைத் திறக்காத திண்டு பொறுமையை இழந்து விட்டது.

"அசடு, பேசாமல் இரு. நீ கூட அந்த நந்த கோனான் மனைவி மாதிரி பேசுகிறாயே! எப்பொழுது பார்த்தாலும் உனக்கு என்னிடம் சந்தேகந்தான். சந்தேகப் பிராணிகளுடன் நான் எப்படித்தான் வாழ முடியும்?'' என்று முடுக்காகப் பதில் சொல்லிற்று.

"சரி, சரி, நிறுத்திக் கொள்ளுங்கள்; நான் சந்தேகப் பிராணி தான். நீங்கள் போங்கோ, சீக்கிரமாகப் போங்க...... பிறகு

அவள் கோபித்துக் கொள்ளப் போகிறுள், போங்கோ...ஊம்...''

"என்ன, என் சுந்து, இப்படியெல்லாம் தாறுமாருகப் பேசுகிருயே, சத்தியமாகச் சொல்லுகிறேன். அந்தக் காளி மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்...'' என்று மேலே சொல்வதற்குள் சுந்துவுக்கு உடம்பு நடுக்கம் எடுத்தது. உடம்பு வியர்த்துக் கொட்டியது.

"ஐயோ, அந்தப் பெயரைச் சொல்லாதீர்கள்......'' என்று சுந்து சொல்லிற்று. அதற்கு மேல் சுந்துவினுல் பேச முடியவில்லே.

"என்ன சுந்து, ஏன் நடுங்குகிருய்? சமாசாரத்தைச் சொல்லேன்.''

"ஐயோ, நான் சொல்ல மாட்டேன்... அந்தப் படுபாவி...... அந்தப் பூசாரி எங்க அம்மாவை ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு அந்தக் காளிக்காக...... அந்தக் காளி எதிரிலேயே...... எங்க அப்பாவை நிறுத்தி, கத்தியை ஓங்கி அவன் கழுத்திலே போட்டான். பிறகு எங்கம்மாவின் உடல் வெகு நேரம் துடித்தது......'' என்று சொல்லிக் கொண்டே கண்ணீரைப் பலபல வென்று விட்டது.

"சே, பைத்தியக்காரத்தனம். நான் அதை நம்ப மாட்டேன். காளியாவது பலியை விரும்புவதாவது. மனிதர்கள்தான் என்ன மூடர்களா?'' என்று கேட்டுக் கொண்டே சுந்துவின் அருகில் வந்தது.

"உங்களுக்கு உடம்பு சுகமில்லே என்றீர்களே, இப்பொழுது எப்படி இருக்கிறது?'' என்று கேட்டது சுந்து.

"நீ என் பக்கத்தில் வந்து நின்றதுமே என்னுடைய நோயெல்லாம் பறந்து போய்விட்டது!''

"போங்கோ, உங்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் பரிகாசந்தான்.''

"அது போனுல் போகிறது. நீ பூர்ண கர்ப்பிணியாயிற்றே, நீ வெளியே அடிக்கடி போகலாமா?''

சுந்து வெட்கமடைந்தது. அது அங்கிருந்து வெளியே ஓடியது. திண்டுவும் அதைப் பின் தொடர்ந்து ஓடியது.

ஒரு வாரம் கழித்து, சுந்து இரண்டு குட்டிகளே ஈன்றது. சுந்து தன் குட்டிகளேப் பார்த்து பெருமையடைந்தது. இரண்டும் ஆண் குட்டிகள், சுந்து அவைகளுக்கு உடனே தம்மு, பொம்மு என்று பெயர் வைத்து விட்டது. சுந்து தன் குட்டிகளினுல் கொஞ்சம் சிரமப்பட வேண்டியதாயிற்று. தம்முவும் பொம்முவும் எதிர்பார்க்காத வேளேகளில் முரட்டுத்தனமாக சுந்துவின் மேல் 'பொதா' ரென்று குதிக்கும். அதனுல் தனக்கு உடம்பு வலித்தாலும், தன்னுடைய குட்டிகள்தானே என்று சுந்து தன்னேத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு அவைகளுடன் சேர்ந்து விளேயாடும்.

ஒரு நாள் தம்முவுக்கு உடம்பு சரியில்லே. சுந்து தம்முவின் பக்கத்திலேயே படுத்துக் கொண்டு அதைக் கவனித்து வந்தது. தம்மு இரண்டு நாளில் இறந்து விட்டது. சுந்து அந்த இரண்டு நாளாக ஒன்றும் தின்ன வில்லே. சுந்துவின் துக்கத்துக்களவே யில்லே. திண்டு அதற்கு ஆறுதல் சொல்லிற்று. "நமக்குக் கடவுள் பொம்முவையாவது உயிருடன் விட்டிருக்கிருரே! அதை நீ யோசித்தாயா? நீ இப்படி சாப்பிடாமல் இளேத்துப் போனுல் எனக்கு வருத்தமாக இருக்கும்.''

ஐந்து மாதங்கள் கடந்தன. ஒரு நாள் நந்தகோனர் வீட்டுக்கு ஒருவன் வந்தான். அவன் பொம்முவை விலைக்கு வாங்கி எடுத்துச் சென்றான். சுந்துவின் துயரத்திற்கு அளவேயில்லை. தொண்டை கிழிய கத்திற்று. கொட்டிற்குள்ளேயே அங்குமிங்கும் ஓடியது. பொம்முவும், பெற்றோரை விட்டுப் பிரியும் பொழுது கத்திக் கொண்டே போயிற்று. கொட்டில் பூட்டப் பட்டிருந்ததால் சுந்துவால் வெளியே வர முடியவில்லை.

"பெயருக்கு ஆண்பிள்ளைதான். பொம்முவை எவனோ அழைத்துப் போகிறான், நீங்கள் பாட்டுக்கு சும்மா இருக்கிறீர்களே!'' என்று சுந்து கத்திற்று.

"நான் மட்டும் எப்படி வெளியே போக முடியும்? என்று துக்கத்துடன் சொல்லிற்று திண்டு. அதற்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

அந்த ஊர் மிராசுதாருடைய பிள்ளைக்கு அம்மை போட்டது.

மிராசுதார் காளிக்குப் பலி கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார். அவர் நந்தகோனனைக் கூப்பிட்டு தனக்கு ஒரு ஆடு வேண்டுமென்று சொன்னார். நந்தகோனன் திண்டுவை ஒரு கயிற்றில் கட்டி அனுப்பினான். திண்டு போக மறுத்தது. சுந்து பலமாக கத்திற்று. மிராசுதாரின் ஆட்கள் திண்டுவை அடித்து இழுத்துச் சென்றார்கள்.

"ஐயோ, என்னை விட்டுப் போகிறீர்களே! நான் எங்கே போவேன்? எனக்கு யார் துணை? ஐயோ, போகாதீர்கள், நில்லுங்கள், நில்லுங்கள்.........'' என்று சுந்து கத்திற்று.

"சுந்து கண்ணு, பயப்படாதே. நான் கட்டாயம் திரும்பி வருகிறேன். இந்த மனிதர்கள் என்னை என்ன செய்து விட முடியும்? ஈவிரக்க மற்ற மனிதர்கள். பயப்படாதே, இவர்களிடமிருந்து தப்பி வருகிறேன்.'' என்றது.

சுந்து மறுநாள் அவ்வூர் காளிக் கோவில் அருகே புல் மேய்ந்து கொண்டிருந்தது.

காளி கோவிலிலிருந்து மேள சத்தம் கேட்டது. சுந்துவுக்குத் தன்னுடைய தாயின் நினைவு வந்தது. ஏனோ அதனுடைய மனதில் சந்தேக மொன்று உதித்தது. அதற்கு நடுக்க மெடுத்தது. காளி கோவிலை நோக்கி சுந்து வேகமாக நடந்தது.

இதற்குள் அங்கே கழுத்தின் மேல் கத்தி விழுந்தது. திண்டுவின் உடல் துடித்தது. சுந்துவின் மனமும் துடித்தது. சுந்து அசைவற்று நின்றது. தம்மு நோயினால் இறந்தது, பொம்மு பிரிந்து போனது, திண்டு பலியானது, முதலியவைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக சுந்துவின் மனதில் தோன்றியது. துக்கம் நெஞ்சை யடைத்தது. தனக்கு உண்டான அளவற்ற வருத்தத்தில் சாபம் கொடுக்காமலிருக்க முடியவில்லை. "மனிதர்களில் அநேகர் மிருகங்களை விட கேவலமானவர்கள். அவர்கள் மூடர்கள்......ம்ம்...... மனிதர்கள் ஒருவரோ டொருவர் சண்டையிட்டு மடியட்டும், உலகத்தில் பெரிய பெரிய போர்கள் உண்டாகட்டும். உலகம் பூராவும் பூகம்பங்கள், வெள்ளங்கள், உண்டாகி இந்தப் பாபத்திற்குப் பெயர் போன உலகம் சின்ன பின்னமாகப் போகட்டும்......... பஞ்சத்தாலும், நோயாலும் பசியாலும் மனிதர்கள் மடியட்டும் .... சண்டையின் காரணமாக மனைவி புருஷன், குழந்தைகள் எல்லாம் பிரிந்து துன்பத்திற்குள்ளாகட்டும்!'' என்று கத்தியது.

பிறகு சுந்து வெகுநாள் உயிரோடிருக்கவில்லை. ஆனால் இறந்தாலும் மனிதர்கள் கையில் அது இறக்கவில்லை.

மனோ தத்துவம்:

சாந்தி

"வல்லிக் கண்ணன்"

இந்த மாதிரி அபூர்வமான இதயத்தை அதற்கு முன் யாரும் கண்டிருக்கவே முடியாது. அடடா! மலர்ந்த பூவின் நறுமணம் உள்ளத்தை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தத் துடிப்பது போல் அவனுடைய மனசும் எதையோ நோக்கித் துடித்துக் கொண்டிருந்தது. அவனுடைய கோமளமான இதயத்தின் இன்ப வாதனையைத் தாங்க மாட்டாது, வீணையின் இன்னெலி போல் அடிக்கடி முனகிக் கொண்டிருந்தான்.

'சாந்தி.........சாந்தி.........அது எங்கே? எனக்கு சாந்தி தான் வேண்டும். அன்ருட அலுவல்களில் சிக்கி அலேமோதி அல்லலுறும் வாழ்விலே எனக்கு அலுப்பு ஏற்பட்டு விட்டது. மனம் அமைதி பெறவேணும். சாந்தி தேவை.'

இதுவே அவனது மோனத் துடிப்பு.

இன்றைய நாகரிக சமுதாயத்தின், ஜீவன்களின், பிம்பம் அவன். உழைப்பதுவே அவனது தொழில், பொழுது போக்கு, விளையாட்டு எல்லாம். எதற்காக யாருக்காக, உழைக்கிருேம் என்று தெரியாமல் ஓய்வின்றி உழைத்தான். எதையும் லட்சியம் செய்யாமலும், காலத்தை அளந்து விடுவதாகத் தன்னேத்தானே ஏமாற்றிக் கொண்டும் துடிக்கின்ற கடியாரம் போல. என்ருலும் அவன் மனதின் அடித்தளத்திலே அதிருப்திக்கிருமி அரித்துக் கொண்டிருந்தது. இதய ஆழத்திலிருந்து வளர்ந்து, பூதாகரமாக ஓங்கிவிட்டது. அதற்குப் பின் அமைதிக்கு இடம் ஏது?

'சாந்தி......சாந்தி......சாந்தி' என்று அலறினன்.

'புத்தகங்களைப் படி, படித்துக் கொண்டே இரு, சாந்தி காண்பாய்' என்று யாரோ போதித்தார்கள்.

அவனுக்கு வெறி பிறந்தது. எது தான் படிப்பது, எதைத் தள்ளுவது என்றில்லாமல் ஆவலுடனும் ஆர்வத்துடனும் புத்தகம் புத்தகமாக 'விழுங்கினன்' அவன். தனது இனிய மாறுதல் பற்றிய கனவுடன், அந்நிலையை எதிர் நோக்கிய பேய்ப்பசியுடன் இலை இலையாக அரித்துத் தின்னும் வண்ணாத்திப் பூச்சி போலே.

லட்சிய வேட்டையாடும் ஆவலில் வேலையை உதறிவிட்டு, அறைக்குள் அடைபட்டு, வெறும் புத்தகப் புழுவானன் அவன். ஆயினும் சாந்தி தான் கிட்டவில்லை. அதற்கு மாருக அவனிடமே அவனுக்கு வெறுப்புப் பிறந்து வளர்ந்தது.

'சே, என்ன வாழ்வடா இது! சாந்தியற்ற பிழைப்பு' என முனகிய அவனுக்கு மற்றவர்கள் எப்படி வாழ்கிருர்கள் என்றறிய ஆசை பிறந்தது. அலேந்தான் ஆராய்ந்து திரிந்தான், தனது விசாலப் பார்வையால் இம் மக்கட் தொகுதியை விழுங்கிய வண்ணம்.

இவ்வுலக வாழ்விலே யாராவது சாந்தியுடன் மகிழ்ந்திருக்கிருர்

ஐந்து மாதங்கள் கடந்தன. ஒரு நாள் நந்தகோனர் வீட்டுக்கு ஒருவன் வந்தான். அவன் பொம்முவை விலைக்கு வாங்கி எடுத்துச் சென்றான். சுந்துவின் துயரத்திற்கு அளவேயில்லை. தொண்டை கிழிய கத்திற்று. கொட்டிற்குள்ளேயே அங்குமிங்கும் ஓடியது. பொம்முவும், பெற்றோரை விட்டுப் பிரியும் பொழுது கத்திக் கொண்டே போயிற்று. கொட்டில் பூட்டப் பட்டிருந்ததால் சுந்துவால் வெளியே வர முடியவில்லை.

"பெயருக்கு ஆண்பிள்ளைதான். பொம்முவை எவனோ அழைத்துப் போகிறான், நீங்கள் பாட்டுக்கு சும்மா இருக்கிறீர்களே!'' என்று சுந்து கத்திற்று.

"நான் மட்டும் எப்படி வெளியே போக முடியும்? என்று துக்கத்துடன் சொல்லிற்று திண்டு. அதற்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

அந்த ஊர் மிராசுதாருடைய பிள்ளைக்கு அம்மை போட்டது.

மிராசுதார் காளிக்குப் பலி கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார். அவர் நந்தகோனைக் கூப்பிட்டு தனக்கு ஒரு ஆடு வேண்டுமென்று சொன்னார். நந்தகோனன் திண்டுவை ஒரு கயிற்றில் கட்டி அனுப்பினான். திண்டு போக மறுத்தது. சுந்து பலமாக கத்திற்று. மிராசுதாரின் ஆட்கள் திண்டுவை அடித்து இழுத்துச் சென்றார்கள்.

"ஐயோ, என்னை விட்டுப் போகிறீர்களே! நான் எங்கே போவேன்? எனக்கு யார் துணை? ஐயோ, போகாதீர்கள், நில்லுங்கள், நில்லுங்கள்.........'' என்று சுந்து கத்திற்று.

"சுந்து கண்ணு, பயப்படாதே. நான் கட்டாயம் திரும்பி வருகிறேன். இந்த மனிதர்கள் என்னை என்ன செய்து விட முடியும்? ஈவிரக்க மற்ற மனிதர்கள். பயப்படாதே, இவர்களிடமிருந்து தப்பி வருகிறேன்.'' என்றது.

சுந்து மறுநாள் அவ்வூர் காளிக் கோவில் அருகே புல் மேய்ந்து கொண்டிருந்தது.

காளி கோவிலிலிருந்து மேள சத்தம் கேட்டது. சுந்துவுக்குத் தன்னுடைய தாயின் நினைவு வந்தது. ஏனோ அதனுடைய மனதில் சந்தேக மொன்று உதித்தது. அதற்கு நடுக்க மெடுத்தது. காளி கோவிலை நோக்கி சுந்து வேகமாக நடந்தது.

இதற்குள் அங்கே கழுத்தின் மேல் கத்தி விழுந்தது. திண்டுவின் உடல் துடித்தது. சுந்துவின் மனமும் துடித்தது. சுந்து அசைவற்று நின்றது. தம்மு நோயினால் இறந்தது, பொம்மு பிரிந்து போனது, திண்டு பலியானது, முதலியவைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக சுந்துவின் மனதில் தோன்றியது. துக்கம் நெஞ்சை யடைத்தது. தனக்கு உண்டான அளவற்ற வருத்தத்தில் சாபம் கொடுக்காமலிருக்க முடியவில்லை. "மனிதர்களில் அநேகர் மிருகங்களை விட கேவலமானவர்கள். அவர்கள் மூடர்கள்......ம்ம்...... மனிதர்கள் ஒருவரோ டொருவர் சண்டையிட்டு மடியட்டும், உலகத்தில் பெரிய பெரிய போர்கள் உண்டாகட்டும். உலகம் பூராவும் பூகம்பங்கள், வெள்ளங்கள், உண்டாகி இந்தப் பாபத்திற்குப் பெயர் போன உலகம் சின்ன பின்னமாகப் போகட்டும்......... பஞ்சத்தாலும், நோயாலும் பசியாலும் மனிதர்கள் மடியட்டும்.........சண்டையின் காரணமாக மனைவி புருஷன், குழந்தைகள் எல்லாம் பிரிந்து துன்பத்திற்குள்ளாகட்டும்!'' என்று கத்தியது.

பிறகு சுந்து வெகுநாள் உயிரோடிருக்கவில்லை. ஆனால் இறந்தாலும் மனிதர்கள் கையில் அது இறக்கவில்லை.

இப்படியாக அலைபாயும் அவன் உள்ளத்திலே அமைதிக்கு இடம் ஏது?

"தன்னந் தனி இடத்தமர்ந்து இராவேளைக் கனிவானைப் பாரடா, மகனே! 'கன்னங் கறுக்கிருட்டுக் கார்மேகக் காளியம்மா' உனக்கு சாந்தியின் ரகசியத்தைப் போதிப்பாள்" என்றார் ஓர் பக்தர்.

விண் மீது விட்டெறிந்தான் தன் பார்வையை அந்த சாந்திப் பித்தன் "ஆஹா, என்ன அழகு! எத்தகைய கவர்ச்சி!" என அவன் மனம் பேசிற்று.

நள்ளிரவிலே முழுதலர்ந்து வெள்ளிக் கதிர்வீசும் ககன மல்லிகைகளோ அவை? வான மங்கையரின் சொக்கும் சுடர் விழிகள் தானோ? சக்தி தேவியின் கரும் பட்டுடையில் பதித்த நல் வயிரங்களா அவை? அல்லது 'பித்தனுடன் விளையாடும் பேதை' வைத்துச் சித்திரித்த கோலத்தின் பொட்டுகளோ?......

அவன் மனம் புதிர்கள் போட்டன.

அப்புறம் சாந்தியர்வது சாந்தி!

வானவெளி வண்ணச் சித்திரத்தை இமையாக் கண்ணுடன் விழுங்கிய அவன் இதயத்திலே வேல் பாய்ந்தது போல 'ஐயோ' என்று அலறினன்.

காரணம்?

வெள்ளிகளில் ஓர் வெள்ளி இற்று வீழ்ந்து கொண்டிருந்தது, இன்ப வாழ்வென மயங்கித் திரியும் வேளையிலே எதிர்பாராது மரணப் பேய்வாயில் தவறிவிழும் மனிதனைப் போல.

'வாழ்வின் சிறுமைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு' என அவன் மனம் முனகியது.

இதே கதைதான் எங்கு நோக்கினும்! காரிருளை ஓட்டி மக்களுக்கு நம்பிக்கை புகுத்த வருவதுபோல் தோன்றும் உஷாதேவியின் மலர்க் கண் சிவப்பும், சந்தியாவின் செக்கர்மேனியும்கூட அவனுக்கு வாழ்வின் சோகத்தை — அல்லல் உற்றுத் திணறும் மனித சமூகத்தின் ரத்தக் களரியை — த்தான் பிரதிபலித்தது. 'இந்த வாழ்வில் சாந்தியாவது?' என்ற கேள்வி பின்னணி கீதமாக ஒலிக்கும். மலர்ந்து மணம் வீசும் ரோஜா மலர் கூட மறுநாள் வாடிவதங்கிப் போகும் ரகசியத்தைத் தான் அவனுக்கு ஓதின.

சாந்தியாம் சாந்தி! ஹூம்!

'அப்பனே, அலுத்துக் கொள்ளாதே. சாந்தியின் கொலு மண்டபம், சௌந்தர்ய தேவதையின் ஆலயம், தெய்வீகத்து நிலைக்களன் — இமாசலம், அங்கு போ. உன் மன நோய் ஓடும்' என்றார் ஒரு வேதாந்தி.

போனன்.

ஆனல் சாந்தி கிட்டியதா?

வெள்ளிப் பனிமுடி மலை முதலில் அவனுக்கு ஒருவித பயம் எழுப்பியது. அதன் முன்பு அவன் மனிதனின் அணுத்தன்மையை உணர முடிந்தது. என்றாலும் 'சாந்தி...சாந்தி' என முணமுணத்துச் சுழற்றினன் தன் கண்களை. 'என்ன தெய்வீகம்! எங்கும் விரிந்து காணும் இத்தூய வெண் பரப்பிலே தான் சாந்தியை நாட வேண்டும். சரியான இடம்...ஓம். சாந்தி, சாந்தி......

கண்களை மூடி அமர்ந்தான் அவன். எவ்வளவு நேரம் அப்படியிருந்திருப்பானே தெரியாது. மெல்லிய குரலில் யாரோ கூப்பிடுவது போல் பட்டது, விழித்து நெடுகிலும் நோக்கினன்.

'பேதமை! இங்கு யார் வரப் போகிருர்கள்' என்று மனம் பேசியது. மீண்டும் கண்களை மூடிக் கொண்டான்.

'அண்ணு...' என்ற குரல் — கனவிலே கேட்பது போல.

'என்ன தம்பி?'

தலையைத் திருப்பாமலே கேட்டது மனிதனின் காலடிபடா உயர் முடி.

அதைவிடச் சிறு சிகரம் ஒன்று கேட்கிறது. 'இந்த வேட்டைக் கரரன் வந்திருக்கிருனே, அவனுக்கு சாந்தி கிடைக்குமா?'

பெரும் முடி சிரித்துவிட்டு "அதெங்கே தம்பி! மனிதனுக்கு இந்த உலகத்தில் சாந்தியாவது!... நானும் யுகம் யுகமாக இம் மனித வர்க்கத்தைக் கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். என மனதிலே பதிந்து விட்ட மறைந்த காலச்சரித்திர ஏடுகளைப் புரட்டினுல்......கொலை, குத்து, கொள்ளை..., பொருமை, யுத்தம்...பசி, பட்டினி, பஞ்சம்... சாவு...கோரம் தானடா முழுவதும். இப்படித் தங்களைத் தாங்களே தின்னும் ஜந்துக்களிடையே சாந்தி எப்படி நிலவும்?' என்கிறது.

'அப்படியானல் உலகில் சாந்திக்கே இடமில்லை என்ரு சொல்கிருய்?'

'அப்படிச் சொல்லவில்லையே! ஆயிரம் வருஷங்களுக்கு அப்பாலும் என் பார்வையை விட்டெறிகிறேன்...இதோ, உலகமே சாந்தி நிலையமாக மாறப் போகிறது. ஆனல் அதற்கு முன்பு? "வெடிபடும் அண்டத்து இடி பல தாளம் போட்டு" நகைக்கிறது, தேவியின் கால் நடனச் சிலம் பொலி போல. அக்கூத்துக்குத் தலை வணங்கி அண்டங்கள் அத்தனையும் கிடுகிடாய்த்துச் சரிகின்றன. எல்லாம் பாழ். எங்கும் சூன்யம் பாழ் என்ரு சொன்னேன்? தவறு...சர்வம் சாந்தி மயம். உலகம் நமது பரப்பு போலாகி விடுகிறது......அன்றுதான் சாந்தி நிலவுமடா தம்பி — ஊழிக் கூத்துக்கு மப்பால்!...அதற்கு முன்ருல் ஊஹூம்......

'அப்படியானல், மரணத்தின் பின்தான் மனிதனுக்குச் சாந்தி என்ரு சொல்கிருய்!'

அதைத் தொடர்ந்து ஓர் பேய்ச் சிரிப்பு.

அவ்ன் திடுக்கிட்டு விழித்தான். திரும்பித் திரும்பிப் பார்த்தான். 'எங்கோ விழும் அருவி ஒலியாக இருக்குமோ?...ஆனல் அந்தப் பேச்சு! நன்ருகக் கேட்டதே!... வெறும் பிரமையா?'

மீண்டும் கட கட கட வென்ற நகையொலி தொனித்தது.

அதற்கு மேல் அங்கு நிற்க அவனுக்குத் தைர்யமில்லை. எடுத்தான் ஓட்டம்.

அவனுக்குப் பின்னல் அதே ஒலி — 'கட கட...கக்' பேயின் சிரிப்பா அது?

அவன் விழுந்தடித்து ஓடினன். மலைச் சிகரச் சரிவிலிருந்து பெயர்ந்து உருண்டு விழும் பனிக் கட்டி பயங்கரமாக ஓலமிட்டுப் புரண்டு புரண்டு, ஓடி வரும் கங்காப் பிரவாகத்திலே பேரோசையுடன் விழுகிறது, அவனைக் கேலி செய்து சிரிப்பது போல.

அதை அவன் கவனிக்கவில்லை. அவன் ஓடினன்......ஓடினன்... ஓடிக் கொண்டேயிருந்தான், களைத்துப் போய் கீழே விழும் வரை.

விழுந்தான்...பின் எழவே இல்லை.

அவனைப் பொறுத்த வரையில், அவன் சாந்தியின் ஆசார வாசலை எட்டி விட்டான்!

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜீ

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

அறையின் மூலையில் ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதில் இரண்டொரு பழைய தலையணைகளும் போடப்பட்டிருந்தன. இந்த அறைதான் விருந்தினர்கள் வந்தால் தங்குவது.

அந்தப் பெண் விளக்கை வைத்து விட்டு, "கொஞ்சம் இருங்கள். தகவல் கொடுத்து விட்டு வருகிறேன்" என்று போனாள்.

அவள் சென்றதும் சதீஷ் செருப்புக் காலோடு விருந்தினர்கள் உட்காரும் அந்த ஆசனத்தில் ஏறி நின்று கொண்டான்.

உபேந்திரன், "அடே, அடே! இதென்ன நீ செய்வது?' என்றான்.

சதீஷ் தணிவான குரலில், "உயிரைப் பார்ப்பதா, ஆச்சாரத்தைப் பார்ப்பதா? கீழே காலை வைத்தால் பாம்பு தேள் எல்லாம் வந்து சூழ்ந்து கொள்ளுமே!" என்றான்.

இவ்விடத்திய நிலைமையையும், சதீஷின் பேச்சையும் கேட்டு உபேந்திரன் கூட அந்த ஆசனத்தில் ஏறி நின்று கொண்டான்.

அந்த ஆசனத்தில் இரண்டு பேர் நிற்பதற்குக் கூட இடமில்லை. அவர்களிருவரும் நிற்பதற்குத் தள்ளாடிக் கொண்டிருக்கும் போது அந்தப் பெண் வந்து விட்டாள். அவள் இவர்களைப் பார்த்ததும் கலகலவெனச் சிரித்து விட்டாள். இவர்கள் பயந்ததற்குக் காரணத்தையும் தெரிந்து கொண்டாள். "இது எனது மாமியார் உட்காருமிடம். அதை அவமரியாதை செய்கிறீர்களே!" என்றாள்.

உடனே உபேந்திரன் அதை விட்டு அப்பால் வந்து, "இவன் அப்படிப் பயப்படுத்தி விட்டான்........" என்றான்.

ஆனால் சதீஷ் அசையவில்லை. அவன் மிகப் பணிவாக, "உபேந்திர அண்ணா, நான் வேண்டுமென்று பயங் காட்டவில்லை. நான் சாணக்கியன் ஸ்லோகங்கள் வரையிலும் தான் படித்திருக்கிறேன். அதிகமாக ஒன்றும் படிக்கவில்லை. இருந்தாலும் தற்காப்பு தான் சகலத்திலும் சிறந்த தர்மம் என்பது எனக்குத் தெரியும்!" என்றான். பிறகு அந்தப்

பெண்ணைப் பார்த்து, "சரி, நீங்களே சொல் லுங்கள். உயிரைப் பாதுகாப் பதற்காக ஒரு பாதுகாப்பான இடத்தை அடைவது கெட்டதா? உங்களுடைய மாமியார் ஆச னத்தை அகௌரவப்படுத்த வேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல. அதை ரொம்ப மதித்து இத்தனை இடத்தையும் விட்டு அதை அடைந்திருக்கி றோம்" என்றான்.

அதன் பிறகு மூவரும் சிரிக்க லானார்கள். இந்தப் பரிகாச வார்த்தைகள் அந்த ஏழைப் பெண்மணியை ஒன்றும் துன் புறுத்தவில்லை. அவள் இந்தப் பேச்சில் மறைந்திருந்த சரள பாவத்தை உணர்ந்து கொண் டாள் என்பது அவள் சிரித்ததி லிருந்து உபேந்திரன் அறிந்து கொண்டான். இதனால் அவனு க்கு மிகுந்த சந்தோஷமுண்டா கியது. அவளுடைய முகத்தைப் பார்த்து அவன் சிரித்துக் கொண்டு, "உங்கள் எதிரிலே உங் கள் பிரஜைகள் அவனை ஒன்றும் உபத்திரவிக்க மாட்டார்க ளென்று நினைக்கிறேன். இனி அவன் இறங்கி வருவதில் ஒன்றும் ஆக்ஷேபனை இல்லையே?" என்றான்.

"ஆகா! ஒன்றும் ஆக்ஷேபனை கிடையாது" என்று அந்தப் பெண் கூறிவிட்டு, கையிலிருந்த விளக்கைத் தூக்கிப் பிடித்து சதீ ஷின் முகத்தைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை புரிந்தாள். பிறகு, "இனி பயமின்றி ராஜ தரி சனத்திற்கு வாருங்கள். பிரஜை கள் இனி ஒன்றும் கெடுதல் செய்ய மாட்டார்கள்" என்றாள்.

இந்தப் பரிகாச வார்த்தை களால் அந்தப் பெண்மணியை அறிந்து கொள்வதற்குச் சுலப மாக முடிந்தது. மூவரும் சந்தோ ஷத்துடன் அறைக்கு வெளியில் வந்தார்கள்.

உபேந்திரனும், சதீஷும் சிரித் துக்கொண்டு வேறு ஒரு அறைக் குள் நுழைந்ததும் நடுங்கிப் போனார்கள். குரூரமான ஆசிரி யரின் திட்டுதலைக் கேட்டு சிரித் துக்கொண்டிருக்கும் சிறு பிள்ளை கள் மிரளுவதைப் போல மூவரு டைய முகமும் பயத்தினால் மாறி யது.

சிறிது நேரத்திற்குப் பிறகு உபேந்திரன் கட்டிலருகில் சென்று, "ஹாரான் அண்ணா!" என்று அழைத்தான்.

ஹாரான் பிணம் போல அசை யாது படுத்துக்கொண்டிருந்தார். அவர் மெதுவாக, "வா, அப்பா, வா. இப்போது எழுந்து உட் காரக் கூட முடிவதில்லை. உன க்கு ரொம்ப சிரமம் கொடுத்து விட்டேன்" என்று கூறி விட்டு இருமத் தொடங்கினார்.

உபேந்திரன் படுக்கையின் ஓரத் தில் உட்கார்ந்து கொண்டான். அவனுடைய கண்களில் நீர் நிறைந்தது. இதயம் விம்மிப் பெரு மூச்சு விட்டான். பேசு வதற்குத் துணிவு உண்டாகவில்லை. வாயே திறக்க முடியவில்லை. சதீஷ் ஒரு பெட்டியின் மேல் மௌனமாக உட்கார்ந்து கொண் டான்.

கிழிந்து கந்தையாகக் கிடந்த படுக்கையின் தலைமாட்டில் ஒரு மண் விளக்கு மினுக் மினுக்கென எரிந்து கொண்டிருந்தது. ஹாரா னின் குற்றுடல் அசையாது கிடந்தது. நல்ல காற்றோ சூர்ய ஒளியோ புக முடியாத இந்த அறையின் இருளை அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கு நன்கு எடுத்துக் காட்டியது. இரவும் பகலும் அடைத்துக் கிடக்கும் இந்த வீட்டினுள் மண்டிக் கிடக்

கும் குப்பை கூளங்கள் அங்கிருப்போரை மூச்சு விட திக்கு முக்காடச் செய்தது. கதவருகில் யமதூதனே நிற்பது போலிருந்தது. நாற்புறமும் அடிக்கடி பார்த்துப் பார்த்து சதீஷ் நடுங்கினான். சத்தமிட்டுக் கொண்டு வெளியே ஓடாவிட்டால் உயிர் பிழைப்பது கடினம் போலப் பட்டது அவனுக்கு. இங்கு மனிதன் எப்படி உயிரோடிருக்க முடியும்? அருகில்தான் அந்தப் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் அவன் இன்னும் அதிகமாகப் பயமடைந்தான். அவளுடைய அந்த அசாதாரணமான அழகு எங்கே போய் விட்டது? அந்தச் சிரிப்பு எங்கே போய் விட்டது? சதீஷின் கண்களுக்கு அவள் பிரேத லோகத்தின் பிசாசினி போலக் காக்ஷி அளித்தாள். கணவன் இப்படி நோயுற்றிருக்கும் போது அவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது? சிரிப்பு விளையாட்டில் அவளால் எப்படிப் பங்கு எடுத்துக் கொள்ள முடிகிறது? எதற்காகத் தலை வாரிக் கொள்கிறாள்; வளையல் அணிந்திருக்கிறாள்? ஏன் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும் என்று இம்மாதிரி சதீஷ் நினைத்தான். சிறிது நேரத்திற்குள்ளாக அவன் இந்தப் பெண் இனத்தையே முழுதும் வெறுக்க ஆரம்பித்தான்.

"கிரண், உபேந்திரன் வந்திருப்பது அம்மாவுக்குத் தெரியுமா?" என்று ஹாரான் கேட்டார்.

கிரண் அருகில் வந்து மெதுவாக, "அம்மா தூங்குகிறார்கள். தூங்கும் போது எழுப்பக் கூடாதென்று டாக்டர் சொல்லிப் போயிருக்கிறார்" என்றாள்.

ஹாரான் கோபத்துடன், "அந்த டாக்டருக்கு என்ன தெரியும்? நீ போய் அம்மாவிடம் சொல்லு" என்றார்.

அருகிலிருந்த உபேந்திரன் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் சிறிது வருத்தத்துடன், "அண்ணா இந்த அகாலத்தில் ஏன் எழுப்ப வேண்டும்? நாளை சொல்லி விட்டால் போகிறது" என்றான்.

ரொம்ப நாளாக நோய் வாய்ப்பட்டிருப்பதால் ஹாரான் மனம் மிகவும் கெட்டிருப்பதை உபேந்திரன் அறிந்து கொண்டான். அந்த உதவியற்ற பெண்ணை அப்படி அலட்சியப் படுத்தியதால் உபேந்திரன் அவளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டி அவள் முகத்தைப் பார்த்தான். ஆனால் அவள் முகத்தில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. குனிந்தபடியிருந்த கிரணமயினுடைய முகத்தில் தீபவொளி படவில்லை. சிறிது நேரம் அவள் அங்கேயே இருந்து விட்டுப் பிறகு வேகமாக அறையை விட்டு வெளியே சென்று விட்டாள். உபேந்திரன் கவலையுடன் உட்கார்ந்து கொண்டான்.

ஹாரான்சந்திரன் மறுபடியும் இருமத் தொடங்கினார். அந்தச் சந்தடியற்ற அறை சதீஷிற்கு இன்னும் அதிகப் பயங்கரமாக இருந்தது. சிறிது நேரங் கழித்து ஹாரான், உபேந்திரனை மெதுவாகத் தொட்டு அருகில் வரும்படி சாடை செய்தான். பிறகு, "ஏழெட்டு வருஷங்களுக்குப் பிறகு சந்திக்கிறோம். இதற்கு மத்தியில் நீ ஒரு முறை கூட இங்கு வந்ததில்லையா?" என்றான்.

இதற்கு மத்தியில் உபேந்திரன் அநேகம் தடவை கல்கத்தா வந்திருக்கிறான். ஆனால் இப்போது அதை அவன் ஒத்துக் கொள்ள முடியவில்லை. "அண்ணா, உடம்புக்கு எப்படி இருக்கிறது?" என்றான்.

"காய்ச்சல், இருமல் சகலமும் இருக்கிறது. இப்போது அதெல்

லாம் எதற்கு, கடைசி நாளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

பெட்டியின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கும் சதீஷ் இதைக் கேட்டு நடுங்கினன்.

"எனக்கும் உன்னைப் பற்றி ஞாபகம் வரவில்லை. வந்திருந்தால் காரியமாகி இருக்கும்" என்ருர். பிறகு சிறிது பொறுத்து, "காரியந்தான் என்ன? சரி, அவைகளை ஏன் பேச வேண்டும்? ஆமாம் அப்பா! ஒரு காரியம் செய். என்னிடம் இரண்டாயிரம் ரூபாய்ப் பத்திரமும் இந்த இடிந்த வீடும் இருக்கிறது. நீ ஒரு வக்கீல். இவைகளுக்கு ஒரு பாதுகாப்புச் செய்து விடு. அதற்கப்புறம் நீ இருக்கிருய், அம்மா இருக்கிருள்" என்ருர்.

"உமது மனைவி?"

"எனது மனைவி கிரணு? ஆம், அவள் ஒருத்தி இருக்கிருள். அவளுக்கும் தாய் தகப்பன் கிடையாது. அவளையும் பார்த்துக் கொள்ள வேண்டும்"

உபேந்திரன் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

சதீஷ் கடிகாரத்தைப் பார்த்து விட்டு எழுந்து நின்று கொண்டு, "அண்ணு, மணி பத்தாகி விட்டது. அங்கே அவர்கள் கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்கள்" என்ருன்.

ஹாரான் சதீஷைப் பார்த்துக் கொண்டு, "உபேந்திரா, இவர் யார்?" என்ருர்.

"எனது நண்பன், கல்கத்தாவிற்கு என்னேடு வந்திருக்கிருன். சரி, இப்போது நான் போய் விட்டு நாளைக் காலையில் வருகிறேன்."

"வேண்டாம், நாளைக்கு வர வேண்டாம். காகிதத்தைத் தயார் செய்து கொண்டு நாளானன்று என்னிடம் இருப்பதையும், அதை என்ன செய்வது என்பதைப் பற்றியும் அப்போது சொல்லிக் கொள்கிறேன். நீ இங்கு எங்கு தங்கியிருக்கிருய்?"

"நகரத்திலே ஒரு நண்பர் வீட்டில்."

போவதற்குப் புறப்பட்டவுடன் ஹாரான் கிரண்மயியைக் கூப்பிட்டார்.

உபேந்திரன் தடுத்து, "வேண்டாம் அண்ணு; சதீஷிடம் தீப் பெட்டி இருக்கிறது. நாங்கள் நன்கு போய் விடுவோம். அவர் ஏதாவது கை வேலையாக இருப்பார், ஏன் தொந்தரவு கொடுக்க வேண்டும்?" என்ருன்.

இதற்கு ஹாரான் கூறியது யாருக்கும் விளங்க வில்லை. கதவு திறந்ததும் யாரோ இருளில் ஒதுங்கிப் போவது தெரிந்தது. சதீஷ் பயந்து போய் இரண்டடி பின்னுக்கு நகர்ந்தான்.

"என்ன சதீஷ்?" என்று உபேந்திரன் கேட்டான்.

"ஒன்றுமில்லை நீ வா" என்று கூறி விட்டு உபேந்திரன் கையைப் பிடித்துக் கொண்டு அவன் வெளிக் கூடத்தில் வந்து நின்று கொண்டான். எங்கும் கனமான இருள் படர்ந்திருந்தது. இந்தப் பாழடைந்து கிடந்த வீட்டிலிருந்து தான் இருளே உலகெங்கும் வியாபித்திருப்பது போலிருந்தது. இருவரும் தடவிக் கொண்டே மாடிப் படியண்டை வந்து பார்த்தார்கள். கீழே அதே மண் விளக்கை வைத்துக் கொண்டு கிரண்மயி உட்கார்ந்து கொண்டிருந்தாள். இவர்கள் வருவதைப் பார்த்து எழுந்து நின்று கொண்டு, "வெளிச்சம் காட்டுகிறேன். சாவதானமாக இறங்கி வாருங்கள். உங்களுக்காகத்தான் நான் இங்கே உட்

கார்ந்து கொண்டிருக்கிறேன்'' என்ருள்.

இந்த இருண்ட இரவில், குளிரில், வெறுந் தரையில் எங்கள் வரவுக்காக உட்கார்ந்து இருந்தேன் என்பதைக் கேட்டதும் உபேந்திரனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாகியது.

வெளிக் கதவு திறந்து தானிருந்தது. கீழே இறங்கியதும் சதீஷ் வேகமாக தெருவில் போய் நின்று கொண்டான். ஆனல் உபேந்திரன் பின்னல் திரும்பிப் பார்த்து நின்று கொண்டான். கிரணமயி அவனேயே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தாள். கணநேரம் உபேந்திரனும் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"உபேந்திரபாபு, எங்களுக்கு நீங்கள் என்ன உறவு ஆகவேண்டும்?'' என்று கிரணமயி கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் அளிப்பது என்று உபேந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. இதை அவள் அறிந்து கொண்டு, "நீங்கள் என் கணவருக்கு உறவினரா? இந்த வீட்டிற்கு வந்த நாள் முதற் கொண்டு தங்களைப் பற்றி அவர் பேசியதை நான் கேட்டதில்லை. உங்களுக்குக் கடிதம் எழுதிய போது தான் எனக்குத் தெரிய வந்தது. அதனல் தான் கேட்டேன்'' என்ருள்.

வெளியிலிருந்து சதீஷ் கூப்பிட்டான்.

"உறவினரல்ல. முக்கிய நண்பன். என் தந்தை நோவாக்காலியில் இருந்த போது ஹாரான் தகப்பனர் அங்கு உபாத்தியாயராக இருந்தார். என் வீட்டிலும் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். நாங்கள் இருவரும் நெடு நாள் ஒன்ருகப் படித்து வந்தோம்.''

கிரணமயி சிறிது புன்னகையுடன், "ஓ! அப்படியா சங்கதி! அதனல் தான் கடிதம் எழுதினரா? சரி, உபேந்திரபாபு! உங்கள் பேருக்கு எல்லாவற்றையும் எழுதி வாங்கிக் கொண்டீர்களல்லவா?'' என்ருள்.

நேரமாவதைக் கண்டு சதீஷ் மறுபடியும் கதவருகில் வந்தான். "ஆம், அதுதான் முடிந்து விட்டதே'' என்ருன்.

கிரணமயி, சதீஷைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு, "சரி, நீங்களும் வந்திருக்கிறீர்கள். ரொம்ப நல்லதாகப் போச்சு. இத்தனை நாளும் எவ்வளவோ கஷ்டத்துக் கிடையில் அரை வயிறுக் கஞ்சியாவது கிடைத்தது. இனி பிச்சை எடுக்க வேண்டியது தான். ரொம்ப சரி, நீங்களே எல்லாவற்றையும் கொண்டு போய் விடுங்கள்'' என்ருள்.

உபேந்திரன் திகைத்துப் போய் விட்டான்.

"சொத்துக் குடையவர்களே கொடுக்கும் போது பிறர் சொல்லி என்ன பயன்?'' என்ருன் சதீஷ்.

கிரணமயியின் இரு கண்களும் கோபத்தால் சிவந்தன. "ஆனல், எனக்கு அதிகார மிருக்கிறது. சாகும் தருணத்தில் மனிதன் புத்தி மாறி விடுமாம். என் கணவருக்கும் அந்நிலை தான் ஏற்பட்டிருக்கிறது. ஆனல், சொத்து முழுவதையும் எழுதி வாங்குவதற்கு நீங்கள் யார்?'' என்ருள்.

சதீஷ் எவ்வித தடையுமின்றி, "அது தெரியவில்லை. இருந்தாலும், அவர் சுய புத்தியுடன் தான் இருக்கிருர்'' என்ருன்.

"அடே அப்பா! என்ன சொல்வது! சனங்கள் சொல்லுவார்கள்.

சொல்லிவிட்டுப் போகிறார்கள்.'' பிறகு உபேந்திரனைப் பார்த்து, "நான் ஒன்று கேட்கிறேன். நீங்கள் கடைசி காலத்தில் பிச்சை எடுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? ஏமாற்ற மாட்டீர்கள் என்று எப்படி நம்புவது?'' என்றாள்.

இவ்வளவு பெரிய குற்றச் சாட்டை உபேந்திரனால் தாங்க முடியவில்லை. அவன் ஏதோ சொல்ல விரும்பினான். ஆனால், ஏனோ ஒன்றும் பேசாமல் இருந்து கொண்டான்.

சதீஷ் மிகுந்த பொறுமையுடன், "மன்னி, தங்களுக்கு இவைகளெல்லாம் தெரிந்தாக வேண்டியது ஒன்றுமில்லை.'' என்றான்.

கிரணமயி உடனே ஒன்றும் பதில் பேசவில்லை. இந்த இனிமையான உறவு முறையைக் கேட்டுத் திடுக்கிட்டாள். சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது?'' என்றாள்.

"ஆம், உங்கள் கடமையை நீங்கள் காப்பாற்றிக் கொண்டிருந்தால் அவருக்கு ஏன் இந்தச் சிரமங்கள் ஏற்படுகிறது? வீணாக தடைப் படுத்தாமல் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்'' என்றான்.

பல் பிடுங்கப் பட்ட நாக சர்ப்பம் போல அவள், "என்னைப் பற்றி அவர் சொல்லியதைத்தான் சொல்லுங்களேன்,'' என்றாள்.

உபேந்திரனால் இனியும் பேசாமல் இருக்க முடியவில்லை. சதீஷ் அவளுடன் வாதாடுவது பிடிக்கவில்லை. அவள் இவர்களிடம் இருந்து ஏதோ ரகசியத்தை அறிய முயன்று கொண்டிருந்தாள். இதை அவன் அறிந்து கொண்டான். சதீஷைத் தடுத்து, "சதீஷின் பைத்தியக்காரத் தனத்தைக் கண்டு பயந்து விட்டீர்களா? கணவனுடைய சொத்தை மனைவிக்கு இல்லாமல் பிடுங்கிக் கொள்ள யாருக்கும் அதிகாரம் கிடையாது. நீங்கள் வலையற்று இருங்கள். அவர் உங்கள் சம்மதமில்லாமல் செய்ய மாட்டார். இரவு நேரமாகிவிட்டது. கதவைத் தாளிட்டுக் கொள்ளுங்கள். சதீஷ், வா, போகலாம்'' என்று கூறிவிட்டு அவன் தோளில் கையைப் போட்டுக் கொண்டு, கிரணமயியிடம், "நாளை, மறு நாள் சந்திக்கிறோம். நமஸ்காரம்'' என்றான்.

(தொடரும்)

சிறுகதை:

வைராகி

(கோமதி சுப்ரமணியம்)

நாகூர் கடை வீதி ஒரே கோலாகலமாயிருந்தது. கடைக்காரர்கள் சீக்கிரமாகவே தத்தம் கடைகளுக்கு முன்னால் பெருக்கி தண்ணீர் தெளித்து குளுகுளு வென்று வைத்திருந்தார்கள். ஒவ்வொரு கடையிலும், தங்களுடைய சரக்கின் பெருமையை 'தர்க்கா' வுக்கு வருகிறவர்கள் அறிந்து கொள்வதற்காக அவர்களிடமுள்ள விலையுயர்ந்த வாசனைப் பத்திகளைப் பொருத்தி வைக்க, சுருள் சுருளாக புகைப் படலம் மிதந்து சென்றன. கலியாண வீட்டில் 'பருப்புத் தேங்காய்' வைத்திருப்பது போல் கடைக்குக் கடை தாம்பாளங்களில் 'பாத்தியா' ஓதுவதற்கு சுருட்டி வைக்கப் பட்டிருந்த வெல்லச் சுருள்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. பக்கத்தில் வைத்திருந்த ரோஜா கதம்பத்தின் மணம் ஊதுபத்தியுடன் கலந்து கொண்டு கடை வீதியில் செல்வோரின் மனதை மயக்கியது.

அன்று வியாழக்கிழமை. ஜனங்கள் எங்தெந்த ஊரிலிருந்தெல்லாமோ பிரார்த்தனை செலுத்த வருவார்கள். வருகிறவர்கள் தங்கள் கடையையே நாடி வர வேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வளவு ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தார்கள். பள்ளிவாசல் திறப்பதற்கு இன்னும் வெகு நேரமிருந்தது. வேலைகளை முடித்து விட்டுக் கடைக்காரர்கள், அவரவர்கள் வாய்க்கு வந்த துலுக்குப் பாட்டை உற்சாகத்துடன் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

கடை வீதியில் வேகமாய் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து சுமார் ஐம்பது வயது மதிக்கத்தகுந்த பெரியவர் இறங்கினார். "அடேயப்பா, 'தர்க்கா' வுக்கு இன்னும் எவ்வளவோ நேரமிருக்கே! நேரமாகி விட்டதாக்கும் என்று காரை எவ்வளவு வேமாய் விட்டுக் கொண்டு வந்தோம். இந்தக் கடை வீதிகளைப் பார்த்துக் கொண்டு நடந்தே போய் விடலாமே பள்ளி வாசலுக்கு, என்ன நடேசா?" என்று டிரைவரை அபிப்பிராயம் கேட்டார்.

"சரிங்க" என்று கூறி காருக்கு வேலைக்காரனைக் காவல் வைத்து விட்டு இருவரும் கிளம்பினார்கள். இரண்டடி எடுத்து வைப்பதற்குள் "வாங்க, வாங்க, ஐயா வாங்க" என்று எத்தனை தினங்களோ இவர் வரவுக்காக காத்திருந்த உறவினர்கள் போல் பல குரல்கள் அழைப்பதைக் கேட்டு நிமிர்ந்து நோக்கினார். ஒவ்வொரு கடையிலிருந்தும் ஒவ்வொருவர் இவரை நோக்கி வந்தார்கள். அவர்கள் வேறு யாருமில்லை. 'பாத்தியா' ஓதிக் கொடுக்கும் குருமார்களே. பள்ளிவாசல் திறக்கு முன்னரே கண்ணில் பட்டவர்களிடம் தாங்களே 'பாத்தியா' ஓதிக் கொடுப்பதாக முன்னறிவிப்புக் கொடுத்து விடுவார்கள். அவர்களுக்குள் நியமமாகப் பங்கு போட்டுக்



கொள்வார்கள். இந்தப் பழக்கம் அந்தப் பக்கத்து ஜனங்களுக்கென்றால் தெரியும். அந்தப் பெரியவருக்கு ஊர் புதிதாகையால் திகைத்தார். இதில் அனுபவமுள்ள நடேசன் அவர்களை சமாளித்துக் கொண்டு பெரியவரைப் பள்ளி வாசலுக்கு அழைத்துச் சென்றான்.

பள்ளிவாசல் கதவு இன்னும் திறக்கவில்லை. ஆறு மணிக்குத் திறப்பார்கள். அதன் வெளிப் பக்கம் சில பைராகிகள் ஆங்காங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டும், சிலர் படுத்து தூங்கிக் கொண்டுமிருந்தார்கள். பெரியவர் வாசல் முன் குறுக்கும் நெடுக்குமாக சிறிது நேரம் உலாத்தியபடி, அவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டும், ரோட்டில் வருவோர் போவோர்களைப் பார்த்துக் கொண்டுமிருந்தார். படபட வென்ற ஓசை கேட்டது.

வானத்தை அண்ணாந்து நோக்கினார். வெண் புறாக்கள் ஆனந்தமாய் சிறகையடித்துக் கொண்டு கூட்டம் கூட்டமாய் பறந்து சென்று மசூதியின் கோபுரத்திற்குள் மறைந்தன. பிரார்த்தனைக்காக ஜனங்களால் காணிக்கை செலுத்தப் பட்ட புறாக்கள். அவைகளை யாரும் சுட்டுக் கொல்வதில்லை. இந்த வரலாறுகளையெல்லாம் அங்கிருந்த ஒரு பைராகி மூலம் தெரிந்து கொண்டார். இப்படிப் பலவிதப் பேச்சுக்களையும் பேசிக் கொண்டிருந்த பைராகி, "எனக்கு கை ரேகை பார்க்கத் தெரியும். நீங்கள் விரும்பினால் உங்களுக்கும் கை ரேகை பார்த்துக் கூறுவேன்" என்றார். பெரியவர் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் பள்ளி வாசல் திறக்க இன்னும் வெகு நேரமிருப்பதையறிந்து, இப்படித்தான் பொழுது போக்கலாமே என்று தீர்மானித்தார்.

பைராகி பல விஷயங்களையும் கூறி வந்தார். அவர் சொல்வதெல்லாம் உண்மையாயிருக்கவே பெரியவர் மேலும் உற்சாகத்துடன் தலையை ஆட்டிக் கொண்டேயிருந்தார்.

"உங்களுக்கு ஒரு தம்பி இருந்தாரல்லவா?" இந்தச் சொற்கள் பெரியவர் நெஞ்சில் வாள் கொண்டு அறுப்பது போலிருந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது.

"பைராகியாரே போதும் உமது ரேகை சாஸ்திரம். தயவு செய்து இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்தி விடும். மேலும் மேலும்

ஏதாவது கூறி அடக்கி வைத்திருக்கும் என் துயரைப் பொத்து விடாதேயும்" என்று கூறிக் கொண்டே எழுந்து விட்டார். அவர் கண்கள் கலங்கி யிருந்தன.

இதற்குள் ஜனங்கள் பள்ளி வாசலுக்குள் செல்வதைக் கண்டு தாமும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

உள்ளே பிரம்மாண்டமான மாளிகை. கண்ணைக் கவரும் பல வர்ணங்களிழைத்த சலவைக் கற்களான சுவர்கள் எங்கும் ஜகஜ்ஜோதியாய் மின்னியது. வழ வழப்பான சலவைக் கற்கள் பதித்த தரையில் நடக்கும் போது ஏற்படும் ஆனந்தத்தை அனுபவிக்க குழந்தைகள் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தன. 'பாத்தியா' ஓதும் சாம்பிராணித் தூபமும், ஊதுபத்திகளிலிருந்து சுருள் சுருளாக எழுந்து செல்லும் கம்மென்ற மணமும், அங்குள்ளோரின் மனதை மயக்கியது. பெரியவரின் மனம் இவ்விநோதங்களிலெல்லாம் செல்லவில்லை. தம்பியின் சிந்தனையாகவே நடந்து சென்றார். உணர்ச்சியற்ற பதுமை போல் ஒவ்வொரு வாசலுக்கும் சென்று விட்டு பெரிய வாசலுக்கு வந்து 'பாத தூளியும்' பெற்றுக் கொண்டார்.

"ஆண்டவனுக்குக் காணிக்கை போடுங்கள்' என்று கூறிக் கொண்டே கையில் உண்டியல் பெட்டியுடன் வந்து நின்றான் ஒருவன். கையில் பணத்துடன் திரும்பினார். எதிரே யிருந்த நிலைக் கண்ணாடியில் ஆண்டவன் சந்நிதானம் ஜொலித்துக்கொண்டிருந்தது. ஆண்டவனின் அடையாளமான பிறைச்சந்திரன் போன்ற வடிவம் அக்கண்ணாடிக்குள் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. பெரியவர் கண்ணாடியில் தம்மைப் பார்த்தார். அவர் உருவம் கோரமாய்க் காட்சி யளித்தது; 'உன் தம்பிக்கு நீயே எமன்' என்று கூறுவது போலிருந்தது.

"ஆம்... நான்... எமன் தான்" என்று புலம்பிக் கொண்டே மசூதியின் மைதானத்தை யடைந்தார். வானத்துச் சந்திரன் மெதுவாக வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்நிலவின் ஒளியும், அருகிலிருந்த குளத்தங்கரைக் காற்றும் சண்முகம் பிள்ளையின் மனதுக்கு சற்று நிம்மதியைத் தந்தது. உள்ளத்தில் பழைய சிந்தனை ஏடுகள் ஒவ்வொன்ருகப் புரண்டன.

2

சண்முகம் பிள்ளை சிறு வயதாக இருக்கும் பொழுதே தந்தையை இழந்து விட்டார். இவரையும் இவரது தம்பி திருநாவுக்கரசையும் வளர்ப்பதற்காக தாயார் வெகு சிரமப் பட்டாள். பல வீடுகளுக்கு மாவு அறைத்தும், தண்ணீர் எடுத்துக் கொடுத்தும் மானமாகக் காலத்தைக் கழித்து வந்தாள். கஷ்டத்தோடு கஷ்டமாகக் குழந்தைகளையும் படிக்க வைத்தாள். சண்முகம் பிள்ளை படிப்பில் மிக அக்கரையாய்ப் படித்து வந்தார். ஆனல் அவர் விருப்பப்படி மேல்ப் படிப்பு படிப்பதற்கு வழியில்லாது ஒரு சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது.

அவருடைய தூரபந்து ஒருவர் தம்முடைய கடையில் வேலை பார்க்க இஷ்டப் பட்டால் வேலைக்கு வைத்துக் கொள்வதாகக் கடிதமெழுதியிருந்தார். தாயாரின் சிரமத்தை நிவர்த்திக்க விரும்பி மறுதினமே அவ்வேலைக்

குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

காலச் சக்கரம் சுழலும் வேகத்தில் எத்தனையோ வித புதுமைகள். ஒரு காலத்தில் கனவு காண முடியாத சம்பவங்கள் நம் வாழ்க்கையிலே நிகழ்ந்து விடுகின்றன. அப்பொழுது மனிதன் முற்றிலும் மாறி விடுகிறான்.

சண்முகம் பிள்ளை அவர் வேலை பார்த்த கடைக்கு இப்பொழுது கூட்டு முதலாளி. இளமையிற் கண்ட கனவையெல்லாம் நனவாக்கி விட்டார். தனக்கென பெரிய பங்களா. பிளஷர் கார், வேலைக்காரர்கள் எல்லா டாம்பீகங்கட்கும் சரணடைந்து விட்டார். தம்பியையும் அவர் கடையிலேயே வேலைக்கு அமர்த்திக் கொண்டார். சண்முகம் பிள்ளையின் நோக்கமெல்லாம் பணத்தை மேலும் மேலும் விருத்தி செய்வதிலேயே யிருந்தது.

ஒரு நாள் மாலை நேரம். அண்ணனும், தம்பியும் அறையிலுட்கார்ந்து ஏதோ பலத்த வாதம் செய்து கொண்டிருந்தார்கள். 'நாம் செய்யப் போகும் காரியத்திற்கு இந்தப் பயல் குறுக்காக நிற்கிறானே' என்று அண்ணனுக்குக் கோபம்.

தான் இவ்வளவு தடுத்தும் அண்ணா கேட்க மாட்டேனென்கிறானே என்று தம்பிக்கு வருத்தம்.

"அண்ணா வேண்டாம். நீங்கள் இதை மனசில் நினைப்பதே பாவம். நாம் இன்று இவ்வுன்னத ஸ்திதி யடைந்ததற்கு யார் காரணம்? சற்று சிந்தித்துப் பாருங்கள். நம்மை மேன்மைப் படுத்தியவர்க்கு துரோகம் நினைப்பதே பாவம். இந்த 15,000 ரூபாயை மோசடி செய்வதால் நாம் என்ன மேன்மையை அடைந்து விடப் போகிறோமா? இல்லை! ஒருக்காலுமில்லை. இது கடவுளுக்கே நியாயமில்லை. இந்த யோசனையை விட்டு விடுங்கள் அண்ணா, முடிவாகச் சொல்லுகிறேன். தங்களுக்கு இந்த எண்ணமே உதிக்க வேண்டாம்" என்று கோபத்தில் மளமளவென்று பேசி விட்டு வெளியே போய் விட்டான்.

எங்கெல்லாமோ சுற்றி யலைந்தான். அவன் மனம் ஒரு நிலையிலில்லை. கோபத்தில் அண்ணாவைக் கண்டபடி பேசி விட்டோமே. அவர் எவ்வாறு மனம் துடித்தாரோ என்றெல்லாம் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டு புலம்பினான். அண்ணாவிடம் தன் தவறுகளை எடுத்துரைத்து கோபத்தில் பேசியதற்காக தன்னை மன்னித்து விடும்படி கேட்டுக் கொள்ள வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டே வீடு நோக்கி நடந்தான்.

எங்கும் ஒரே மையிருட்டு. முனிசிபல் லாந்தர்க் கம்பங்கள் எங்கோ மூலைக்கு ஒன்றாக அழுது வடிந்து கொண்டிருந்தன. கடைக்குச் சென்றான். கடை பூட்டப் பட்டிருந்தது. நேரத்திலேயே கடை சாத்தி விட்ட மர்மம் அவனுக்குப் புரியவில்லை. வீட்டு வாசற்படி யடைந்தான். கதவு சாத்தியிருந்தது. நடையேறி படியில் காலை வைத்தான். உள்ளே அண்ணனும் மதனியும் ஏதோ வாதம் புரிவது போலிருந்தது. ஒரு வேளை இந்த விஷயம் மதனிக்கும் தெரியுமோ என்னவோ? இதில் மதனியின் அபிப்பிராயம் என்னவாயிருக்கலாம் என்று அறிய ஆவல் கொண்டவனாய் ஜன்னலண்டை

சென்று காது கொடுத்துக் கேட் டான்.

'ஐயோ விஷமா? அவருக்கா: நான் மாட்டேன். என் கை யால் அந்த அநியாயத்தைச் செய்ய மாட்டேன். அவர் ஒரு பாவமு மறியாதவர்.'' இது மதனியின் குரல்.

"ஓ, மூதேவி, உனக்கென்ன தெரியும். அவன் விஷயத்தை வெளியிட்டு விட்டால் எவ்வித ஆபத்துக்கள். என் மானம் கௌரவம் என்னுகும். 15,000 ரூபாய் கையாடியதை உலகம் அறிந்தால் என் அந்தஸ்துக்கு என்ன சம்பவிக்கும்.'' இது அண்ணுவின் குரல்.

இதற்கு மேலும் அவனல் அங்கு நிற்க முடியவில்லை. வீட்டைக் கடந்து அவன் மனம் நோக்கிய இடத்திற்கு நடந்தான். தெருவில் நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. வானத்தில் மின்னிய தாரகை கண்ணைச் சிமிட்டியது.

* * *

கடையில் ஆண்டறுதிக் கணக்குக் கட்டி வந்தார்கள். சண்முகம் பிள்ளை எவ்வளவு சாமர்த்தி

யமாய் மறைத்து வைத்தாலும் 15,000 ரூபாய் பள்ளம் விழுவதை பங்காளி கண்டு பிடித்து விட்டார். சண்முகம் பிள்ளைக்குத் திடீரென புது யோசனை ஒன்று தோன்றிற்று.

"ஒரு வாரமாக என் தம்பி வீட்டிற்கும் வரவில்லை. தலைமறைவாகத் திரிகிருன், இப்பொழுது பணம் குறைவதையும் பார்த்தால்........."

விஷயம் போலீசுக்குத் தகவல் கொடுக்கப் பட்டது.

கொஞ்ச நாட்களில் அநியாயமாகத் திருநாவுக்கரசு சிறையிலடைக்கப் பட்டான். சண்முகம் பிள்ளையின் மனம் நிம்மதி யடைந்தது. என்ன கொடுமை!

மன்னர் முடிசூட்டு விழாவிற்காக கைதிகளை விடுதலை செய்தார்கள். ஆனால் திருநாவுக்கரசு தனது வீட்டுப் பக்கம் செல்லவில்லை.

சண்முகம் பிள்ளை குரூர மனப்பான்மையை சகிக்க இயலாத அவர் மனைவி தற்கொலை செய்து கொண்டாள்.

இப்பெரிய அதிர்ச்சியினுல் சண்முகம் பிள்ளை முற்றிலும் மாறி விட்டார். தம்பிக்கு இழைத்த கொடுமையை நினைந்து நினைந்து உள்ள முருகினுர். பல இடங்களிலும் தம்பியைத் தேடுவதற்கான முயற்சிகள் செய்தார். ஒன்றும் பயன்பட வில்லை. மனச்சாந்தியை நாடி ஊர் ஊராக ஸ்தல யாத்திரை செய்து வந்தார். சுற்றுப் பிரயாணத்தில் தம்பியின் நினைவைச் சற்று மறந்திருந்தார். இன்று அந்த பைராகி அந் நினைவை எழுப்பி விடவே துக்கம் பொங்கி வந்தது. யோசித்து யோசித்து அவர் சிந்தையே கலங்கி விடும் போலிருந்தது. இந்த ஜென்மத்தில் மறுபடியும் தம்பியைக் காண முடியுமா என்று ஏங்கிப் போய் உட்கார்ந்திருந்தார். இப்படி எவ்வளவு நேரம் இருந்தாரோ தெரியாது.

3

வானத்துச் சந்திரன் இப்பொழுது தலைக்கு நேராக வந்து விட்டான். மின் வெட்டுப் போல் ஒரு யோசனை தோன்றியது. தம்பி உயிருடனிருக்கிருனு? எங்கிருக்கிருன். அவனைப் பார்க்க முடியுமா? இந்த விபரங்களெல்லாம் அந்த பைராகியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா வென்று சிந்தித்தார். அந்தக் கணமே எழுந்து உள் பக்கம் வந்தார். கோவிலில் கட்டியிருந்த யானையின் சீறல் எதிரொலித்தது. கும்பல்கள் கலைந்து கொண்டிருந்தன.

வாசல் பக்கம் வந்தார். பைராகி முன்னர் இருந்த இடத்திலேயே இருந்தார். பெரியவர் அவரை அணுகி, "பைராகியாரே, என் தம்பியின் முழு விபரம் பூராவும் கூற முடியுமா?" என்ருர்.

"முடியும். தங்கள் கையைப் பார்த்தால் கூற முடியும்." சண்முகம் பிள்ளை கையை நீட்டினுர்.

"உங்கள் தம்பி உயிருடன் தானிருக்கிருர். ஆனுல் நீங்கள் பார்க்க முடியாது."

"ஏன் முடியாது"

பைராகி பதில் பேச வில்லை. அங்கே வந்த ஒரு பக்தர் 'ஆண்டவனே' என்று கூறி பைராகியின் பாதத்தைத் தொட்டு நமஸ்காரம் செய்தார்.

கரத்திலிருந்த மயில் தோகையால் ஆசீர்வதித்தார். அப்போது லுங்கி நழுவியது. பைராகியின் கையில் 'திருநாவுக்கரசு' என்று எழுதிய, தைக் கண்டு, தம்பி எனக் கதறி அவரைக் கட்டிக் கொண்டார். சில நிமிஷங்கள் மௌனம் நிலவியது.

"தம்பி நீ ஏன் இந்த வேஷத்திற்குள்ளானாய்" என்றார் சண்முகம் பிள்ளை.

"சிறையிலிருந்து விடுதலையானதும் எனக்கு ஒருவரையுமே பார்க்கப் பிடிக்க வில்லை. மேலும் இனிமேல் என்னை நம்பி யார் வேலை கொடுப்பார்கள். இப்பரந்த உலகில் எவ்வாறு பிழைப்பது என்று ஒன்றும் புரியாமல் தவித்தேன். கடைசியில் தற்கொலை புரிந்து கொள்ளலாமாவென்று யோசித்துக் கொண்டிருக்கையில் சாலையோரமாக ஏதோ கும்பல் போவது தெரிந்தது. அவர்களை நெருங்கி விசாரித்தேன். அவர்கள் முஸ்லீம் யாத்ரீகள் என்றும் நாகூர் செல்லுகிறோம் என்றும் கூறினார்கள். என்னையும் அவர்களுடன் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினேன். மதம் மாறி விட்டால் அவர்களுடன் சேர்த்துக் கொள்வதாகக் கூறினார்கள். அந்த இடத்திலேயே இந்த உருக் கொண்டு விட்டேன்" என்று கூறி முடித்தான்.

தம்பியின் பரிதாபத்தை நினைத்து மனம் வெதும்பினார். "தம்பி என்னோடு ஊருக்கு வந்து விடு" என்று கெஞ்சும் பாவனையில் இரக்கம் தோன்றக் கூறினார்.

"எங்கள் கோஷ்டித் தலைவரிடம் கேட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிய பைராகி கும்பலுக்குள் மின்வெட்டுப் போல் மறைந்து விட்டார்.

'தம்பி, தம்பி' என்று கதறிக் கொண்டே பைராகியைப் பின் தொடர்ந்தார்.

தம்பி போனவன் போனவன் தான். சண்முகம் பிள்ளை அன்று முழுதும் மசூதியைச்சுற்றிச் சுற்றி வந்து, "என் தம்பியைக் கண்டீர்களா? என் தம்பியைக் கண்டீர்களா?" என்று ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டே வந்தார். யார் பதில் சொல்வார்கள்.

யாத்ரிக கோஷ்டிதான் ஆக்ராவுக்குப் புறப்பட்டு விட்டதே!

கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

எல்லாம் சரிதான், நெல் விற்பனை எளிதாக நடந்தது; ஆட்கள் அன்புடன் வேலை செய்தனர். பொது நலமும், சிவபக்தியும் புகழ்பெற நடந்தன. ஆனால் இராமனாதன் மனத்தில் மட்டும் கலைக் கோயிலின் கனவே குடி கொண்டிருந்தது; பூசலார் நாயனார் போலும், வாயிலார் போலும் அவன் உள்ளத்தில் கனவுக் கோயிலை எழுப்பினான்.

ஆனால் அக்கோயிலின் வழியில் எத்தனையோ பயங்கரமான இடர்களும் முளைக்கக் கண்டான். கலையுலகம் என்றால் அதில் எத்தனை செருக்கு, வஞ்சப் பகட்டு, பொய், களவு, குடி, விபசாரம் — இவை படர்ந்திருக்கின்றன! நாடக அரங்கம் நவரஸ விநோதக் காட்சிகளுடனே தான் மின்னுகிறது; ஆனால் திரைக்குப் பின்னால்? வேடங் கட்டும் அறையை நோக்கினால்? நாடகம் முடிந்ததும் நடிகர் வாழ்வைப் பார்த்தால்? மேடையேறிய நளாயணிபாய், மேடையை விட்டிறங்கியதும்? தளுக்காக இரண்டு மணி நேரம் பாடிச் சென்ற பிறகு பாடக பாடகி வாழ்வைப் பார்த்தால்? கலைக்கே உயிர் தரும் சில ஏழைப் புலவர் வறுமையை நோக்கினால்! ஆ! பயங்கரக் காட்சிகள் — ஒரு புறம் குடி, சூது, விபசாரம், மோசம். மறுபுறம் வறுமை, ஏமாற்றத்தால் உடைந்த நெஞ்சம் இருபுறமும் பிணி, துயர் கவலை! கலையுலகம் எவ்வளவோ திருந்த வேண்டும். கலை புனிதமாக வேண்டும். கலை கண், காதுகளுக்கு மட்டுமின்றி உள்ளுயிர்க்கும் இன்ப மளிக்க வேண்டும். கலை கண் மனத்தை மயக்கிக் கொலை செய்யாமல் வாழ்விற்குத் தெய்வப் பொலிவு தரவேண்டும். கலை என்பது பாட்டு, கவிதை, கூத்து, நாடகம், சிற்பம், சித்திரம் இவற்றுடன் நிற்பதில்லை. மனித வாழ்வெல்லாம் கலைதான். அழகின் விளக்கமெல்லாம் கலைதான். தெம்மாங்கு பாடி உழவர் மண்ணில் பாடு படுவதும் கலைதான். பரமனைப் பாடி பக்தி செய்வதும் கலைதான். அரங்கில் ஆடிப்

பாடுவதும் கலைதான். கலைக் கோயில் மனித வாழ்வையே அழகின்பக் கலையாக்க வேண்டும் என்பது தமிழ் மணியின் கனவு. குரல், விரல் பேனா, மூளை, உள்ளம் எல்லாம் அதே கனவு கண்டன. தமிழ்மணி காலை மாலை, அனுட்டானங்கள் முடிந்ததும் தனியறையில் நடராஜ படத்தின் முன் அமர்ந்து நீண்ட கலைக்கனவில் ஆழ்வான். அப் போது அவன் உள்ளத்தில் ஆயி ரம் கலை வடிவங்கள் தோன்றும். அவற்றிடையேதான் சிறு வயதிற் கண்ட விவேகானந்தரின் உருவம் கம்பீரமாக நிற்கும். பாரத ஞானக் கலையால் விவேகானந்தர் வெண்ணுலகை வென்றது போல் தமிழ்க் கலையால் உலகை வெல்ல வேண்டும் என்ற உறுதி பிறக்கும். அடுத்த விநாடியில் எனக்கு அத்த கைய பெருஞ்செயலுக்குத் தகுதி யுண்டா? என்று சித்தியுண்டா? என்று கேள்வி எழும். உடனே தகுதி பெறுவேன்—என்ற துணிவு பிறக்கும்.

இப்போது இராமனாதன் தமி ழில் நன்ருக எழுதுவான், படிப் பான் பேசுவான்; இனிமையாகப் பாடுவான். சிறந்த காவியங்க ளுக்கு விரிவுரை நடத்துவான்— இவ்வளவே அவன் திறமை. இது போதாது?

(1) ஆங்கிலம் இப்போது சுமா ராகத் தெரியும். அதிற் புலமை பெற வேண்டும்.

(2) வட இந்தியருடன் பழக இந்தி கற்க வேண்டும்; அத்து டன் இந்துஸ்தான் இசைக்கலையும் பயில வேண்டும்.

(3) சிற்பம், சித்திரம், கட்டிடம் தற்கால யந்திரக் கலைகள் இவற் றின் நுட்பத்தை அறிய வேண்டும்

(4) மனித வாழ்விற்கு இன்றிய மையாத கைத்தொழில்களின் நுட் பத்தை நேராகக் கண்டறிய வேண்டும். ஏனெனில் வெறும் இசையோ இலக்கியமோ போதாது; சமுதாயத்திற்குப் பய னுள்ள தொழில்கள் பல அறிய வேண்டும். அப்போதே புலவர் வறுமை நீங்கும்.

(5) பல நாடுகளைச் சுற்றி ஆங் காங்கு வளரும் கலை நயங்களை அறிந்து தமிழைச் செழிப்புறுத்தல்

(6) கலையுலகிற் படர்ந்த குறை களையும் மாசுகளையும் நீக்கிக் கலை யில் அருளொளி பாய்ச்சல். அதற்கு வேண்டிய செந்நெறிக ளைத் தானே பயின்று தன் வாழ்வைத் திருத்தமாயமைத்தல். இந்த ஆறு திட்டங்களை வகுத்துக் கொண்டு தமிழ்மணி தன் கனவு நிறைவேறும் முயற்சிகளைச் செய் தான். இம் முயற்சியினிடையே சில அரிய நண்பர் கிடைத்தனர். பல பொறாமைப் புல்லரும் சூழ்ந்து சதி செய்தனர். இச்சதியி னிடையே டாக்டர் சிங்கமும் பராங்குசமும் நீண்ட நாள் தேடிய ஒரு துப்புக் கிடைத்தது. அதை முதலிற் கேளுங்கள்.

தமிழ்மணி இரங்கூனிலிருந்த சிறந்த அறிஞருடன் நட்புக் கொண்டான்; அவருள் டாக்டர் சிங்கத்தை அவன் அண்ணலாக வும் அன்புடைய தோழனாகவும் கருதினான். அவருக்கு அடுத்த படி பராங்குசம்; பராங்குசம் ஆங்கிலத்தில் பெரும் புலவர்; நல் லொழுக்கமும் நேர்மையும், தெய்வ பக்தியுங் கொண்டவர். இவர்களுடன் வா. வெ. சு ஐய ரின் உயிர்த்தோழரான பாரிஸ்டர் வேலாயுதம், தமிழ் மணியின் சிறந்த நண்பரானார். அவர் திரு முறை நூல்களைத் தமிழ்மணி

பாடக் கேட்டு உள்ளுருகினர். உண்மைக் கிறிஸ்துவரான எட்வேட், ஞானமணி, தூய முஸ்லிமான பஹதூர்ஷா, அன்புள்ள பார்ஸி முதலாளி ஸேத்ஜு, அந்த, ஆண்மை நிரம்பிய ஹரிஜன நண்பர் மெய்விளம்பி, இரங்கூன் தூதன் ஆசிரியர் மீனுக்ஷி சுந்தரம் — ஆகியோர் அடிக்கடி சிங்கம் மாளிகையில் கூடி இலக்கிய விருந்துண்பார். இவர்களிடையே வீண் அரட்டையோ ஊர்வம்போ இராது.

உயர்ந்த கலைப் பேச்சே இவர்கள் பொழுது போக்கு; எல்லாரும் சிறந்த அறிஞர்; பலநூல்களைக் கற்று உலகப் புலவர் உள்ளத்தில் ஊறிப் பண்பட்ட மேதாவிகள். இவர்களுக்கு ஏராளமான நண்பருண்டு. இரங்கூனில் கலையறிந்த தமிழரும், பர்மியரும் இஸ்லாமியரும் இவர்களுடன் அளவளாவுவார்கள். தமிழ், ஆங்கிலம், ஹிந்துஸ்தானி ஆகிய மூன்று மொழிகளில் பேச்சு நடக்கும். நாளடைவில் தமிழ்மணி ஹிந்துஸ்தானியையும் கற்றுக் கொண்டான்; பர்மிய பாஷையும் சிறிது கற்ருன். ஆங்கிலத்தில் இடைவிடா முயற்சியால் புலமை பெற்ருன்.

எல்லாரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தினர்; பெயர் சும்மா சங்கந்தான்; முன்னே கலை. புலவர் — என்று எவ்விதமான சேர்ப்புமில்லை. ஏனெனில் அவர்கள் கலைப் பேச்சுடன் நிற்கவில்லை; உலக விவகாரங்கள், நாட்டு நடப்புகள் பெரியார் வரலாறுகள் இசையரங்கம் சிலசமயம் நாடகங்கள், விருந்துகள் எல்லாம் நடக்கும்.

இச்சங்க நண்பருள் சாதிமத வேறுபாடில்லை; தீண்டாமை பாராமை என்பதில்லை. கல்விச் செருக்கில்லை, பொருமைப் பேயும் அசூயைப் பித்தமும், அகம்பாவ நாடகமும், நாத்திகத் திமிருமில்லை. இவர்கள் சுமார் இருபது பேர். வெவ்வேறு மதத்தினர் இனத்தினராயினும் எல்லாரும் தமிழ் அறிந்தவர்கள்; ஆதலால் இவர்கள் தம்மைத் தமிழர் என்றே அழைத்துக் கொண்டனர்.

ஐயர், ஐயங்கார், பிள்ளை, முதலி, செட்டியார்,சாகெபு, நாயுடு,ஜான், ஜிம்மி, எல்லாரும் தமிழரே. தமிழறிந்த சில பர்மியர் கூட இவர்களுடன் ஒட்டுறவாகப் பழகினுர்கள். இவர்கள் எந்தச் சமயத்தையும் வெறுப்பதில்லை; மதவெறியும் கொள்வதில்லை. கடவுள் ஒருவர்; அவரை தியானத்தாலும் கானத்தாலும் வணங்குதல்; எல்லாரிடமும் அன்பாயிருத்தல், இயன்ற பொது நலஞ் செய்தல், சுயநலந் தவிர்த்தல், பிறர் புண்படாமல் வாய்மையே பேசுதல், தினம் மூன்று மணி நேரமாவது நல்ல நூல்களைக் கற்றல், கற்றதை அவரவர் முறைப்படி சங்கத்தில் பேசுதல், பயனுள்ள விவர்தம் புரிதல், கம்பன் ஷேக்ஸ்பியர், மில்தன், பெரிய புராணம் போன்ற நூல்களைப் படித்தல், தமிழின் அருமையை பிறமொழி அறிஞருக்கு ஆங்கிலத்திலும் இந்தியிலும் விளக்கல், இவையே பொதுவாக இவர்கள் செய்த பணி; வாரம் ஒருமுறை சங்கத்தில் தமிழ்மணியின் இசையரங்கு நடக்கும்; நண்பருள் பிடில் மிருதங்கம் வாசிப்பவர் இருந்தமையால் கச்சேரி தடையில்லாமல் சுதந்தரமாக நடந்து வந்தது. தமிழிசை கேட்க ஏராளமான நண்பர் வந்தனர்.

தமிழ்மணி சிறந்த அருட்பாடல்களையே பாடி வந்தான். டாக்டர் சிங்கத்தின் வீடுதான் சங்க மாளிகை. டாக்டர் இப்போது

பிரமசாரிதான். ஒரு கவலையில்லை அந்த ஒரு கவலைகூட அவருக்கில்லை அவர் உலக வாழ்வை ஆழம் பார்த்து மனம் வெறுத்தவர்; தஞ்சாவூரில் அவர் மனைவியுடன் வாழ்ந்தவர்; அந்த அம்மாள் இவருக்கு நேர் எதிரிடை; அவளுக்கு நொடிக்கொரு பிணக்கும் மணிக்கொரு பிணியும் வரும். பேய் பிசாசு சங்கை என்று வேறே அவள் பிதற்றுவாள். அத்துடன் நிற்கமாட்டாள்; யாருடனாவது பித்தங் கொண்டு சண்டை போடுவாள்; தன் பக்கம் கூச்சலிட கும்பகோணத்திற்குப் போய் கடிதம் எழுதித் தாயாரையும் வரவழைப்பாள். அந்த உத்தமியை வினை கொண்டு போய்விட்டது; பிறகு டாக்டர் சிங்கம் கலையைத்தான் வாழ்வின் துணையாகக் கொண்டார். வைத்தியத்தால் ஏழைகளுக்கு உதவுவதைத் தன் இன்பமாகக் கொண்டார். ஆதலால் அவர் தமிழ் மணியைத் தன் சகோதரனாகவே பாவித்தார். நண்பரையெல்லாம் முகமலர்ந்து உபசரித்தார். விருந்துச் செலவெல்லாம் பெரும்பாலும் அவரே செய்வார். நண்பரும் சாமான்கள் தருவதுண்டு. சமயல் மட்டும் எல்லாரும் சேர்ந்தே பங்கு கொண்டு செய்வார்கள். இச்சங்கத்தார் யாரும் ஊன் மது சுருட்டு புகையிலை காப்பி, டீ — முதலியவற்றைத் தீண்டுவதில்லை; சாப்பாடெல்லாம் சுத்த சைவமே. கந்தன் சமைத்தாலும் காதர் மியான் சமைத்தாலும் சுத்த சைவமே. சமயல் முடிந்ததும் எல்லாரும் நன்றாக நீராடி வந்து, புதிய ஆடைகள் அணிந்து, நிலா முற்றத்தில் அமர்ந்து பதினைந்து நிமிஷம் தியானித்து, பிறகு பொதுப் பொருளான இறைவன் புகழ்பாடி உணவு கொள்வார்கள். சாப்பாடானதும் சிங்கம் தனது கிராமபோனை (இசைப்பெட்டி) துடைத்து, புதிய தட்டுகள் வைப்பதுண்டு. பிறகு அந்த நாளில் குறித்த இலக்கியத்தைப் படிப்பார்கள்; தமிழானால் தமிழ் மணியே விளக்குவான். ஆங்கிலமானால் பராங்குசம் முதலியோர் விளக்குவதுண்டு; நாடக நூலானால் நண்பரே நடிகராவார்; பொழுது போவதே தெரியாது. இந்த மாதிரியே இவர்கள் கம்பன், சேக்கிழார், ஆழ்வார்கள், வள்ளுவர், தாயுமானார், அருட்பா, தேவாரம், திருவாசகம், கீதை, பாரதம், குரான், பைபிள், ஷேக்ஸ்பியர், மில்தன், ஹரிடன், ஸ்காட், ஷெல்லி, பைரன், ஓமர், தாந்தே, காளிதாஸன், கெத்தே இன்னும் புதிய பல நூல்களை ஆராய்ந்து வந்தார்கள்.

இரங்கூன் தூதன் ஆசிரியரும் இச்சங்கத்தவரே; வேறு பத்திராதிபரும் வருவார்கள். ஆனால் இச்சங்க நிகழ்ச்சிகள் எவையும், பெயர் கூடப் பத்திரிகையில் வராமல் சிங்கம் தடுத்து வந்தார். பத்திரிகை விளம்பரமும், நிருபர் சரடுகளும் அவருக்குப் பிடிக்கவில்லை. நண்பருள் அடக்கமாகவே கலைத்தொண்டு நடக்கட்டும்; நாம் பேர் புகழுக்குச் சங்கம் கூடவில்லை என்பார் சிங்கம். ஆனால் தமிழ்மணி அன்றாடம் நடக்கும் கலையாராய்ச்சியை மட்டும் கட்டுரையாக எழுதி சங்கத்தின் பெயர் போடாமல் தூதனில் வாரம் ஒரு பக்கம் எழுதி வந்தான். அது பர்மாவில் தமிழுணர்ச்சியைப் பரப்பியது.

இச்சங்கம் வெறும் இலக்கிய ஆராய்ச்சியுடன் நிற்கவில்லை. ஸயன்ஸ் விஷயங்களும், நவீன சாத்திர விஷயங்களும் அடிக்கடி நண்பர் ஆராய்ச்சியில் கலக்கும். அரசியல் ஆராய்ச்சியிலும் நண்பர் கருத்தூன்றுவர். நமது நாட்டின்

அடிமை நிலையைக் கனவிலும் மறக்க முடியுமா?

இச்சமயத்திலே தான் நண்பர் வா. வெ. சு ஐயர் இலண்டனில் இந்திய விடுதியில் சாவர்காருடன் சுதந்தரச் சங்கம் நாட்டினூர்.

அவரும் சாவர்காரும் எழுதிய 1857-ம் ஆண்டு சுதந்திரப் போர் நூல் இரகசியமாக அச்சேறி இந்தியாவிற்கும் உலகின் பல பாகங்களுக்கும் மிட்டாய்ப் பெட்டிகளிற் சென்றன. சிங்கத்திற்கும் எப்படியோ இரண்டு பிரதிகள் கிடைத்தன- அத்துடன் பல துண்டுப் பிரசுரங்களும் வந்தன. மாதம் ஒரு கடிதம் வரும். அது ஒற்றர் தணிக்கை செய்தே வரும். ஆயினும் அதில் உள்ள பாஷை நண்பர் சிங்கத்திற்கு மட்டுமே தெரியும். விஷயத்தை அறிந்து கொண்டு, நண்பருக்குச் சொன்தும் எல்லாம் தீக்கிரையாகும். இந்திய சுதந்திரப் போரை மட்டும் இராமாயணம் போல் எல்லாரும் அடிக்கடிப் படித்து உணர்ச்சி கொள்வதுண்டு. இலண்டனில் நடக்கும் திருவிளையாடல்கள், வங்காளத்தில் நடக்கும் கிளர்ச்சிகள், சென்னை, பம்பாய், பஞ்சாப் கிளர்ச்சிகள் எல்லாம் பத்திரிகை வாயிலாகப் படித்து நண்பர் விவாதிப்பார்கள். இந்தியா, வந்தேமாதரம், கேசரி, சுதேசமித்திரன், இந்து முதலிய பத்திரிகைகளை அவர்கள் ஒரு வரி விடாமல் படிப்பார்கள்.

தாய் நாடு விடுதலை பெற வேண்டும். மற்ற நாடுகளைப் போல நாமும் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்பதில் அனைவருக்கும் ஒரே உறுதிதான். ஆனுல் விடுதலை அடையும் வழியைப் பற்றியே வேற்றுமை கிளரும். சிங்கம் கலை யொற்றுமையில் நம்பிக்கை கொண்டவர். மேதாவிகளை உண்டாக்கி உலகெல்லாம் அனுப்பி நாட்டின் மதிப்பை உயர்த்துங்கள். உலகின் கவனத்தை இந்தியாவின் பால் இழுங்கள் என்பார். தமிழ் மணி அதே உள்ளமுடையவன். ஒரு சுவாமி விவேகானந்தர் ஒரே நாளில் உலகம் இந்தியாவை மதிக்கச் செய்தார். அத்தகைய தீரர் முன்வந்து உலகரங்கில் விளங்கினுல் நாட்டின் மதிப்பு வளரும் என்பான் மணி. இதெல்லாம் எந்த மூலையப்பா குண்டு துப்பாக்கி தான் வழி என்பர் சிலர். நண்பரே ஐரோப்பியரின் பீரங்கி முன் நமது மாப்பிள்ளை வெடிகள் எந்த மூலைக்கு. அந்தப் பேச்சே கூடாது. பலாத்காரம் பயனில்லை. சட்டத்திற்குட் பட்ட கிளர்ச்சியே வழி என்பர் சிலர். அச்சிலும் மேடையிலும் கதறுவதே வழி என்பர் சிலர் 144- போட்டால் அதெல்லாம் கப்சுப் ஆய்விடு மப்பா.

முதலில் நம்மவர் ஒற்றுமையாயிருப்பதே வழி. நமக்குள் எத்தனை சாதி மதப் பிரிவினைகளும் கலகங்களும் இருக்கின்றன. இந்தச் சள்ளைகள் ஒழிந்து எல்லாரும் ஒரு குலமாக வாழ வேண்டும். நமது நண்பர் சங்கம் போல நாடெல்லாம் ஒரே சங்கமாக வேண்டும். அந்த ஐக்கிய பலத்தைக் கொண்டு சட்ட நியாயமான உரிமைக்குப் போராடினுல் பலிக்கும் என்பர் சிலர். சுருக்கமாக சிலர் ஐயர் கட்சி, சிலர் திலகர் — சிதம்பரம் கட்சி— சிலர் கோகலே—மேதா கட்சி, சிலர் தாகூர்—கட்சு, சிலர் இந்த வம்பு நமக்கேனப்பா— இருக்கு மட்டும் சிவா நாராயணு என்று பொழுதைப் போக்கிச் செல்வோம் என்னும் கட்சி. வெடிக்காய் வீரர் இங்கே யாருமில்லை. எல்லாரும் கலை—வீரரே. விஷயம் இப்படி

யானுலும் இவர்களுள் மனஸ் தாபம் கிடையாது. ஏனெனில் இவர்கள் தேசாபிமானம் பேச்சுடன் சரி, காரியம் படிப்பு, விருந்து — இரண்டில் ஐக்கியமாகவே நடக்கும். சுவையான சாப்பாடானல் கைக்கும் வாய்க்கும் பிடித்தந்தானே. துபோல் சுவையான கலை விருந்திலும் எல்லார் மனமும் ஒன்று தான்.

தமிழ்மணி பாடினல் உலகமே தள்ளி நிற்கும். எல்லாரும் இசையின்பத்தில் சொக்கி நிற்பார்கள்.

தமிழ்மணியைப் பல ஊர்களில் பாடவும், பேசவும் நண்பர் அழைப்பதுண்டு. "அதற்கேற்ற பக்குவம் எனக்கில்லை.'' என்று மணி மறுப்பான். தான் கொண்ட கலைத் திட்டம் நிறை வேறும் மட்டும் அடக்க மாயிருக்க வேண்டுமென்பது அவன் உறுதி. ஆனல் அடக்கம் நடக்கவில்லை.

27. இசைத் தட்டு

இன்று நண்பர் சங்கம்; டாக்டர் சிங்கம் உற்சாகத்தின் உச்சத்தில் இருக்கிருர். நிறைமதி முழு நிலா வீசுகிறது; சிங்க மாளிகை உப்பரிகை வெள்ளியங்கிரி போலப் பொலிகிறது. நண்பர் குதூகலமாகச் சாப்பாடு தயாரித்தனர்.

சம்பா அரிசிச் சாதம் மல்லிகைப் பூப்போலிருக்கிறது; வெண்டை— வெங்காய்— முருங்கை சாம்பார் ஊரைத் தூக்கியடிக்கிறது; அந்த உருளைக்கிழங்குப் பொடிமாசும் சேனைக்கிழங்கு உப்பேரியும், கத்திரிக்காய் பஜ்ஜியும், நெய்யில் பொரித்து பூரணச் சந்திரன் போல விளங்கும் அப்பளமும், பாகக்காயும், பிஞ்சு வெண்டைக் காயும், புடலங்காயும், மொச்சையும் போட்ட கூட்டு, கொத்தமல்லியும் பச்சை மிளகாயும், கத்தரிக்காயும் சேர்ந்த கோசும்பரி, தேங்காய்ப் போளி— அடடாட! நினைத்தாலே நாக்கு ஊறுகிறதே! கண்டால் கேட்க வேண்டுமா— தின்ருல்! அதுவும் அன்புள்ள நண்பருடன் நிலா மாடத்தில் உண்டால்— ஆனந்தந் தான்! அன்று எல்லாருக்கும் அரும் பசி; நன்ருகச் சாப்பிட்டு ஹேவ் என்று திருப்தியாக ரசீது கொடுத்து விட்டார்கள். சாப்பாடானதும் சந்தனம் பூசிக் கொண்டு வாய் மணக்கத் தளிர் வெற்றிலையும் வாசனைப் பாக்கும் போட்டுக் கொண்டு "ஹா ஹப் பாட ஹேவ் நாராயண'' என்று நிலாத் தென்றலில் இப்படியும் அப்படியும் புரண்டு உடம்பிற்குச் சுகமேற்றினர். இச்சமயம் டாக்டர் சிங்கம் H. M. V. கிராமப் போனைத் திருகி விட்டு இரண்டு நல்லிசைத் தட்டுகளை வைத்தார்.

பிறகு ஒரு தட்டை வைத்து விட்டுத் தமிழ்மணியைப் பார்த்து முறுவலித்தார். அந்தத் தட்டில் எழுந்த இன்னிசையமுதம் நண்பர் உள்ளத்தைக் கொண்டது. "நாத விந்து கலாதி'' என்ற திருப்புகழ், "மாசில் வீணையும்'' என்ற தேவாரம் இவையே பாட்டு. இப்பாட்டுகள் கேட்டுக் கேட்டுப் புளித்தவையே. ஆனல் அன்று இவை புதிய பாடல் போல் ஒலித்தன; இன்னெருதரம் இன்னெரு தரம் என்று நான்கு தடவை தட்டை வைத்துக் கேட்டனர். பிறகு அடே இது நமது தமிழ் மணி குரல் போலிருக்கிறதே என்ருர் பராங்குசம். "சாக்ஷாத் தமிழ் மணிதான்'' என்று சிங்கம் குதித்தெழுந்தார். ஆம் அது தமிழ்மணி, முன்னே கல்கத்தாவில் பாடிய பாட்டுத்தான்.

(தொடரும்)

புத்தக ஆராய்ச்சி

[பாசரசு: மாதம் ஒரு புத்தகம். பதிப்பாசிரியர்கள்: எம். எஸ். பாசு. ஸ்ரீமதி பாசு. பிரசுரம்: பாசரசு காரியாலயம். பெரம்பூர், சென்னை. விலை அணு 0—12—0]

'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ?' என்று ஒரு புலவர் பாடினர். ஆம், பாசரசு மாதம் ஒரு புத்தகத்தின் சிறப்பே தனி. நவயுகத்து எழுத்தாளர் பிரதிநிதிகள் எல்லோருமே எழுதி யிருக்கிறார்கள், எழுதி வருவார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அழகான தோற்றம், அருமையான விஷயங்கள். இந்த இலக்கிய தம்பதிகள் முயற்சி வெற்றி யளிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

●

[உதயம்: பதிப்பாசிரியர்: எஸ். ஆர். சாரங்கன். பிரசுரம்: சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ், ராஜ வீதி, கோயமுத்தூர். விலை அணு 0—4—0]

உதயத்தின் முதல் புத்தகத்தைப் பார்த்தாலே, இது ஒரு அருமையான உதயம் என்று எண்ணத் தோன்றுகிறது. கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எல்லாம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. உற்சாகம் மிக்க ஸ்ரீ சாரங்கன் உதயத்தைத் தேஜோமயமாக்கி விடுவார் என்று எதிர் பார்க்கலாம்.

●

[கலைவாணி: மாதப் பத்திரிகை. ஆசிரியர்: ஸ்ரீ ப. நீலகண்டன். கலைவாணி, புதுக்கோட்டை. விலை அணு 0—3—0]

தமிழ் முன்னேற்றத்தையும், தமிழர் முன்னேற்றத்தையும் தாங்கி வெளி வந்திருக்கிறாள் கலைவாணி. அன்னையை அழகாக அலங்கரிக்க அரிய சேவை புரிந்திருக்கிறார் ஆசிரியர் நீலகண்டன். கலைவாணிக்குக் கலைவாணர்கள் பரிபூரண ஆதரவு தருவார்கள் என நம்புகிறோம்.

●

[கதைக் கோடி: ஆசிய ஜோதிப் பிரசுரம், மைலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0]

கதைகள் நாளுக்கு நாள் வெள்ளம் போல் பெருகி வரும் இந்நாளில் 'கதைக் கொடி'யிலிருந்தும் கதை மலர்கள் பூத்திருக்கின்றன. சிறந்த அறிஞர்களான ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை, ஸ்ரீ கோதண்டராமன் முதலியவர்கள் அபூர்வமான கதைகளை இம்மலருக்கு அளித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் ஆதரிப்பார்களாக.

●

[கம்பன் மலர்: சென்னைக் கம்பர் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0. உயரிய பதிப்பு ரூ 2—8—0]

கம்பர் தந்த காட்சிகளை அனுபவிக்க வேணும் என்ற எண்ணம் வளர்ந்தோங்கி வருகிறது. கவிதைப் பண்பின் நுட்பத்தை அறிந்த டி. கே. சி, மற்றும் பண்டித மணியைப் போன்ற பேராசிரியர் உள்ளத்தில் உதித்த சுவையே கம்பன் மலராக வெளி வந்துள்ளது. நல்ல பயனுள்ள மலர்.

●

[புஷ்ப ஹாரம்: (நாவல்) ஆசிரியர்: ஜெயலட்சுமி ஸ்ரீனிவாசன். பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. விலை ரூ. 1—8—0]

ஸ்ரீமதி ஜெயலட்சுமி ஸ்ரீனிவாசன் அவர்களை இலக்கிய உலகு நன்கு அறியும். அற்புதமான பல கதைகளையும், கட்டுரைகளையும், வாழ்க்கைச் சித்திரங்களையும், நாவல்களையும் தமிழிலும், கன்னடத்திலும் இயற்றி அரிய பணி புரிந்து வருகின்றார். பத்துப் பனிரண்டு வருஷங்களுக்கு முன்பே, குழந்தைகளுக்கான அருமையான நூல் ஒன்றும், கிராம முன்னேற்றத்தைப் பற்றிய தெளிந்த ஆராய்ச்சிப் புத்தகமும் எழுதியிருக்கிறார். இப்படி இலக்கியத்தின் பல துறையிலும் பண்பட்ட அவரது கனிந்த இதயத்திலிருந்து 'புஷ்ப ஹாரம்' என்னும் ரசம் மிக்க நாவல் பூத்திருக்கின்றது.

எல்லாவித இனிய உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றார். அழகிய பதிப்பு. இலக்கிய ரசிகர்களுக்கு இன்பம் தரும் அருமையான நாவல் இது.

●

[நர்மதா: ஆசிரியர். வஸந்தன். பிரசுரம்: வஸந்தன், 40/F கெங்குரெட்டி ரோடு, எக்மோர். சென்னை. விற்பனை உரிமை: வி. சுப்ரமணியம், 'கல்கி' ஏஜண்ட், தெப்பக்குளம், திருச்சி. விலை ரூ. 2]

"வஸந்தன்" என்னும் அழகிய புனைப் பெயரிலே, இனிமையும், இங்கிதமும் குழைத்துக் கலந்து, அதி அற்புதமான எழிற் கதைகளை இயற்றி வரும் அன்பர் 'வஸந்தன்' அவர்கள் பதினாறு அழகிய கதைகளைக் கொண்ட மலரே "நர்மதா" என்னும் நாமதேயத்துடன் வெளி வந்திருக்கிறது. பதினாறு கதைகளும் ஆனந்தத்தை அளிக்கவல்ல சிரஞ்சீவிக் கதைகளே!

●

[காதற்கதை: பிரசுரம். ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. சென்னை. மொழி பெயர்ப்பு: க. நா. சுப்ரமணியம். விலை அணா எட்டு.]

இத்தாலிக் காதற் கதை, பிரசுராலயத்தாரின், சர்வதேசக் கதை மலரின் முதல் மலராக வெளி வந்திருக்கிறது. கதை எப்படி என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டுமா? பெயரே "காதற்கதை" ஆச்சே!

●

[தமிழர் கண்ட ஜவாஹர்: ஆசிரியர்: ரா. கிருஷ்ணசாமி. பிரசுரம். தமிழ்நாடு பிரசுரம் கம்பெனி, 2 ஏ, பூந்தமல்லி ஹைரோடு, பி. டி சென்னை. விலை அணா பத்து.]

இலக்கியப் பணி புரிந்து வரும் சிறந்த ஆசிரியர், "சாமி" எழுதி இருக்கிறார் என்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்? நேருவுடன் பழகிய தம் அனுபவத்தை ரசமாக எழுதி இருக்கிறார்.

மலர்மணம்

முகப்புப் படம் :

கவி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்.

கவிதைப் பண்பிலே கனிந்த தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இந்த இதழ் முகப்பை அலங்கரிக்கிறார்கள். தமிழையும் தமிழர் வாழ்வையும் கவி மலர்களால் அலங்கரிக்கும் நமது கவிஞர் "வசந்த"த்தின் வருகையை மன மகிழ்ந்து இந்த விதம் வாழ்த்தினார்கள் :

தேடாத கண்ணெல்லாம் தேடுமே
செந்தமிழைப் பாடாத வாயெல்லாம் பாடுமே.

ஆம், மனமாரக் கவிஞர் வாழ்த்திய படியே வசந்தம் தழைத்தோங்கி வருகிறது. **வசந்தம் வருஷ மலரின்** நறுமணம் நாடெங்கும் பரவியது. கடலுக்கப்பால் வசிக்கும் தமிழர்களும் வசந்த மலரை மிகமிகப் பாராட்டிப் புகழ்கிறார்கள். வர்ணச் சித்திரங்களின் பொலிவும், விஷயங்களின் அருமையும் என்ன வென்று சொல்வது என்றெல்லாம் வியந்து எழுதியிருக்கிறார்கள். அன்பர்கள் அனைவருக்கும் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த இதழ் "வசந்த"த்திலே மணம் மிக்க மலர்கள் பூத்திருக்கின்றன. வாழ்க்கைப் பாதை, பூப்போல மென்மை உடையதாக இருக்க வேண்டுமானால், சமூகம் பல வழிகளில் மாறுதல் பெற வேண்டும். அந்த வழியிலே ஒரு லக்ஷியக் கதை வரைந்திருக்கிறார் திரு. கோதண்டராமன் அவர்கள்.

உலகத்தின் பெரிய பெரிய தத்துவாசிரியர்கள், கவிகள் எல்லாருமே "சாந்தி"யை நாட அரும்பாடு படுகிறார்கள். எண்ணமெலாம் கலைக் கனவிலே மூழ்கி நிற்கும் இளம் கலைஞன் "வல்லிக் கண்ணன்" "சாந்தி" யின் அந்தரங்கத்தை அறிய ஒரு சிந்தனைச் சித்திரம் தீட்டியிருக்கிறார்.

ஆடுதல், பாடுதல், சித்திரம் முதலிய அருங் கலைகளிலே ஈடுபட்டு, இலக்கியப் பணி புரியும் திரு. அய்யாசாமி நாளெல்லாம் இன்பக் கவிதை எழுதிப் பொழுதைப் போக்குகிறவர். இங்கு ஒரு சாதுவின் மன நிலையை எப்படிப் படம் பிடித்திருக்கிறார் பாருங்கள்.

இலக்கியத்திலே கலைக் கடிதங்களுக்கு ஒரு மகோன்னத பீடமும் தனிச் சிறப்பும் உண்டு. அன்பர் எஸ். வி. எஸ் கலைக் கடிதம் அந்தச் சிறப்பை வகிக்கிறது.

வாழ்க்கைக்குச் சிரிப்பும் அவசியமானது தானே? நகைச் சுவை மணி திரு. கணபதி அவர்கள் சிரிப்புக் கடலையே காட்டுகிறார்கள். திரு. பர்னபாஸ் ஒரு வேடிக்கைச் சித்திரத்தைப் புனைந்திருக்கிறார்.

ஸ்ரீமதி கோமதி சுப்ரமணியத்தின் கதைக் கவர்ச்சியும், சொல்லழகும் தனியாகப் பாராட்டும் நயம் படைத்தது. இளம் பெண் எழுத்தாளர்களிலே அவருடைய கதைகள் சிகரமாக விளங்குகின்றன. ஸ்ரீமதி ஜெயலட்சுமி ஸ்ரீனிவாசன் ரொம்பவும் ரசமாக ஒரு இளம் பெண்ணின் இதய ஓட்டத்தை விவரிக்கிறார்.

— ஆசிரியர்.

The Fashionable
Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

THE VASANTHA DYEING WORKS,
118, Oppanakara Street
Coimbatore.
Phone No. 155. Estd., 1921.
Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheaprates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய
பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

வசந்தம்

சந்தா

வருஷத்திற்கு ரூ. 6—0—0
தனிப் பிரதி 0—8—0

வசந்தம்
4/12A திருச்சி ரோடு
கோயமுத்தூர்.

★

எஃகு தொழிலைச் சேர்ந்த வருங்கால வாலிபர்கள்

"இளைஞர்களுக்கு கல்வி புகட்டிச் சரியானபடி அப்பியஸிக்கச் செய்வதைக் காட்டிலும் எதுதான் பெரிய வெகுமதி? அல்லது வேறு மேம்பட்ட நன்மையை நம்நாட்டுக்குச் செய்ய வல்லோம்" "ஸிஸரோ"

நமது தொழில் நீடித்திருப்பதோடு மேன்மையடையச் செய்வதே நமது மேலதிகாரிகளின் முதல் பொறுப்பு.

கிரியாம்சையில் தேர்ச்சி பெற்ற மனிதர்கள் ஜாம்ஷெட்பூர் வாலிபர்களுக்கு ஏற்ற கல்வி புகட்டி வருவதால் வருங்கால இந்திய தொழிற்சேனை தொடர்ச்சியாய் வளர ஹேதுவாகிறது.

TATA STEEL

(டாடா எஃகு)

தி டாடா அயரன் அண்டு ஸ்டில் கம்பனி லிமிடெட்டால் வெளியிடப் பட்டது.

தலைமை விற்பனை இலாகா: 102 A, க்ளைவ் தெரு, கல்கத்தா.

GLUCONATE - D

வைடமின்-D உள்ள கேல்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள். சாக்லேட் பூசப்பட்டு ருசியாயிருக்கும்.

கேல்ஸியம் குறைவு, கர்ப காலம், பாலூட்டல், குழந்தைகள் எலும்புகள் பலப்படுத்த — சிறந்த மருந்து.

இது I. T. L. ப்ராடக்ட்

Government Industrial & Testing Laboratory

Malleswaram P. O., BANGALORE.

தி சென்ட்ரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ.	3,50,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ.	1,48,32,000
டிபாசிட்டுகள் 30-6-1943ல் இருந்தபடி	...	ரூ.	72,27,68,300

தலைமை ஆபீஸ்:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தர்பனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவ்தாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
விதல் தாஸ் கான்ஜி
நூர்முகமத் M. சினாய்
பர்புஜி தர்தாபர்ய் லாம்
தரம்ஷே முல்ராஜ் கார்ட்டேர்வ்
சர். ஆர்டிஷர் டேலால் Kt.,
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷார்ரியட்

லண்டன் ஏஜண்டுகள்:- மெஸர்ஸ், பார்க்லேஸ் பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ் மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

சுத்த தனி வசீகரம்

மைசூர் சந்தன சோப் உனக்கு உறுதியாக அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது. மிருதுவானது. கூச்சம் மிகுந்த சருமங்களிலும் உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப் பாக்டரி,
பெங்களூர்.

முப்பது ஆண்டுகளாகத் தினே தினே பெரும் புகழ் பெற்று வருவதும், பல கனதனவான்களால் நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கப் பட்டதுமான

A. P. ராமசாமி செட்டியாரின்

உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸில் மைசூர் உயர்தர எள்ளினுல் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் எங்களது சுத்தமான

உத்திரவாத நல்லெண்ணெய்யை

வாங்கி உபயோகியுங்கள்

ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

R. L. சுப்பிரமணிய செட்டி

புது மார்க்கெட்:- கோயமுத்தூர்

தயாரிக்குமிடம் :-

A. P. R. OIL MILLS,

FORT, COIMBATORE.

We all want the Victory
Our Men are Fighting for !

BACK THEM UP

BY

Giving Again

AND

Giving Generously

TO

H. E. The Governor's War Fund.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்
எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199795
சென்னை 600 008

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam